
உ

# வையாபுரிப் பள்ளு



T.18467

ள்மிகு.

தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

T18467

பழனி.

R004A02

2001

உ

முருகன் துணை

# வையாபுரிப் பள்ளு

ஆசிரியர்


## பழனிச்சமீன்

இம்முடிப்பட்டத்திலகிய

குமார விசையகிரி வேலச் சின்னோவையன்.



வெளியீடு

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

பழனி.

2001

அருள்மிகு. தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,
பழனி.

முதற்பதிப்பு : 1943

இரண்டாம் பதிப்பு : 1971
மூன்றாம் பதிப்பு : 1999
நான்காம் பதிப்பு : 2001

விலை ரூ.

மாணிக்கம் அச்சகம்,
18, சாலை விநாயகர் ரோடு
தருமபுரி – 636 701.
தொலைபேசி எண் : 60822.

# பதிப்புரை

வையாபுரிப்பள்ளு சுமார் முன்னூறு ஆண்டுகட்கு முன்னர் இயற்றப்பட்டது. இதன் ஆசிரியர் பழனி சமீன் இம்முடிப் பட்டத்திலங்கிய குமார விசையகிரி வேலச் சின்னோவையன் ஆவார். அரச பரம்பரையைச் சார்ந்த அவர் நிறைந்த கடவுட் பக்தியும், எளிய மக்கள்பால் கனிவு கொள்ளும் அன்பும் கொண்டு விளங்கிய பண்புடையவர் ஆவார். இந்நூல் முருகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகப் பெற்றிருப்பினும், பள்ளர் களின் எளிய வாழ்க்கையின் இயற்கைப் பண்பு அவர்களின் உள்ளுணர்ச்சி, நாகரிகம் பழக்கவழக் கங்கள், பழனித்தல வரலாற்றுக் குறிப்புகள் முதலிய பலவற்றையும் உணர்த்துகின்றது. இதன் இன்சுவைத் திறனைப் புலமக்களும் பொது மக்களும் பயிலுந்தோறும் துய்த்து மகிழ்வர்.

இந்நூல் முதன்முறையாக, பாலசமுத்திரம் திரு. க. காளியப்ப நாடாள்வார் அவர்கள் உதவிய கைப்பிரதியைக் கொண்டு 1943ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது. தளவாய்புரம் திரு. அ. அருணாசலம் பிள்ளை அவர்கள் மேலும் சில பிரதிகளைக் கண்ணுற்றுக் கிடைத்த பாட பேதங்களோடும்,

குறிப்புக்களோடும் அப்பதிப்பு வெளி வந்தது. அப்புத்தகம் இப்போது கிடைப்பது அரிது. சிறு பிரபந்தங்களில் ஒன்றாய் பாமரர் உளங்கவர்ந்து முருகன் புகழ் பரவும் இந்நூலை ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம் தன் பதிப்பாக இப்போது வெளியிடுகின்றது. தமிழ் இலக்கிய அன்பர்களும், முருகன் அருட்வேட்கும் பக்தர்களும் இந்நூலைப் பெற்று இன்புறுவார்களாக.

அருள்மிகு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் அ.மா. பரிமணம்,எம்.ஏ.,எம்.லிட்., அவர்கள் வழங்கியுள்ள முன்னுரை இந்நூலின் சிறப்புகளை அறிந்துகொள்ளப் பேருதவி புரியும்.

பழனி

21–4–71

எஸ். இரத்தினம்

நிருவாக அதிகாரி

# நான்காம் பதிப்பின் பதிப்புரை

**தி. ஜெயராமன்,** பி.ஏ., பி.எல்.,
இணை ஆணையர்இசெயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழனி—624 601.

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகம் நூல் மறுபதிப்புத் திட்டத்தின் கீழ் பழனிமுருகன் பற்றிய நூல்களை வெளியிட்டு வருகின்றது. "வையாபுரிப் பள்ளு" நூல் முன்னூறு ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட சிற்றிலக்கியமாகும். இதன்படிகள் தற்போது இறையன்பர்களுக்குக் கிடைப்பதில்லை. இறையன்பர்கள் இப்பள்ளு நூலின் சிறப்பம்சங்களைத் தெரிந்து கொள்ளும் வகையில், திருக்கோயில் சார்பில் நான்காம் பதிப்பு வெளியிடப்படுகின்றது. இந்நூல் பழனி முருகனைப் பாட்டுடைத் தலைவனாக்கக் கொண்டு அமைந்துள்ளது. சந்த இன்பமும்,

கவிநயமும் மிக்க பாடல்கள் இந்நூலில் அமைந்துள்ளன. பெரும்பாலான இசைப் பாடல்களுக்கு இராகம், தாளம் முதலியன வகுக்கப்பட்டுள்ளன. பழனி வட்டாரத்தில் காணப்படும் 30 நாட்டுபுறத் தெய்வங்கள் பற்றி இந்நூல் எடுத்துரைக்கின்றது. 55 நெல்வகைகளின் பெயர்களை இந்நூல் குறிப்பிடுகின்றது.

*வையாபுரிப்பள்ளு நூலினை இறையன்பர்கள்* அனைவரும் படித்துப் பயன்பெறுமாறும், பழனியாண்டவனின் திருவருள் பெற்று வளமுடன் வாழுமாறும் அன்புடன் வேண்டுகின்றேன்.

இடம் : பழனி

நாள் : 02–01–2001

**தி. ஜெயராமன்,**

**இணை ஆணையர் / செயல் அலுவலர்**

# முன்னுரை

தமிழக வரலாற்றில் இராசராசன் போன்ற பேரரசர்களுக்குப் பின்னர்த் தமிழகம் சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரால் ஆளப்படும் நிலை தோன்றலாயிற்று. அதன் விளைவாகத் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் கம்பராமாயணம் போன்ற பேரிலக்கியங்கள் உருவாகும் நிலைமாறிச் சிற்றிலக்கியங்கள் தோன்றும் சூழ்நிலை எழுந்தது. பேரரசர்கள், பெரும் வீரர்கள், வள்ளல்கள் தெய்வங்கள் ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்டு இலக்கியங்கள் தோன்றும் நிலையோடு, எளிய குடிமக்களையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு, அவர் தம் வாழ்க்கையைச் சித்தரிக்கும் நிலையும் ஏற்பட்டது. இம்முறையில் பல்வேறு வகைப்பட்ட சிற்றிலக்கியங்கள், பிரபந்தங்கள் என்னும் பெயரில் தோன்றலாயின. அதனால் அவற்றின் இலக்கணங் கூறும் வச்சணந்திமாலை, வெண்பாப் பாட்டியல், பன்னிரு பாட்டியல் என்பனவாகப் பாட்டியல் இலக்கணங் கூறும் நூல்கள் எழுந்தன. இவ்வாறு எழும் பிரபந்தங்கள் 96 வகையின என நூல்கள் கூறினும், சிலவகைகட்கு இக்காலத்தில் இலக்கியம் கிடைப்பது அரிதாயுள்ளது. மேலும் அத்தொண்ணூற்றாறு வகையில் கூறப் பெறாத, சில பிரபந்தங்கள் புதியவையாகத் தோன்றியுள்ளன. எனவே 96 வகைப் பிரபந்தங்கள் என்பது இப்போது மரபுபற்றி நிற்கும் ஒரு எண்ணிக்கையாக்வே இருக்கிறது.

பிற்காலத்துப் பிரபந்தங்களுக்கான இலக்கணம் பழந்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியத்தில் இடம் பெற்றிருக்க முடியாதாயினும், இவை தோன்றுதற்குரிய இலக்கணக் கருக்கள் அதன்கண் உள்ளன. தொல்காப்பியச் செய்யுளியலில் காணும் வனப்பியல் பற்றிய நூற்பாக்களில் இத்தகு நூல்கள் தோன்றுதற்குரிய அடிப்படை இலங்கக் காணலாம். புலன் என்னும் வனப்பை விளக்குவது

'சேரி மொழியால் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றில்
புலனென மொழிப புலனு ணர்ந்தோரே'. — (தொல்.செய்.553)

என்னும் நூற்பாவாகும். இதன் கண்ணே, பாடி மாற்றங்கள் எனப்படும் சேரி மொழியாகிய பொதுமக்கட் பேச்சு மொழிகொண்டு அமையும் இலக்கியத் தோற்றத்திற்கான இலக்க ணத்தைக் காண்கிறோம். உழத்திப் பாட்டு, குறத்திப் பாட்டு முதலான சேரி மொழி தழுவி அமையும் இலக்கியங்கள் இவ்விலக்கணத்தின் பாற்படும்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் திணை அடிப்படையில் எழுந்த சங்கப் பாடல்களுக்குப் பின்னர், அவ்வடிப்படையில் ஐந்திணை மக்கள் வாழ்வு போற்றும் இசைப் பாடல்கள் தோன்றலாயின. இந்த இலக்கிய வளர்ச்சியை,

சிலப்பதிகாரக் காவியத்தில் காணப்படும் குன்றக்குரவை, வேட்டுவரி, ஆய்ச்சியர் குரவை, கானல்வரி முதலான இசைப் பாடல்களில் காணலாம். கானல்வரியில் அமைந்துள்ள ஆற்றுவரிப் பாடல்கள் மருத நிலவளத்தையும் அங்கு வாழும் மக்கள் சிறப்பையும் உணர்த்துகின்றன. உழவர் சிறப்புப் பேசப்பெறுவது 'ஏரோர் களவழி' என்று தொல்காப்பியத்தில் குறிக்கப்படுகிறது. உழவுத் தொழிலின் இன்றி யமையாமையினால் அத்தொழில் புரியும் உழவர்களின் வாழ்வுச் சிறப்புக்களைப் பேசும் பாடல்கள் ஏர்மங்கலம், உழவர்பாட்டு, உழத்தியர் பாட்டு, என்று பலவாறாகச் சிறப்புற்றன. உழுதுண்டு வாழும் மக்கள் பள்ளர் என அழைக்கப்பட்ட பின்னர், அவர்கள் பற்றிய பாட்டு 'பள்ளுப் பாட்டு' என்று அழைக்கப்பட்டிருக் கலாம்.

## பள்ளு

இக்காலத்தில் பள்ளு என்ற பெயரில் வழங்கும் பிரபந்தம் பண்ணை வயல்களில் உழவுத் தொழில் புரியும் பள்ளன், பள்ளியர்களின் வாழ்க்கையினை அடிப்படையாகக் கொண்டதாகும். இது உழத்தியர் பாட்டு என்றும் கூறப்பெறும். வச்சணந்தி மாலை, வெண்பாப் பாட்டியல் என்னும் நூல்களில் பள்ளுப் பிரபந்த இலக்கணம் கூறப்படவில்லை. பன்னிரு பாட்டியல் என்னும் நூல்,

> "புரவலர் கூறி அவன் வாழியவென்று
> அகல்வயல் தொழிலை ஒருமை உணர்ந்தனன்
> எனவரும் ஈரைந்து உழத்திப் பாட்டே"

என்று உழத்திப் பாட்டிற்கு இலக்கணம் கூறுகின்றது. இவ்விலக்கணம் இப்பொழுது காணப்படும் பள்ளுப் பிரபந்த அமைப்பொடு பொருந்து மாறில்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வீரமாமுனிவர் இயற்றிய சதுரகராதியில் பள்ளு இலக்கணம் முதன் முதலாக இடம்பெறுகிறது. அதில் 'உழத்திப் பாட்டு' என்னும் பிரபந்த விளக்கத்தில் இக்காலத்துப் பள்ளுப் பிரபந்தங்களில் காணும் அமைப்பு கூறப்பட்டுள்ளது. இதனால் உழத்திப் பாட்டு என்ற பிரபந்தமும், இன்று காணும் பள்ளுப் பிரபந்தமும் வீரமாமுனிவர் காலத்தில் ஒன்றாகவே கருதப்பட்டு வந்தது என்று தெரிகிறது. பின்னர் வந்த கதிரைவேற்பிள்ளை அகராதியில் பள்ளு என்பது உழத்திப் பாட்டாகிய பிரபந்தம் என்று விளக்கப்பட்டுள்ளது. பள்ளிசை, பள்ளேசல் என்றும் இ ப்பிரபந்தம் குறிக்கப்படும்.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்க் கூறுகளையும் தழுவி இப்பிரபந்தம் அமைகிறது. இதில் இடம்பெறும் பாடல்கள் சந்த இன்பமும் தாள அறுதியும் பண்நயமும் ஒருங்கே பெற்றுப் புலமிக்கவர்களையே யன்றிப் பொதுமக்களையும் கவரும் தன்மையனவாய்

விளங்குகின்றன. அவை பொருள் காண்பதில் சிரமம் இல்லாத எளிமையான, சேரி மொழிகளைக் கொண்டிருப்பதால் பொருளாலும் பாமரர்களைக் கவராநிற்கும். மேலும் இப்பாடல்கள் அனைத்தும் இசையோடு பாடி, ஆடி நடிப்பதற்கும் ஏற்ற வகையில் அமைந்துள்ளமையால், கல்லாரும் கண்டு கேட்டு இன்புற ஏதுவாக உள்ளன. இவ்வகையில் படித்து இன்புறுவதற்கும், நடித்து இன்புறுவதற்கும் ஏற்றதோர் முத்தமிழ்ப் பிரபந்தமாக இப்பள்ளுப் பிரபந்தங்கள் அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் இப்போது அறியப்படும் பள்ளுப் பிரபந்தத்தின் எண்ணிக்கையைப் பார்க்குங்கால் பண்ணைவாழ் பாமர மக்களிடையேயும், பண்டிதர்களிடையேயும் இப்பிரபந்தம் கொண்டிருந்த செல்வாக்குப் புலனாகும். பள்ளுப் பிரபந்தங்கள் மக்களுள் சிறந்தவர் ஒருவரையாவது சிறப்புற்ற ஒரு குழுவினரையாவது பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெறும். தெய்வங்களில் ஒன்றைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இப்பிரபந்தம் அமைக்கப்படுவதும் உண்டு. இம் மூவகைக்கும் முறையே செண்பகராமன் பள்ளு, மாந்தைப் பள்ளு, முக்கூடற் பள்ளு ஆகிய பிரபந்தங்கள் எடுத்துக் காட்டாகும். பாமர மக்கள் பாடியும், ஆடியும், படித்தும் கேட்டும் இன்புறும் சுவை மிக்கதாக இருப்பதனால் சிற்றிலக்கியங்களில் பள்ளுப் பிரபந்தத்தின் எண்ணிக்கையே மிகுதியாக உள்ளது. நெல்லு வகையை

எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது என்ற பழமொழி இதுபற்றி எழுந்தது போலும்!

## வையாபுரிப் பள்ளு

இப்பள்ளுப் பிரபந்தம் வையாபுரி நாட்டின் முதன்மையான ஊராகத் திகழும் பழனியில் கோயில் கொண்டுள்ள முருகப்பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டதாகும். வையாபுரி நாடு இப்போதை மதுரை மாவட்டத்திலுள்ள பழனி கொடைக்கானல் வட்டங்களின் பெரும்பகுதியைக் கொண்டு விளங்கியது. முப்பேரரசர்களின் ஆட்சிக் காலத்தில் 'வேள்' என்னும் பெயருடைய குறுநில மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். அவர்களில் ''வையாவிக்கோ'' என்றும் ''ஆவி'' என்றும் பெயர் கொண்ட வேளிர்களால் ஆளப்பட்டமையால் இப்பகுதி வையாபுரி நாடு என்றும் ஆவினன்குடி என்றும் வழங்கலாயிற்று. தமிழகத்தின் ஐந்து மண்டிலங்களில் ஒன்றாகிய கொங்கு மண்டிலத்தின் 24 நாடுகளில் வையாபுரி நாடும் ஒன்று. அருணகிரி நாதரும் தம் திருப்புகழில் இதனை, ''சேரர் கொங்குவை காவூர் நனாடதில், ஆவினன் குடி'' என்று குறிப்பிடுகின்றார். 'வையாபுரிக் குளம்' என இன்றும் வழங்கும் பெயர் இவ் வுண்மையைக் காட்டி நிற்கின்றது. பழனங்கள் சூழ்ந்திருந்தமையின் பழனி என்று கூறப்பட்ட பெயரே

இக்காலத்தில் பெரிதும் வழக்கத்திலுள்ளது. சமயச் சிறப்பு மிக்க நிலையில், இதன் பெருமை கூறவந்த புராணங்கள் திரு+ஆ+இனன்+கு+டி = திருவாவினன்குடி என்று கொண்டு, இலக்குமியும் காமதேனுவும், சூரியனும், பூமியும், மதியும் வழிபட்ட தலம் என்றும், பழம்+நீ = பழநி என்று கொண்டு முருகப்பெருமான் ஞானப்பழமாய் விளங்கிய இடம் என்றும் விளக்கலாயின. காலப்போக்கில் *வரலாற்று உண்மைகள்* புராணங்களால் இவ்வாறு திரையிடப்பெற்றன. இப்பகுதி பன்றி மலை முதலான மலைகளையும், கல்லாறு, கானாறு, பொருந்தலாறு, பச்சையாறு, பாலாறு, வரத்தாறு என்னும் ஆறு ஆறுகள் அடங்கிய சண்முக நதியினையும், நூறு ஊர்களையும், எட்டு மங்கலங்களையும், பன்னிரண்டு பள்ளிகளையும் கொண்டிலங்கிய வளமிக்கதாகும்.

சமீன்தார்கள் ஆட்சி நிலவிய காலத்தில் (16,17,18 – ஆம் நூற்றாண்டுகள்) இப்பகுதி பழனிச் சமீன் எனப்பட்டு, சமீன்தார்களால் ஆளப்பட்டு வந்தது. பழனி மலைக்கு விசையகிரி, சிவகிரி, சிவாசலம், சந்திரசைலம், சித்தன் வைப்பு எனப்பல பெயர்கள் உண்டு. பழனிச்சமீனில், சமீன் பட்டம் பெற்று ஆளுமவர்கள் தம் இயற்பெயருக்கு முன்னால் 'விசையகிரி' என்ற அடைமொழியினையும், பின்னால் "சின்னோவள் ஐயன்" என்ற அடைமொழியினையும் சேர்த்து வழங்கப்பட்டார்கள். சின்னோவள் என்பது,

அச்சமீன்தார்களின் குலதெய்வப் பெயராகும். அப்பெயர் தலைவன் என்ற பொருள்படும் ஐயன் என்ற பெயரோடு சேர்ந்து சின்னோவள் ஐயன் என்றாகிப் பின்னர் ''சின்னோவையன்'' என்று திரிந்து இறுதியில் 'சின்னோவன்' என்று மருவி வழங்கலாயிற்று. இப்பள்ளு நூல் ஆசிரியர், தம் பாட்டுடைத் தலைவனாக, பழனிச் சிவகிரி முருகையனைக் கொண்டிருப்பதனைக் காப்புப்பாயிரச் செய்யுள்களாலறியலாம். அதனால் இது 'வையாபுரிப் பள்ளு' என்னும் பெயர் பெற்று விளங்குகிறது.

நூலாசிரியர்

பழனிச்சமீன் ஆட்சி மரபில் வந்த குமார விசையகிரி வேலச்சின்னோவன் இப்பிரபந்த ஆசிரியராவர். இதனைத் தம் நூலில் அவரே 'சுப்ரமண்யன் விசையகிரி வேலச்சின்னோவன் பாடும் பள்ளேசல்' (49), 'விசையகிரிச் சின்னோவய்யன் சொன்ன பள்ளேசல்' (184) எனக் குறிப்பிட்டுள்ளார். காப்புப்பாயிரத்தில் 'வான்மீக வியாசனைப்' (4) புகழ்வதாலும், இந்நூலாசிரியரின் முன்னோருள் ஒருவர் பாடிய 'மீனாட்சியம்மைக்கும்மி' இவர்களைத் ''தேமேவு வான்மீகி கோத்ரன்'' எனப் புகழ்வதாலும் இவ்வாசிரியர் வான்மீகி கோத்திரத்தைச் சார்ந்தவராவர் என்று தெரிகிறது. தன் தந்தையாரைப்பற்றி நூலின்

இடையிடையே, ஆசிரியர் குறிப்பிட்டுச் சொல்கிறார். விசையகிரி வேலச்சின்னோவன் நூலாசிரியரின் தந்தை எனவும், குமாரச்சின்னோவன் பாட்டனார் எனவும் அறியப்படுகிறது. இவர்கள் இருவருமே முருகப் பெருமானிடத்து அளவற்ற பக்தியுடையவர்கள் என்றும், சிறந்த தமிழ்ப் புலமையுடையவர்கள் என்றும் தெரிகிறது. ஆசிரியரின் முன்னோரான குமாரச் சின்னோவன் *'மீனாட்சியம்மைக் கும்மியை'* இயற்ற, தந்தையார் 'பழனிப் பிள்ளைத் தமிழ், வருகைப்பத்து, முருகையன் வண்ணம், குமாரவடிவேலன் வண்ணம், முத்துக்குமாரசாமி வண்ணம் முதலிய நூல்களை எழுதியுள்ளார். திருமகளும் கலைமகளும் திகழ்ந்து நிற்க, முருகபக்தி மிகுந்த குடும்பத்தில் தோன்றிய இந்நூலாசிரியர் முருகப் பெருமான் மீது பள்ளுப் பிரபந்தம் பாடியதோடு, தண்டபாணி பதிகம் புகையிலை விடுதூது, சமயமாலை முதலிய பிற நூல்களையும் இயற்றியுள்ளார். தன் சந்தக்கவித்திறத்தை முருகன் அருட்பேறாகக் கருதிப் போற்றுகிறார். முருகப் பெருமான்பால் அன்புமிக்க இவ்வாசிரியரின் மரபினர் செய்துள்ள கவிதைத் தொண்டுகளை அறிந்தவர்கள், பழனிக்குச் சென்றால், அவர்கள் ஆற்றியுள்ள கோயில் திருப்பணிகளையும் புதிய மீனாட்சி கோயில், மீனாட்சி மண்டபம் முதலியவற்றையும் கண்டு வியப்படைவர். இச்சமீன் மரபினர் வேடர் குலத்தவர் என்றும், சண்டன் வம்சத்தவர் என்றும் **(26)** கூறப்படுகிறது.

## காலம்

இந்நூலாசிரியர் தன் தந்தையாரை, "சிவபதம் சேர் விசையரங்க சொக்கநாதன்–மகிழ் செல்வன் புகழ் விசையகிரி வேலச் சின்னோவன்'' (231) எனக் குறிப்பதால், அவர் மதுரையினையாண்ட விசயரெங்க சொக்கநாத நாயக்கரால் சிறப்புச் செய்யப்பட்டவர் என்று தெரிகிறது. இந்நூலாசிரியர் பாடிய சமயமாலைச் செய்யுளொன்றால், ஆலயத் திருப்பணிச் சீர்திருத்தம் கி.பி. 1773–இல் நடந்தேறியதாகத் தெரிகிறது. இதனால் இந்நூல் 18ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றிய தாகலாம். முக்கூடல் பள்ளுச் செய்யுட்களோடு தன் செய்யுட்கள் சிலவற்றையும் சேர்த்து, 'முக்கூடற் பள்ளு நாடகம்' என்னும் பெயரில் திரு. சின்னத்தம்பி வேளார் வெளியிட்ட நூலில், இவ்வையாபுரிப் பள்ளுவின் செய்யுட்கள் சில (112, 117) இடம் பெற்றுள்ளன.

## நூல் அமைப்பு

இந்நூல் வெண்பா, கலிப்பா, விருத்தம், சிந்து முதலிய பாவும் பாவினங்களும் கொண்டு அமைந் துள்ளது. கடவுள் வாழ்த்து ஒன்றும் காப்புப் பாயிரம் ஆறும் நூல் இருநூற்றுநாற்பதும் ஆக, இப்பள்ளு 247 செய்யுட்களைக் கொண்டுள்ளது. சந்த இன்பமும் கவிநலமும் மிக்க பாடல்கள் மிகுந்துள்ளன.

பெரும்பாலான இசைப்பாடல்களுக்கு இராகம், தாளம் முதலியன வகுக்கப்பட்டுள்ளன. மேலும் பல்லவி, அனுபல்லவி, சரணங்களோடு அமைந்த கீர்த்தனப்பாடல்கள் சிலவும் இடம்பெற்றுள்ளன. நாட்டு மக்களிடையே குறிப்பாகக் கல்வியறிவுமிக்கில்லாத பாமரர்களிடையே வழங்கும் பேச்சு மொழியினை மிகுதியும் கொண்டு இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. தமிழக உழவர் சமுதாயத்தில் காணப்படும் பழக்க வழக்கங்கள், பழமொழிகள் முதலியவற்றை இந்நூலினிடையே விரிவாகக் காணலாம் பள்ளுப் பிரபந்தங்களில் முதன்மையானது என்று கருதப்படும். முக்கூடற்பள்ளுவின் போக்கினை அடி யொற்றியே இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நூலில், இந்து சமயஞ்சார்ந்த குடும்பங்களோடு, அந்தோணிக்குடும்பன், அருளாக்குடும்பன், இராயக் குடும்பன், இயேசு வடியான் சவரிமுத்தன் பாக்கிய குடும்பன் என்னும் பெயருடைய கிறித்துவ உழவர்களையும், மரியாள், அன்னம்மை, மானூர், அந்தோணி, அந்தோணி மகள் என்னும் பெயருடைய கிறித்துவ உழவர்களையும் காண்கிறோம். இவற்றால் இந்நூல் தோன்றிய காலத்தில் இப்பகுதியின் கிறித்துவ சமயம் பரவியிருந்ததனையும், அம்மத வேறுபாடின்றி மக்கள் பண்ணைகளில் தொழில் புரிந்து வந்ததையும் உய்த்துணரலாம். இந்நூலில் "ரோமாபுர வழிசேர் தென் பழனிப் பள்ளி" என 164–ஆம் செய்யுளில் வரும்

தொடரில், ரோமபுரி என்பது அக்கிறித்துவ மக்கள் வாழ்ந்த பகுதியின் பெயர் என்பதைக் காட்டிலும் அக்கிறித்துவர்கள் ரோமன் கத்தோலிக்க நெறியைச் சார்ந்தவராகலாம் எனக் கொள்வது ஏற்புடைத்தாகத் தெரிகிறது.

## நூற்பொருள்

பள்ளர் சேரியில் வாழும் பள்ளர்களின் குடும்பச் சித்திரமே இப்பிரபந்தத்தின் பொருள் அடிப்படையாகும். ஒரு பள்ளரின் குடும்பச் சித்திரம் நாடகப் பாங்கில், அமைத்துக் காட்டப்பட்டுள்ளது. பண்ணையில் வேலை செய்யும் பள்ளன் ஒருவனுக்கு இருமனைவியர் வையாபுரிப்பள்ளியாகிய மூத்தவள் சைவ சமயத்தவள். இளையவளான பழனிப்பள்ளி வைணவ சமயம் சேர்ந்தவள். பள்ளன் இளையவள் பால் கொண்ட மையலின் காரணமாக அக்குடும்பத்தில் எழும் சிக்கலே பள்ளு நாடகமாகச் சித்திரிக்கப்படுகிறது. தொடக்கத்தில் இருபள்ளியர், பள்ளன் வரவினைக் காண்கிறோம். பள்ளன் தன் பெருமை கூறப் பள்ளியரும் தம் பெருமையொடு தத்தம் நாட்டுவளத்தையும் பேசுகின்றனர். அவர்கள் மழைவேண்டி, கூவுமாறு குயிலை வேண்டுவதோடு பல்வேறு சிறு தெய்வங்களையும் பரவுகின்றனர். ஒருவர்மேல் ஆவேசம் வந்து மழைவரம் பெறுகின்றனர். மழைக்குறி தோன்றி,

மழை காலூன்றிப் பெய்ய, வெள்ளம் பெருகி வருகிறது. குறிஞ்சி முதலான ஆறுகளிலெல்லாம் வெள்ளம் மிக்கு வருகிறது. பண்ணைத் தலைவன்பால் மூத்தபள்ளி தன் கணவனைக் குறைகூறி முறையிடுகின்றாள். இளையவளும் முறையிட அவளை, பண்ணைத்தலைவர் அதட்டி அங்கு வந்த பள்ளனை பண்ணைச் செயல் பற்றிக் கேட்கிறார். அவன் பண்ணைத்தொழிலாகச் செய்ய வேண்டுவனபற்றிக் கூறியபின், கிடை அமைக்க ஆயர் வருகின்றனர். மூத்தபள்ளி கணவன்மீது குற்றம் சாட்ட பண்ணையார் அவனைத் தொழுவில் மாட்டுகின்றார். அதனைக் கண்டு இளையவள் வருந்த, மூத்தவள் சோறுகொண்டு வந்து, பள்ளனைக் காண்கிறாள். மூத்தவள் பண்ணையாரை வேண்டி தன் கணவனை விடுவிக்கிறாள். பள்ளன், வித்துக்கள், மாடுகள், கலப்பைகள் வகைபற்றி உரைக்கிறான். நல்லநாளில் ஏர் பூட்டி உழுகின்றனர். காளை வெருண்டுபாயப் பள்ளன் கீழே விழுந்து கிடக்கின்றான். புலம்பிய பள்ளியர் மகிழ, எழுந்த பள்ளன் நாற்றுப் பாவுகின்றான். நட்டபின் அச்செழிப்பு கண்டு பள்ளன், பள்ளியர் களிப்புறுகின்றனர். விளைந்த நெல்லைச் செப்பஞ்செய்து, பள்ளன் அளக்கின்றான் மூத்தபள்ளி முறையிட, இரண்டு பள்ளிகளும் ஒருவரை ஒருவர் ஏசிக்கொள்கின்றனர். இறுதியில் இருவரும் மனம் நெகிழ்ந்து ஒன்றுபடுகின்றனர். இவ்வாறு செல்லும் நூல் வாழ்த்தொடு முடிகின்றது.

இந்நூலில் மக்கள் மழைவேண்டி, அணையேத்தம் செய்து தெய்வத்தை வாழ்த்துவதாகக் கூறுமிடத்து, அணையடிக் கருப்பன் முதலாக 30 சிறு தெய்வங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவை பழனியைச் சுற்றியுள்ள பழனங்களிலும், அவற்றைச் சார்ந்த இடங்களிலும் விளங்குவனவாம். அத்தெய்வங்களில் பலவற்றை இற்றை நாளிலும் அப்பெயரிலேயே வழங்கக் காணலாம். அச்சிறு தெய்வங்கட்கு அளிக்கப்பெற்ற பலிப்பொருள் முதலியவற்றையும் நூலிற்காணலாம். மழைக்குறியும், மழைபெய்தலும், பெய்தநீர் ஆறுகளில் வெள்ளமாகப் பெருகி ஓடுதலும், அவற்றின் கண் வாழும் பல்வகை மீன்களையும் நூலாசிரியர் அழகுறக் கூறியுள்ளார். இந் நூலாசிரியர், முருகப்பெருமான் பண்ணையிலிருந்து படித்தரம் அளிக்கப்பட்ட கோயில்கள், மடங்கள், சத்திரங்கள் முதலியவற்றைக் குறிப்பிட்டுக் காட்டுவது இத்திருக்கோயில் வரலாற்றை அறிய விரும்புபவர்க்குச் சிறந்த குறிப்புக்களாகும். பழனியைச் சேர்ந்த 33 வெளிக்கோயில்களும் தவராசபண்டிதர், நல்லய்யங்கார், பச்சைக் கந்தப் பையன் புலிப்பாணிசுவாமி பாலய்யர் ஆகியோர்க்குரிய 5 மடங்களும் ஆகிய இவைகட்கும் மாகேசுர பூசைக்கும், வாகனமடம் வகையறாவுக்கும், பூசைப் படித்தரமாக நெல் அளிக்கப்பட்டுவந்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது.

*முருகன் பண்ணையில் விதைநெல் இருப்புக்* கூறுமிடத்து அச்சுமுறித்தான், அலங்காரி முதலாக 55

நெல் வகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அப்பெயர்களில் பல இராமபாணம், சிறைமீட்டான் என்றிவ்வாறு வினோதமாக இருக்கின்றன. பள்ளுப் பிரபந்தங்களில் வரும் இருமனைவியரும் வேறுபட்ட மதத்தினராக அமைப்பது மரபாகும். இருவரும் மாறுபாடுகொண்டு பூசலிட்டுப் பேசும்போது, ஒருத்தி மற்றவளுடைய தெய்வத்தை இகழ்ந்து மாறிமாறி ஏசிக்கொள்வதாகவும், இறுதியில் இருவரும் அமைதியுற்றுத் தெளிவடைவதாகவும் கூறுவது வழக்கம். இந்நூலில் சிவ சமயம் சார்ந்த மூத்தவளான வையாபுரிப் பள்ளியும், வைணவ சமயஞ் சார்ந்த இளையவளான பழனிப்பள்ளியும் மாறுகொண்டு, மாற்றாள் தெய்வத்தை ஏசுவது சுவைத்தின்புறத்தக்கதாக உள்ளது. அவர்கள் பேச்சில் கொச்சை மொழிகள் மிகுந்திருப்பினும், அவை பாத்திரங்களுக்கு ஏற்ற இயல்பாய் அமைந்து, கவிதை வேகம் குறையாவகையில் இன்பம் பயக்குமாறு உள்ளன. பாத்திரங்களில் பேச்சுக்களில் அவர்கள் அறிவுநிலைக்கும் பழக்க வழங்கங்களுக்கும் பொருந்துமாறு வெளிப்படுத் தப்பட்டுள்ள பழமொழிகள் மரபுத் தொடர்கள் முதலியன கற்பவர்க்கு இன்பம் மிகுவிப்பனவாக உள்ளன.

இந்நூலைப் படித்தும், படிக்கக் கேட்டும் பாடியும் இன்புறுவதோடு, கூத்து முறையில் ஆடியும் மக்கள் இன்புற வேண்டுமென்பது நூலாசிரியரின் விருப்பமாகும். இதனை இவர் நூல் இறுதியில் வாழ்த்துரைக்கும்போது,

"தேடிய பள்ளேசலைத்தான் செப்பினோர் கேட்டோர்கள்
பாடினபேர் ஆடினபேர் பலன்பெற்று வாழியரே"

என்று கூறுவதனால் அறியலாம்.

மழை காலூன்றிப் பெய்ய முற்படுமுன் மின்னுகின்றது. அம்மின்னல் முருகப் பெருமான் வேல்போல் ஒளிமிக்கிருக்கின்றது என்னும் பொருளில் ''சண்முகத்துரை வேலினும் மின்னி'' (54) யதாகக் கூறுகின்றார். மலையின் மீது பெய்த மழை விசைய கிரிச் சின்னோவையின் கொடையினைப்போல் இருந்தது என்று கூறுவதில் அமைந்துள்ள இலக்கிய நயம் நினைந்தின்புறத்தக்கதாகும்.

பண்ணைத் தலைவரை நையாண்டி செய்து
"மூளிக் காதும் மூரலிட்ட
தாழி வயிறும் – கட்டை
மொட்டை மீசையும் கருங்
குட்டைக் கழுத்தும்
பூளையடைந்த கண்ணும்
மூளை நாசியும் – பெரும்
போத் துரலை யேநிகர்
ஒத்த விடையும்" – என்று

வருணிக்கும் வருணனையில்தான் எவ்வளவு கேலிக் குறிப்பும், இயற்கைத் தன்மையும் இசையோடு இணைந்து நிற்கின்றன!

திருஞான சம்பந்தர் முருகப் பெருமானுடைய அவதாரமாகும் என்ற கருத்தினைக்கொண்ட நூலாசிரியர், அதனை மிக அழகாகக் குறிப்பிட்டுள்ளார். சிவகிரியாம் பழனியில் வீற்றிருக்கும் முருகப் பெருமான்

எலும்பைப் பெண்ணாக்கினாராம். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் முதன்மைப் புலவராய்த் திகழ்ந்தாராம். திருமால் உளங்களிக்கும் மருமகனாகவும் விளங்குகின்றாராம். இதனை,

"அங்கத்தைப் பூம்பாவை யாக்கினார் கூடற்
சங்கத்திற் பிரசங்க வாக்கினார்
அரிமனம் மகிழ் மரும கன்சிவ
கிரி முருகனால்..."

என்று சந்த நலங்கனியக் கூறுகின்றார்.

இப்பிரபந்தத்தில் இடம் பெற்றுள்ள பள்ளியர் ஏசற்பகுதி, செந்தமிழ்ச் சுவையும், தத்தம் சமயத்தின்மீது மக்கள் கொண்ட ஆர்வமும் நிறைந்ததாய்ப் படிப்போரைக் களிப்புறுத்தும் பாங்கில் உள்ளது. இப்பகுதி பெண்களின் மனோநிலை அடிப்படையில், அவர் தம் இயற்கையான நுட்பமதியும் போட்டி உணர்வும் நன்கு புலப்படுமாறு அமைக்கப்பட்டுள்ளது. உணர்ச்சி வேகம்மிக்க பகுதியாதலின் சுடுசொல்லுக்கும் ஏச்சுரைக்கும் பஞ்சமிராது. இவ்வளவும் கவிதை வடிவிற் புகுந்து கலைச்சுவை பயந்து நிற்பது அறிந் தின்புறத்தக்கதாகும்.

இளையவள்

"புரணிசொன்ன, தென்னடிவை
யாபுரிப்பள்ளி – அடி
போடி முண்டை முறையிட்டுத்
திரிந்தாவதென்ன;

மூத்தவள் :

"மரியாதையாய்ப் பேசடிதென்
பழனிப்பள்ளி – யந்த
மந்திரத்தில் மாங்காய்விழு
காதடி போடி"

என்று வாக்கு வாதத்தில் தொடங்கும் ஏசல்

மூத்தவள்

"ஒருத்தியோட புருசனுக்கு
ஆசைப்பட்டு நான் – இப்போ
ஓடிவந்ததெல்லா மிந்த
உலகமறியும்

இளையவள்

குரூரமாகப் புருசன்மேலே
சாடியைச் சொல்லி – இப்போ
குட்டையடித் திட்டது நான்
அல்லடி போடி

என்று சாடி கூறித்தாக்கும் நிலைக்கு வளர்ந்து,

இளையவள்

உங்கள் தெய்வம் மானங்கெட்டு
நிருவாணத்தோடே – யிந்த
ஊரெங்குஞ் சுற்றினதை
நீயுங் கேளாயோ

மூத்தவள்

சங்கை யிலா மலே யுங்கள்
தெய்வம் பெண்களை – முன்னே
தானையை எடுத்துக்கொண்டு
மானம் பார்த்ததே.

என்று எதிரியின் தெய்வநிலையை ஏசிக்காட்டுமளவிற்கு வளர்ந்து செல்கிறது. இறுதியில் பள்ளியர் இருவரும் அமைதியுற்று உளம் ஒன்றுபட்டு

உங்கள் கைலாச நாதர்
எங்கள் தெய்வமே – எங்கள்
ஒவள விசைய மாலும்
உங்கள் தெய்வமே

என்று சமரச உணர்வு பெறுகின்றனர். குடும்பத்தில் ஒன்றுபட்டுத் தம் பள்ளனோடு அன்புக் குடும்பம் நடத்துகின்றனர்.

கெடு மொழி கண்ணுக்குத் தோன்றாது' (213) 'எங்கும் செல்லும் காசுக்கு வட்டமுண்டோ' (214), 'உழக்குக்குள்ளே கிழக்கு மேற்கு பேசல்' (216), 'கொல்லத் தெருவிலே ஊசி மாறுதல்'(217), 'பனங்காட்டு நரி சலசலப்புக்கஞ்சுமோ' (218), குண்டு சட்டியில் குதிரை ஒட்டுதல்' (218), 'புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமோ', 'தீட்டிய மரத்தில் கூர்பார்த்தல்' (219), 'குதிரைக்கு, வால் குண்டி மட்டும்', தேங்காய் நாய்க்குத் தக்குமோ' (220), 'ஆட்டைத் தோளிலே போட்டுத் தேடிலைந்த இடையன்' (224), ' தன்வினை தன்னைச் சுற்றும் (128), 'கொள்ளிகொண்டு தலை சொறிந்தாற்போல்,' (129), 'துள்ளினமாடு பொதி சுமக்கும்' (129) 'பன்றியுடன் கூடிய கன்றுபோல்' (130), 'தன் வீட்டு விளக்கென்று முத்தமிடேன்' (137), பெண்புத்தி பின்புத்தி (137), 'ஊர்க்குருவி மேலே

இராமபாணம் தொடுப்பாரோ'–'கூடிக்கெட்ட பேர்களும் பிரிந்து வாழ்ந்தோரும் இந்தக் குவலயத்தில் காணேன்' (238) என்றும் பிறவாறும், பழமொழிகள் உவமைகள், மரபுத் தொடர்கள் எல்லாம் நாடக மக்களின் சொல்லில் இடம் பெற்று, படிக்கின்றவர்களை இன்பத்தில் ஆழ்த்துகின்றன.

இவ்வாறு எளிய மக்களான உழவர் குடும்ப வாழ்க்கையினை இயற்கை நிலையில் வைத்துப் பாமரரும் சுவைக்கும் வகையில், முத்தமிழும் விரவப்புலவர் பெருமக்களால் இயற்றப்பட்டதாகலின், பள்ளு இலக்கியம் பாமர இலக்கியமாயினும் மிக்க செல்வாக்குப் பெற்று விளங்கியது. இச்சிறப்பினால் இலங்கையில் தமிழர் வாழும் பகுதியிலும், கதிரை மலைப் பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு முதலிய பிரபந்தங்கள் தோன்றலாயின. 96வகைப் பிரபந்தங்களில் பல பிரபந்தங்கள் இலக்கியங்காணாது வீழ்ந்து பட, பள்ளு போன்ற இலக்கியங்கள் பல்கிப் பெருக்கக் காரணம் அவை மக்கள் வாழ்வினை அடிப்படையாகக் கொண்டு, அவர்தம் உணர்ச்சிகளுக்கு உரம் தந்து நெறிப்படுத்தும் நோக்கில் அமைந்ததேயாகும். காலப்போக்கில் இவற்றின் வடிவம் மாறினாலும் இத்தகைய இலக்கிய ஊற்று வற்றாது, சிறந்து நிற்கும்.

அ.மா. பரிமணம்
தமிழ்ப் பேராசிரியர்
பழனியாண்டவர் இந்தியப்
பண்பாட்டுக் கல்லூரி

பழனி,

9.4.1971.

உ

# வையாபுரிப் பள்ளு

## பொருளடக்கம்


| எண் | பெயர் | பாட்டு எண் |
|---|---|---|
| 1. | காப்புப்பாயிரம் | அ – உள |
| 2. | பள்ளிகள் வரவு | 1 – 4 |
| 3. | பள்ளன் வரவு | 5 – 6 |
| 4. | அவன் பெருமை கூறல் | 7 – 9 |
| 5. | பள்ளியர் குடித்தரங்கூறல் | 10 – 13 |
| 6. | நாட்டு வளங்கூறல் | 14 – 22 |
| 7. | குறியிற் கூக்கேட்டல் | 23 – 26 |
| 8. | மழை வேண்டித் தெய்வம் பரவல் | 27 – 48 |
| 9. | சன்னதம் வந்து நல்வரமளித்தல் | 49 |
| 10. | மழைக்குறி யோர்தல் | 50 – 52 |
| 11. | மழைகாலூன்றல் | 53 – 54 |
| 12. | வெள்ளம் வரவு | 55 – 64 |
| 13. | ஆற்றுச் சிறப்புக் காண்டல் | 65 – 68 |
| 14. | பண்ணைத் தலைவன் வரவு | 69 – 73 |
| 15. | மூத்தபள்ளி முறையீடு | 74 – 76 |
| 16. | இளையபள்ளி முறையீடு | 77 – 79 |
| 17. | பண்ணைத்தலைவன் இளையாளை உரப்பல் | 80 – 82 |
| 18. | பள்ளன் வெளிப்படல் | 83 |
| 19. | பண்ணைச்செயல் வினாவல் | 84 – 86 |
| 20. | பள்ளன் பண்ணை செயல் கூறல் | 87 – 103 |
| 21. | ஆயரை அழைத்தல் | 104 – 106 |
| 22. | ஆயர் வரவு | 107 – 108 |
| 23. | அவர் பெருமை கூறல் | 109 – 110 |
| 24. | பள்ளன் இளையாள் குடில்செல்ல மூத்த பள்ளி சாடிகூறல் | 111 – 117 |

| எண் | பெயர் | பாட்டு எண் |
|---|---|---|
| 25. | பள்ளன் கிடையிலிருந்தான் போல் வந்து கிடைவைத்தமை கூறல் | 118 – 120 |
| 26. | பள்ளனைத் தொழுவின் மாட்டல் | 121 |
| 27. | இளையபள்ளி புலம்பல் | 122 – 124 |
| 28. | மூத்தபள்ளி பள்ளனுக்குச் சோறு கொண்டு வரல் | 125 – 126 |
| 29. | குட்டையில் பள்ளனுக்கு மூத்தபள்ளி கூறல் | 127 – 131 |
| 30. | குட்டை மீட்கும்படி செய்ய மூத்த பள்ளியைப் பள்ளன் வேண்டல் | 132 – 133 |
| 31. | மூத்தபள்ளி பண்ணைத்தலைவனைப் பரவல் | 134 – 140 |
| 32. | குட்டை மீண்டு பள்ளன் வித்துவகை கூறல் | 141 – 147 |
| 33. | மாட்டுவகை கூறல் | 148 – 150 |
| 34. | கொழு, கலப்பை, நுகம், மேழி | 151 – 154 |
| 35. | நன்னாள் குறித்து நாளேர் இடல் | 155 – 156 |
| 36. | உழவர் காளைகளை ஏரில் பூட்டல் | 157 – 162 |
| 37. | காளைவெருண்டது பள்ளத்துப் பாய்தல் | 163 |
| 38. | பள்ளிகள் புலம்பல் | 164 – 168 |
| 39. | பள்ளன் எழுந்துவித்து நாற்றுப் பாவுதல் | 169 – 170 |
| 40. | நாற்று நடல், பள்ளியர் வகை | 171 – 174 |
| 41. | நடுகை வளப்பத்திடை பள்ளர், பள்ளியர் களிப்பு | 175 – 187 |
| 42. | விளைந்தபின் செப்பஞ்செயல் | 188 – 189 |
| 43. | நெல் பொலியளத்தல் | 190 – 200 |
| 44. | மூத்தபள்ளி முறையீடு | 201 – 204 |
| 45. | பள்ளிகள் – ஏசல் | 205 – 229 |
| 46. | பள்ளிகள் உளம் விண்டு ஒருப்படல் | 230 – 239 |
| 47. | வாழ்த்துரையும், நூற்பயனும் | 240 |

உ

முருகன் துணை

# வையாபுரிப் பள்ளு

காப்புப்பாயிரம்

## விநாயகர் துதி

### *கலிப்பா*

அ பூமேவு ❋ வேலணிந்த பொற்கமலக் கையசைய
மாமேவு ✳ தென்பழனி வள்ளல்மகிழ் பள்ளிசைக்கே
நாமேவு சொற்புலவோர் நாவினுக்கு மெட்டாத
காமேவு ❋ பாதிரைவாழ் கணபதிதாள் காப்பாமே.

## கைலாச நாதர் துதி

### *சிந்து*

ஆ. சீர்கொண் டருள் சிவனவ ரூபன்
தீரன் ரண சூரப்ர தாபன்
திகழ்மணி நீபத்
தொடையணி வேலன்
சிறுதண்டைக் காலன்

---

பாடபேதம் ❋ "மயிலணிந்த"

✳ தென்பழனி – பழனிமலைக்குத் தென்மேற்குப் பக்கமாக வறட்டாற்றின் கரையில் பழைய குடியிருப்பு மேடு ஒன்று இருக்கிறது. இவ்வூர் ஆதியில் அங்கிருந்ததாகச் சொல்லப்படுகிறது. "பழனி" என்பது பழனத்தால் சூழப்பட்டவூர் என்பதாகும். "பழநீ" என்று புராணக் கதையொட்டிக் கூறுவாருமுளர். பழனம் – வயல்

❋ பாதிரைவாழ் கணபதி – பாதிரைப் பிள்ளையார், வையாபுரிக் குளக்கரையிலுள்ளது.

பார்கொண் டாடு முருகையன் மீதில்
பைந்தமி ழால டியேனிப் போது
பத்தன் மனோ
ரதம்நிறை வேறப்
பள்ளேசல் கூற
ஏர்கொண் டருள் திருமகள் மலைமகள்
இயல்கொண் டருள் நிலமகள் கலைமகள்
இணையடி தன்னை
மனதினி லணிவேன்
என்றைக்கும் பணிவேன்
தார்கொண் டருள் பணிகுழைக் காதனைத்
தமிழ்பா டிய கயிலாச நாதனைச்
சந்தத மும்மே
மகிழ்வொடு வின்வேன்
தலைமிசைக் கொள்வேனே.

## பெரிய நாயகியம்மை துதி

*சிந்து*

இ. கவளமத யானைக்கு மிளையோன்
கருணாகரன் மூவர்க்கும் பழையோன்
கானக் கலை
மனமகிழ் மோகன்
கனிமொழி பாகன்
பவளநிறச் செஞ்சோதி மெய்யன்
பழனிச்சிவ கிரிமுரு கையன்
பள்ளே சலை
விரவியே பாடப்
பலன்மெத்தத் தேட
உவமானமி லாதசு சீலன்
❋ ஔவளவி சையகோ பாலன்

---

பிரதிபேதம : ❋ "ஓங்கிய ஔவளவி"

உடன்பிறந் தவள்
நீலிகல் யாணி
ஒளிர்திரு வாணி
சிவசாம்ப விபழனித் துரைமகள்
* திறமுலவு பெரியவள் வரைமகள்
சீர்பாதந் தனைப்
போற்றியே யடியேன்
தினஞ்சற்றுஞ் சடியேனே.

## 3. *மருதகாளியம்மை துதி

சிந்து

ஈ. விதிமுதலா முனிவோர்தொழு பாதன்
விசையகிரி வாக்குப்ர சாதன்–விகடதட
குக்குடத் துவசன்
விபுதர்மெய்க் கவசன்
ததியைநுக ராிதிரு மருகன்
சங்க்ராம சிவாசல முருகன்–தயவுகூர்பள்
ளேசலைப் பாடத்
தரணிகொண் டாடத்
திதிபெறவான் மீகவி யாசனைச்
சிங்கார முத்தையவுல் லாசனைத்–தினமும் போற்றியென்
மனுவையுஞ் சொல்வேன்
செருநரை வெல்வேன்
அதிகவற்கு வரத்தையுங் கொடுத்தே
அடியேனையிப் புவிமிசைத் தடுத்தே–ஆட்கொள்மருத
காளியைப் புகழ்வேன்
அதர்மத்தை யிகழ்வேனே.

---

பி–ம்: * "திறமுலாவிய"

* இக்கோவில் அம்மாபட்டிக் குளத்தருகிலிருக்கிறது. தற்காலம் ரெட்டையம்பாடி மிட்டா எல்லைக்குளுள்ளது.

## சின்னோவன், பெரியோவன், எர்ரக்கம்மன் துதி

### சிந்து

உ. திசைகொண்ட பராபர ❊ நாதன்
சிகிவாகன ணடந❑வி நாதன்—சிவனுக்குப
தேசமும் பகர்வோன்
தினைமாவை நுகர்வோன்
பசைகொண்டவில் வேடர்க்குத் தமரன்
பழனிச்சிவ கிரியில்வாழ் குமரன்—பள்ளேசலைத்
தமிழினா லோதப்
❊ பரிசக லாத

இசைகொண்ட ◗ குமாரச்சின் னோவய்யன்
இயல்கொண்டரு ளபரஞ்சி பூபன்—இணையடிதனை
.................................. ..................................
தலைமிசைக் கொண்டேன்

நசைகொண்டருள் பெரியோவ ளம்மனும்
நலங்கொண்டருள் சின்னோவ ளம்மனு—நயமுயர் எர்ரக்
கம்மனைத் துதிப்பேன்
நயம்பெறக் கதிப்பேனே.

## அவையடக்கம்

### எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

ஊ. பருவதனப் பள்ளேசல் முருகன் மீதிற்
பைந்தமிழாற் சொன்னதெந்தப் படியே யென்றால்
உருவதனச் சேடன்முன்பு நாகப் பூச்சி
யோடினபோற் சந்திரன்முன் னுடுக்கள் போலும்

பா—ம் : ❊ பராபர லோலன், ❊விலோலன், ❑ 'பரிசைகலாத'

◗ இவர் இந்நூலாசிரியரின் பாட்டனார் எனப் "பழனித்துரை வண்ணம்," "மீனாட்சி கும்மி" இரண்டு நூல்கள் மூலந்தெரிகிறது.

திருவதன ❋ நாலிருக்கும் விரும தேவன்
சிருட்டிமுன்பு விசுவமித்ரன் சிருட்டிபோலும்
குருவதனப் பெரியோர்கள் கவிதை முன்னே
குணமிலா வெண்கவிதைக் கொள்கை தானே.

*காப்புப்பாயிரம் முற்றிற்று*

# நூல்

## 2. பள்ளிகள் வரவு

*கலிப்பா*

1. மாவளமுஞ் ❑ சேர்ந்திலகு மணிவளமு மேகொழிக்கும்
பூவளமும் வையா புரிவளத்துக் கதிபதியே
நாவளத்துக் கேற்கவரு நல்வளஞ்சேர் சிவகிரியான்
✦ பாவளமுஞ் சேரவயற் பள்ளியர்வந் தெய்தினரே.

## வையாபுரிப்பள்ளி வரவு

இராகம் : சௌராஷ்டிரம். ஆதி தாளம்.

2. திங்கள் நுதல் மஞ்சணைப் பொட்டும்
இங்கிி தப்பேச் சில்வெகு பகட்டும்
செங்கமுகக் கழுத்தினில் மெட்டும்
சிறந்ததைத் தட்டும்
சங்ங்கு தாலி மணிவட மிலங்கக்
கொங்கை மதக் கோடுகள் குலுங்கக்
சந்த்ரோதய வதனமுந் துலங்கச்
சரிவளை யலுங்க.

பா—ம் : ❋ 'நால்வருக்கும்'
❑ சேர்ந்துலவு
✦ பாவளஞ்சேர் பண்ணைவயற்

கொங்கு யரு மடவன்ன நடையும்
தங்கக் கொடி போன்றசிற் றிடையும்
கோலத்தினுக் கேற்றபட் டுடையும்
குழைசொருக் கடையும்
வங்க ணஞ்செய் திருநீறு பூசிச்
செங்க மலக் கைகளை வீசி
வையாபுரிப் பள்ளியும் வந்து
தோன்றி னாளே.

## பழனிப்பள்ளி

### *கலிப்பா*

3. தெள்ளித் தெளியவைத்த தேனுந் தினைமாவும்
அள்ளிப் புசித்தமுரு*கன் பண்ணைப் பள்ளியர்க்குட்
கள்ளி மருந்திட்டுக் கள்ளியவ ளாமிளைய
❑ பள்ளி வருமழகைப் பார்க்கவிழி கொள்ளாதே.

தரு
இராகம் : சௌராஷ்டிரம். ஆதி தாளம்

4. மஞ்ஞ்சள் மணம் வீசிய மெய்யும்
கொஞ்ஞ்சிப் பேசி யாடிய கையும்
மலைமுலையுஞ் சுமையினா னையும்
✳ மருங்கலகுப் பையும்,
பஞ்ஞ்சி லைக்கெண் டைகளென விழியும்
கிஞ்ஞ்சு கவாய்ப் பசுங்கிளி மொழியும்
பாக்குத்தான் தின்றபல் லொளியும்
படர்ரோம வழியும்.

---

பா—ம் : * 'கையன் பண்ணை'
❑ பள்ளச்சி யாரழகைப் பார்க்கப் பசிபோமே.
✳ மருங்கலகுப்பையும் — இடையிற் செருகிய பாக்குப்பை.
அலகுப் பாக்கு—மெல்லியதாய்க் கத்தரித்து வேகவைத்த பாக்கு.

ரஞ்ஞ்சி தமிஞ் சியகொண்டைச் சொருக்கும்
மஞ்ஞ்ச னப்பின் புறஞ்சரிந் திருக்கும்
நாடினவர் மனத்தையு முருக்கும்
❊ நடைசெல்லுஞ் செருக்கும்
செஞ்ஞ்சந் தனப் பொட்டொளி மின்ன
அஞ்ஞ்ச னமா மடமயி லென்னத்
தென்பழனிப் பள்ளியும் வந்து
தோன்றி னாளே

## 3. பள்ளன் வரவு

### கலிப்பா

5. அமரர்சிறை ❊ மீட்டருளி யருணகிரி விசையகிரி
நமதடியா னென்றவர்சொன் ◗ னாற்கவிதைக் காகினவன்
சமரமிட்ட சூரனையுஞ் சத்தியினாற் ✱ சத்தி செய்யும்
குமரவேள் ▮ பன்னைக் குடும்பன்வந்து தோன்றினனே.

### தரு

இராகம் : குறிஞ்சி. அடதாளச் சாப்பு

6. உன்னிப்பேசி யேயுலாவி
மின்னியசந் திரகாவி
யுருமால்த லையிற்கட்டி
யோடியதட்டிப்
பின்னுமுன்னி டுப்பிற்கட்டி
வன்னச்செங்கச் சையைக்கட்டி
பேசிக்கைத்த டியைவீசிப்
பிறைநீறுபூசிச்
சன்னமாய்மீ சைமுறுக்கிக்
கன்னப்பரி சைநறுக்கிச்

---

பா–ம் : ❊ நடைசெல்லச் எனவும் பாடம். ❊ 'மீட்டருளுங் கருணை'. ◗ னாட்கவிதைக். ✱ சத்திசெய்யும்–விருதுக்கொடி செய்யும். ▮ பண்ணைவயற் குடும்பன்.

சாராயவெ றிகதித்துத்
தாவிக்குதித்து
மன்னியக தம்பவாசம்
தன்னுடம்பி னிலேவீச
வையாபுரிக் குடும்பனுந்
தோன்றி னானே.

## 4. பள்ளன் தன் பெருமை கூறல்

### கலிப்பா

7. நீர்க்கும்பன் கோட்டுமதி ❑ நிகர்பன்றிக் கோட்டிணைக்கு
மோர்க்குடும்பன் கனகசபை யெம்பிரா னுந்தருவோன்
பார்க்குடும்ப னார்கிருபைப் பங்கயஞ்செய் யுங்குமரன்
பேர்க்குடும்பன் தன்னுடைய பிரதாபஞ் சொல்லுவனே.

*சிந்து*

இராகம் : குறிஞ்சி, அடதாளச்சாப்பு

8. முத்துக் கீடாய்ப் புவியில்நெல்
வித்தைப்பொலி யுண்டுசெய்து
முறையாயறாச் செங்கோலுக்கு
மூன்று செங்கோலாய்
வித்தாரமு ழக்கோல்தாங்கி
நித்திலமு டிக்கிணையாய்
மேதினியிற் செந்நெல்முடி
வேண்டிப்படைத்தோன்
சித்திரஞ்சேர்ந் தருள்பல
பத்திரனுக் காசிதந்த
தேவேந்திரப் பள்ளனுநான்
செங்கழுநீர்சேர்

---

பா—ம் : 'நின்ற பன்றிக்கூட்டினுக்கும்'

கொத்துலவு மார்பனாகி
எத்தலம்போற் றும்பழனிக்
குமரற்க டிமையான
குடும்பனானே.

9. சத்திசேர்சி வகிரியைச்
சுற்றிவலஞ் செய்யார்காலைத்
தானேயேர்க் காலிற்பூட்டித்
தன்❖கொடிக்காலில்
மொத்துண்டுவி ழப்போடுவேன்
பத்தியாய்ச்ச டாட்சரத்தை
முழுதுமறி யாதார்க்குக்
கொழுப்பாய்ச்சுவேன்
எத்தனைசெ யல்பெற்றாலும்
முத்துக்கும ரேசனையும்
ஏழிக்கையாய்ப் போற்றார்கையை
மேழிக்கைசெய்வேன்.
வத்திரங்க ளோராறும்ப
டைத்தமுரு கையன்பண்ணை
வையாபுரிக் குடும்பனு
நானேயாண்டே.

## 5. பள்ளியர் குடித்தனங் கூறல்

*கலிப்பா*

10. பவ்வத் தறலினுக்கும் பருப்பதத்தி னிற்குமிடை
❋குவ்வித்த சூரர்கிளை குடிக்கும்வடி வேல்விடுத்தோன்
□திவ்யபரஞ் சோதியெனுஞ் சிவகிரிவேள் தாள்போற்றிக்
கொவ்வையிதழ்ப் பள்ளியர்தங் ◗குடித்தனங்கள் கூறுவரே.

---

பி.ம் : ❖ தொடிக்காலில் ❋ 'குவ்வத்த'
பா–ம் : □ 'திவ்வியப் பரஞ்சோதி ◗ குடித்தரங்கள்'
' குடித்தகைமை '

# மூத்தபள்ளி

தரு

இராகம் : நாதநாமக்கிரியை. ஆதி தாளம்

11. காசியிம்மா சேதுமட்டும
தேசப்பிரக் கியாதியான
கன்னன்வி சையகிரிச்
சின்னோவய்யன்
ராசனெங்க ளதுபிர
யாசையத றிந்ததுரை
நாட்டினிற்பள் ளருக்குளே
மேட்டிமைபெற்றோம்
நேசித்துத்த லத்திற்பிர
காசமாஞ்சி வகிரியும்
நிலைத்திடுமந் நாளிலிந்தத்
தலத்தில்வந்தோம்
❊ வாசனன்சி வகிரியுல்
லாசனுக்க டிமையான
வையாபுரிப் பள்ளியும்
நானேயாண்டே.

12. அன்றென்னையு முரிமைப்பெண்
என்றஞ்சுவ யதினிலே
அருப்பம்வ ராதமுன்பு
மறித்துக்கொண்டான்
நின்றவன்கா லாற்சொன்னது
நன்றென்றுகை யாற்செய்குவே
னென்னைத்தள்ளி நில்லென்று
முன்னேசொல்லான்

பி—ம் : ❊ 'வாசன்'

❊ மன்றல்வாழ்க் கைப்பட்டநாள்
அன்றுதொடுத் துப்பள்ளன்
மனையிற்பால் பொங்கினாற்போல்
தனமுமாச்சு
வென்றிவ ராககிரிக்
குன்றுமேல் விளக்குப்போல்
விளங்குங்கு லத்தில்வந்து
❏ வளர்ந்தேனாண்டே.

## இளைய பள்ளி

13. செல்லமா கவளர்ந்த
நல்லபெண் வேணுமென்று
தேடிப்பார்த் தென்னைக்கட்டிக்
கூடிக்கொண்டான்
நல்லவ ளென்றுநானும்
எல்லோர்க்கும் பேரெடுத்து
நாத்திமார் நங்கைமாரை
வாழ்த்திக்கொள்வேன்
பொல்லாத வளென்றுதான்
சொல்லாத தைச்சொல்லிப்
புருசன்வை தடித்தாலும்
வரிசைவிடேன்
தில்லையத்துக் காட்டாளி
யல்லவேயொ ருவர்போலத்
தென்பழனிப் பள்ளியும்
நானேயாண்டே.

## 6. பள்ளியர் நாட்டுவளங் கூறல்

### கலிப்பா

14. கோட்டுவள மெல்லாங் குயில்வளமும் வண்டினத்துப்
பாட்டுவளங் ❖ கூட்டிநிற்கும் பரப்புவளம் பூத்தமலர்க்

பி–ம் : ❊ மன்றில், ◗ வென்றில்வராக, ❏ "வாழ்ந்தே, ❖ கூட்டினுக்கும்

காட்டுவள மருதவளங் ❋ காவளவை யாபுரிநல்
நாட்டுவளந் தன்னையொரு நாவளத்தாற் கூறுவரே.

# சிந்து

## மூத்தப்பள்ளி

இராகம் : யதுகுலகாம்போதி, அடதாளச் சாப்பு

15. புன்னை யேறிமந் திதென்னை பாயும்
புனமெ லாமுருக னடிமலர் தோயும்
அன்ன மொன்றுக்கொன் றூடலாற் காயும்
அனங்கன் சாத்திரத் தைக்கிள்ளை யாயும்
மின்னுந் ❑ தேனிறாற் சுமந்தந்த வேயும்
வெளிறு பாதிரிச் சோலையிற் சாயும்
மன்னுங் கற்பக நாடெங்குஞ் சூழ்ந்த
வளர்வை யாபுரி நாடெங்கள் நாடே.

## இளையபள்ளி

16. மாமரம் வெய்யோன் தேரைத் தடுக்கும்
மந்தி வண்டுக்குக் கனியைக் கொடுக்கும்
பூமியி லிந்திர கோபம் படுக்கும்
புயல்கண்டு சிங்கம் வாலை யொடுக்கும்
தாமரை முத்தை யன்ன மெடுக்கும்
தன்முட்டை யென்று சிறகி லொடுக்கும்
தேமலர் வாவி கூவநி றைந்த
சிறந்த தென்பழனி யூரெங்க ளூரே.

---

பா—ம் : ❋ 'காவளவை'
❑ 'தேன்ராட்டைச்'

### மூத்தபள்ளி

17. தாதவிழ் சந்த்ர காந்தி நிலாவும்
சாளர வாயி லெங்கு முலாவும்
கோதி லாமேடை யைமுகில் தாவும்
கொடித்துசம் பானு குதிரைமெய் நீவு
மாதி ❊ யாஞ்சோலை யிற்குயில் கூவு
மதின்மீ திற்காவி மலரையுந் தூவும்
மாத விமரு தாவள மோங்கிய
வளர்வை யாபுரி நாடெங்கள் நாடே.

### இளைய பள்ளி

18. தண்டா மரையிற் சேர்ந்தன்னப் பேடு
சருவிக் ❑ கிரீடிக்கத் துணையன்னந் தேடும்
வண்டி னங்களுங் கீதங்கள் பாடும்
மந்தி கள்சத்த தாளங்கள் போடும்
அண்டி யேகரடி தித்தியைக் கூடும்
அதுகண் டுமஞ்ஞை பூங்கொப்பி லாடும்
தெண்டா யுதக்கை வேல்முரு கையன்
சிறந்த தென்பழனி யூரெங்க ளூரே.

### மூத்த பள்ளி

19. அடிக்கக் கண்டது சூடு சுருணை
அதிரக் கண்டது பேரிகைச் சத்தம்
பிடிக்கக் ◗ கண்டதி ருசுடர்க் கிரகணம்
பிரியக் கண்டது கருப்பம்பா கெண்ணெய்
தடிக்கக் கண்டது பேதையர் கொங்கை
தனிப்பக் கண்டது யோகிய ருள்ளம்
வடிக்கக் கண்டது பூமலர் தேன்கள்
வளர்வை யாபுரி நாடெங்கள் நாடே.

---

பி—ம். : ❊ 'மாஞ்சோலை' ஆதியாஞ் சோலை — கற்பகச் சோலை.
❑ கிரீடிக்க வனனமுந் தேடும்.
◗ "கண்டது பானுவின் கிரணம்"

## இளைய பள்ளி

20. கதறக் கண்டது பெண்கள்சி லம்பு
 கலங்கக் கண்டது வெண்டயிர்க் கண்டம்
❊ விதுரக் கண்டது காக்கைகு யிற்குஞ்சு
 வெடிக்கக் கண்டது சரமல்லிக் காய்கள்
பதறக் கண்டது ❑ மதனவேள் பாணி
 பறக்கக் கண்டது பட்சிக் குலங்கள்
சிதறக் கண்டது பூஞ்சோலைப் புட்பம்
 சிறந்த தென்பழனி யூரெங்க ளூரே.

## மூத்த பள்ளி

21. மெச்சு றாலைக்கன் னல்முத்தந் தெறிக்கும்
 வேழம் பெண்க ளபயம் பறிக்கும்
செச்சை யில்பெண்கள் முகநிலா வெரிக்கும்
 ◗ செவ்வி மாமுக மலர்ந்ததைப் பரிக்கும்
அச்சு வத்தமும் ▮ விதுவை மறிக்கும்
 அருங்கு யிலுமாந் தளிரைக்கத் தரிக்கும்
மச்சு மாடகூ டகோபு ரங்கள்சூழ்
 வளர்வை யாபுரி நாடெங்கள் நாடே.

## இளைய பள்ளி

22. குடவ ளைக்குல மின்மணி கொழிக்கும்
 குஞ்சு மீனெதிர் பாலுண்டு களிக்கு
முடனை யேயதைக் கண்டாமை பழிக்கு
 முரம்பெல் லாமுந்தேன் பாய்ந்துதத் தளிக்கு
மடைவா யின்மச்சம் பாய்ந்துக ளிக்கும்
 மந்திக் குட்டிகள் நண்டைக்கண் டொளிக்கும்
திடவே திகையில் மும்முர சொலிக்கும்
 சிறந்த தென்பழனி யூரெங்க ளூரே.

---

பி—ம். : ❊ விதிரக் ❑ மதன் வெய்ய வாளி'
◗ "சேவிமுக மலர்ந்" ▮ "பிதுவை"

# 7. குறியிற் கூக்கேட்டல்

## கலிப்பா

23. ❄ நாவாயா னைச்சிறையி னாட்டிவைத்தோ ❑ னாட்டிலொன்றும்
பாவாயே மாந்தளிரைப் பாராய்கா ◗ ரொன்றுகுழற்
காவாயி லங்குமென்றே களறியே கடைசியர்கள்
கூவாயென் றந்தக் குயின்மொழியைக் கூறுவரே.

## சிந்து

இராகம் : நாதநாமக்கிரியை. சம்பை தாளம்

24. சத்துருசங் காரனெங்கள்
பழனிச்சிவ கிரிவேலன்
சந்நிதியுந் தழைக்கவே – கூவாய்குயிலே

அத்தர்சிவ பத்தரரி
பத்தர்விப் பிரமர்களும்
அம்புவியில் வாழவே – கூவாய் குயிலே

புத்திரர்ப சுக்குலங்கள்
கற்புடைய பத்தினியர்
பொற்புலவி வாழவே – கூவாய் குயிலே

வித்வசன ரும்பெரிய
தத்துவமு ணர்ந்தவரு
மேன்மைபெற்று வாழவே – கூவாய் குயிலே

25. திங்களுமும் மாரிபெய்(து)
எங்கும்விளை வேறவே
செங்கோன்மை தழைத்தோங்க...கூவாய் குயிலே

---

பி–ம் : ❄ 'நால்வாயானை' ❑ 'லென்றும்' ◗ 'ரென்று'

பொங்குமுயர் வையாபுரி
நாடுங்கற் பகநாடு
போற்செழித் தோங்கவே–கூவாய் குயிலே

வங்கார சமுத்திரமை
யன் பள்ளிக் குளமுதலாய்
வையாபுரிக் குளநிறையக்–கூவாய் குயிலே

கங்குல்செறி யாறாறு
நூறூருய ரட்டமங்
கலமீராறு பள்ளியோங்கக்–கூவாய் குயிலே

26. விருதுகட்டா ரிராயன்
கருதுவாகைத் தொடையலணி
வேடர்குலந் தழைத்தோங்கக்–கூவாய் குயிலே

திருமருவு புயசயில
வேலச்சின் னோவதுரை
தர்க்காயு சாயிருக்கக்–கூவாய் குயிலே

மருவுலவு சண்டன்வங்கி
சம்வோவு மஞ்சள்மணம்
மாறாமல் வாழவே–கூவாய் குயிலே

துரைவிசைய கிரிவேலச்
சின்னோவய் யன்பட்டந்
துருவப்பட்டம் போல்விளங்கக்–கூவாய் குயிலே.

## 8. மழைவேண்டித் தெய்வம் பராவல்

### *கலிப்பா*

27. கூடிக் கலகமிட்ட கொள்ளையிட்ட சூரனையும்
பூடிற்றுப் போகப் பொருதமுரு கையனையும்
பாடினார் பொங்கலிட்டுப் பள்ளரெலாங் கூட்டமிட்டுத்
தேடிக் குரவையிட்டுத் தெய்வநிலை போற்றுவரே.

*சிந்து*

இராகம் : நாதநாமக்கிரியை. ஆதி தாளம்

28. பாடியசி வகிரிமு
ருகனார்பண்ணை—வயல்
பள்ளரெல்லோ ருங்கூடி
வெள்ளிதனிலே

ஆடுவெட்டிப் பொங்கலிட்டுச்
❋ சாடுநிறைய—இரண்
டாயிரம் ❑பழங்கள் வைத்துக்
கோயிலின்முன்பு

வேடிக்கையாய்ச் சாம்பிராணித்
தூபங்கள் போட்டுப்—பயிர்
விளையவே நல்லநல்ல
மழைபெய்யவே

கூடிநின்ற கொள்ளுக்கஞ்சித்
தெய்வங்களெலாம்—வந்து
கும்பிட்டுப் போற்றுங்கடா
கம்பளத்தாரே.

29. வாழ்த்துங்கோ மீன்பாரைக்
கன்னிமாருக்குப்—பச்சைப்
பாளைபரப் பும்பால்
நாழிவையுங்கோ

காத்தவ ராயனைப்
போற்றிக்கொள்ளுங்கோ—நம்மள்
கன்னடிய மூர்த்தியை
முன்னேதொழுங்கோ

பா—ம் : ❋ "சாடு" — பெரிய கூடை ❑ "பழம்வைத்து"

தீர்த்தப்பிர சன்னரான
ரெங்கசாமியை—நீங்கள்
    தேடியே தெண்டனிட்டுப்
    பாடியாடுங்கோ

தோத்திரஞ்செய் துதாடகை
நாச்சியாருக்கு—நல்ல
    தொண்ணூற்றஞ் சுருவாரம்
    பண்ணிவிடுங்கோ.

30. குன்னுவப்பி டாரியம்மன்
தன்னைக் கும்பிட்டே—யொரு
    குட்டிவெட்டிப் பொங்கலிட்டு
    முட்டைவையுங்கோ

மன்னுலகில் வாழ்மருத
காளித்தாயார்க்கு—நீங்கள்
    வழக்கிட்டுக் கொள்ளாமல்மா
    விளக்குப்பாருங்கோ

கண்ணான வம்மாபட்டிக்
கருப்பனுக்கே—யொரு
    காங்குக்கச்சை கையரிவாள்
    வாங்கிவையுங்கோ

பண்ணிகுத்தி யணையேத்தஞ்
செய்தவிடத்தில்—நீங்கள்
    பக்தியுடன் சாராயக்
    குத்திவையுங்கோ.

## இதுவுமது

இராகம் : சங்கராபரணம். அடதாளச்சாப்பு

31. நாடெங்கும் வாழ்ந்திடவே—வையாபுரி
நாடுசெ ழித்தோங்கப்
பூடெங்கு மாதமும்
மாரிபொ ழியவே
பூம்பாரை வேலவற்கு.

32. இளநீர் முப்பழத்தால்—நயிந்தே
இன்றைக்கு நன்றாக
வளமாகத் தானேய
பிசேக மும்பண்ணி
வைக்கிறோ ❉ மெண்ணையளே.

33. கார்சேரு வையன்துறைத்—தலைக்குத்துக்
கன்னிமார்க் குத்தானே
வார்சேருங் காதோலை
கரியம ணிவளை
வைக்கிறோ மெண்ணையளே.

34. பாங்கான பேழைக்கன்னி—மாருக்குப்
பச்சைப்பா ளைகரும்பு
வாங்கியி துவெல்லாம்
வெள்ளிக்கி ழமைக்கு
வைக்கிறோ மெண்ணையளே.

35. கணபூத நாச்சிமார்க்கு—மங்கேவாழுங்
கருப்பண ராயனுக்கும்
◗ வங்கிரொட் டிசாரா
யங்கரு வாடுடன்
வைக்கிறோ மெண்ணையளே.

---

❉ எண்ணையளே—என்று சொன்னீர்களே (மரூஉ)

◗ வங்கிரொட்டி – (Bun Cake)– பன்ரொட்டி

36. பேரணைக் கருப்பனுக்கு—நயிந்தே
பேசாம லாடுவெட்டி
❄ வருந்திப்பொங் கலிட்டுக்
கள்ளுஞ்சுள் ளுஞ்❏சோறும்
வைக்கிறோ மெண்ணையளே.

37. சின்னணைக் கன்னிமார்க்குக்—கருப்புத்
தெய்வத்துக் காடுவெட்டிப்
பொன்பேழை வைத்துபொங்
கலிட்டு முப்பூசை
போடுறோ மெண்ணையளே.

38. கம்மல பட்டத்தாணி—யணையடிக்
கருப்பனுக் குத்தானே
செம்மைபெ றக்குட்டி
வெட்டிப்பொங் கலிட்டுச்
செய்யுறோ மெண்ணையளே.

39. ஆலடிக் கருப்பனுக்கு—நயிந்தே
ஆடுவெட் டிப்பொங்கலிட்
டேலவே சாராயங்
கஞ்சா◗ரொட் டியும்வைத்
திடுகிறோ மெண்ணையளே.

40. பூமிக்கன் னிமாருக்குப்—பச்சை
போடுறோ மென்றுசொல்லித்
தாமசஞ் செய்தல்ல
வோமழை தன்னைத்த
டுத்துக்கொண் டிருக்குதுபார்.

பி—ம் : ❄ வருந்தியே, ❏ சோர், ◗ ரொட்டிவைத்

41. பவளக்கொ டியம்மன் – மனதாரப்
பருங்கடா வெட்டியிப்போ
சவரணை யாகவே
அந்தம்மன் கேட்டதைத்
தான்படை யுநயிந்தே.

42. விளாங்கோம்பைப் பெருமாளையும் – நயிந்தே
வேண்டியே கைதொழுது
பழம்பாக்கு வைத்துக்கும்
பிட்டுநை வேத்தியம்
பண்ணுறோ மெண்ணையளே.

43. களைமிகுந் தருள்பொழிதா – மரைப்பாடிக்
கன்னிமார்க் குத்தானே
இளநீர்பச் சைப்பாளை
காதோலை சிற்றாடை
ஈந்திட்டோ மெண்ணையளே.

44. ஒடிக்காட்டுக் கன்னிமார்க்கு – மழையும்
உடனேயி றங்கவேதான்
வெடிப்பாகத் தெற்காகப்
பூசையும் போட்டுவி
ழுந்துகும் பிடும்களடா.

45. போதலைக் ❋ கூட்டாற்றுக் – கருப்பணன்
புந்திகு ளிர்ந்திடவே
கோதிலாக் குட்டிவெட்
டிச்சாரா யம்ரொட்டி
கும்பிட்டு வையுங்கடா.

---

பி–ம். : ❋ குட்டத்துக்

46. பாம்புவ ரைக்கன்னிக்கு – நயிந்தே
பட்டுச்சிற் றாடைவைத்துச்
❋ சாம்ப்ராணி யுமிட்டுக்
கைக்கட்டுப் பவளமுஞ்
சாத்துறோ மெண்ணையளே.

47. வலங்கையப் பன்தனக்கும் – இரட்டை
மருப்பிடாக் குட்டிவெட்டித்
துலங்கப்பொங் கலிட்டுக்
கள்ளுஞ்சுள் ளுஞ்சோறும்
சுத்தியே வையுங்கடா.

48. அந்தப்ப டிக்குப்பள்ளர் – கும்பிட்டே
அங்கேகு ரவையிட்டுச்
சிந்தைம கிழ்ந்துக
களியாட்ட மாடிச்
சிறந்திடும் வேளையிலே.

## 9. வெறியயர்வேலன் நல்வர மளித்தல்

இராகம் : தோடி. ஆதிதாளம்

49. இப்படிக்குப் பள்ளரெல்லாம்
தெய்வத்தைப்போற்றி – யங்கே
இருந்திடுஞ் சமயத்தில்
கருந்தும்பிபோல்

❑ மைப்படிவப் பெரியாள்மேல்
சன்னதம்வந்து – வெகு
மழைதந்தோ மென்று சொல்லிக்
களைதீர்ந்தார்கள்.

பி–ம். : ❋சாம்ப்ராணியுருட்டுக்கைக்கட்டுப், ❑ ‘மைப்படியும்’

கொப்பரைச்சா ராயத்தை
ரொப்பக் குடித்து – வெறி
கொண்டுதலை சுற்றவிழி
ரெண்டுஞ்சிவக்க
சுப்ரமண்யன் விசையகிரி
வேலச்சின்னோவன் – ❈பாடும்
துய்யபள் ளேசல்பாடிப்
பையவேவந்தார்.

## 10. மழைக்குறி யோர்தல்

*கலிப்பா*

50. ❑ தேநிலத்தில் வளம்பெருகத் தீனர்மனங் களிப்பேறப்
பூநிலத்திற் சிவகிரியான் பூசைநிறை வேறிவளர்
கோநிலத்திற் பள்ளர்வளங் குடும்பமெலா மீடேற
மாநிலத்தில் விளைவேற மழைக் குறியுண் டாகியதே.

*சிந்து*

இராகம் : காம்போதி. அடதாளச் சாப்பு

51. கொங்கு மின்னல் ஈழ மின்னல்
கூடி மின்னுதே–யொரு
கோடி வானம் பாடி மழை
தேடி யாடுதே

எங்கு மேகீழ் காற்ற டித்துச்
சங்கை யில்லாம–லிப்போ
ஏற்ற முள்ள◗கொம்பு சுற்றிக்
காற்ற டிக்குதே

---

பி–ம். : ❈ 'சொன்ன', ❑ 'தேனிலத்திலே வழமைத்தீனர்'
◗ கொம்பு சுற்றிக் காற்றடித்தல்–காற்றுத்திசை யறியொணா வண்ணம் குழறிக்குழறி யடித்தல்.

பங்கத் தினால் தன்வ ளையை
நண்ட டைக்குதே–கங்கு
பட்டம்பக லிலேசுற்றி
வட்டம் போடுதே

துங்கச் சந்த்ரன் பரி வேடம்
போட்டி ருக்குதே–எறும்பு
துழனியோடு ❄ பேர்வதைப்பார்
பழனிப் பள்ளீரே

52. சண்மு கந திய ணைகால்
கொல்வா யும்பார்க்க–நடுச்
சாமமதில் ஏமமதில்
நாமளே போவோம்

வண்மைச் சம்பைக் ❑ கொங்கா ணியும்
சம்பா தியுங்கோ–வொரு
வள்ளம்எண்ணெய் சம்பாதித்து
மெள்ள வையுங்கோ

திண்மை யுறப் பந்தத் துக்குப்
பழைய துணியும்–வேணும்
சீக்கிரமாச் சம்பாதியும்
சாக்கி ரதையாய்

தொன்னை மரந் தெப்பங் கட்டத்
தன்னிக்க வேணும்–இப்போ
சுளுந்துக்கம்பி லிருநூறு
வளர்ந்த தாய்வேணும்.

---

பி–ம். : ❄ 'போவதைப் பார்'
❑ 'கொங்காடையும்'

# 11. மழைகாலூன்றல்

## கலிப்பா

53. சேலூன்றும் பொய்கைச் சிவகிரியான் சந்நிதிமுன்
பாலூன்று மயிலாடும் பாரையின்மேல் மயிலாட
❋ வேலூன்று மேழ்புனலை மேய்ந்துகருக் கொண்டெழுந்து
காலூன்றி யேமுகிலுங் காலமுறை காட்டியதே.

### சிந்து

இராகம் : சௌராஷ்டிரம், மட்டியதாளம்

54. தடையில் லாமலே சசிம ணாளனை
விடைகொண் டெழுந்து படியுங்கார்
சண்மு கத்துறை வேலி னுமின்னி
விண்மு கத்தினி லரியுமாய்த்

தொடையில் விசைய கிரிச்சின் னோவய்யன்
கொடையைப் போலிரு வரையின்மேல்
சொரிந்த நளினத் தயனு மாய்ப்புனல்
விரிந்த சடிலச் சிவனுமாய்ப்

படைவி ழிக்❑கடை யரியு மாயன
நடையிற் றளருங் ◗கமலையாய்ப்
பதுமக் கலைமின் மடந்தை யாய்வெகு
புதுமைக் கிடமு மாகியே

திடமுற் றபுய சயில ▮வேடுவர்
படைவில் லுக்கிணை யாகவே
தேவ ரிந்திர தனுசு விளங்கப்
பூவு லகங்கள் செழித்தவே

பி–ம். : ❋ வேலூன்றியெனபுனல். ❑ கடையுமானன்
◗ கலையாயப் ▮ வேடர்.

# 12. வெள்ளம் வரவு

## குறிஞ்சியாறு

### கலிப்பா

55. நாகநக மேலமர்ந்த நாதன் ❊ சிவகிரிவாழ்
மோகனமின் கொங்கையின்மேல் முத்தாரம்போல் விளங்க
வாகனகன் விசையகிரி வாக்குப்ர தாபமென்னப்
பூகனகத் தருனையது பொருந்திவெள்ளமாகினதே

*சிந்து.*

56. துறையிற் சிதறி விரவி யேதட
வரையைக் கிழியப் பரவியே
துடியிற் குறிஞ்சி வனத்தி லேபுகுந்
தடியிற் குறிஞ்சிப் புனத்திலே

திரையை மோதிப் பெருகி யேயிரு
கரையை மோதித் திருகியே
தினைப்பு னத்தையு நிரவு யேவொளிர்
❑ கனற்பு னத்தையு நிரவியே.

கரிய குறவர் பரணை யுமவர்க்
குரிய குடிலம் பரணையுங்
கானக் களிறு மயிலை யுமெடுத்
தேனக் களிறு மயிலையும்

முருக ரைப்போற்றி நாகத் தைத்தடிந்
திருக ரையிற்புன் னாகத்தை
முறித்துச் சாடிப் பாலை நிலத்தைக்
குறித்துத் தேடி நடந்ததே.

---

பி–ம். : ❊ சிவகிரிபரவு. ❑ கனற்புனத்தை – கன்னற்புனத்தை.

## பாலையாறு

### கலிப்பா

57. விண்மணியிற் பொன்மணியாம் வீரகண்டா மணிபுனைந்து
வண்மணிசேர் சிவகிரியில் வாழு நவமணியாம்
பெண்மணியா மயிலினங்காள் பேடைக் குயிலினங்காள்
கண்மணியாள் போனவிடங் காட்டுவீர் காட்டுவீரே.

### சிந்து

58. சுடுக ரத்திரு கள்ளி யுமனல்
படுங்குள் ளிச்சருங் கள்ளியுஞ்
சூரத்து வேலா முள்ளை யுமந்த
மரத்துப் பொந்து முள்ளையுந்

தடவிப் பிடுங்கி யாவை யுஞ்சிறு
வடிவ மாப்பொன்ன ராவையுஞ்
சமரி டும்வளைத் தடியை யுமதிற்
கமர்ப டுநிலத் தடியையும்

கடிக முகுக்குஞ் சினத்தை யுமதிற்
படிந்து கதிக்குஞ் சினத்தையும்
கறையா னெறும்புச் செலவை யுமதின்
மறவர் வாழ்மரச் செலவையும்

அடியொ டுதாவி மோதி யேயெங்கள்
வடிவே லர்பத மோதியே
அரிய பாலை வனத்தைக் கடந்தே
உரிய முல்லையிற் பாய்ந்ததே.

## முல்லையாறு

### கலிப்பா

59. வாசவெள்ளத் தோன்பணியும் வடிவேலன் மைத்துனன்வேள்
* பூசல்வெள்ளத் தாலுடலம் பொறுக்க முடியாதே
பேசவெள்ள முத்தனையா பெண்ணரசி சுந்தரமும்
ஆசைவெள்ள ❑ நீச்சென் னரையளவு மாகினதே

பி–ம். : * 'பூசைவெள்ளத்' ❑ 'நீச்சாயென்'

*சிந்து*

60. முல்லைக் கொடிதத் தளிக்க வேயதில்
குல்லைக் குமெத்தத் தளிக்கவே
மோதித் தயிர்சேர் கடத்தை யுந்தளிர்
சீதக் கவின்கோங் கடத்தையும்

மல்லிகைப் புதையுஞ் சமிதை யுமதில்
இல்லிற்கு டத்தில்வைத் தமுதையும்
வாரிச் சுருட்டிக் கவினத் தைநுரை
பாரீத் ❊ தென்புரக் கவினத்தைக்

கொல்லை யில்நடுந் தறியை யுமெடுத்
தொல்லையும் புகப்பத் தறியையுங்
குலவி வேணுக் குழலை யும்பட்டி
யுலவி மாப்பொறுக் குழலையுந்

தொல்லைத் தாம்புக் கயிற்றை யுமுரல்
❑ கல்லைச்சு வறிலங் கயிற்றையுந்
துலங்கு மேருவை நெருக்கி யேவெள்ளம்
இலங்கு மருதம் புகுந்ததே.

## மருதத்தாறு

*கலிப்பா*

61. மானவதி யாகும்வள்ளி மகுணன் சிவகிரியான்
கானவதி தோறலைந்து கவலைப் படுவேனோ
பானவதி கயலருந்து பவளக்கால் நாரையே
நானவதி படுவதையென் னாயகியோ டுரைப்பாயே.

---

பி–ம். : ❊ 'தென்புரற் கவினத்தை' ❑ கல்ல

### *சிந்து*

62. மருத நிலத்திற் சாடி யேகயல்
பொருத வுஞ்சுழிச் சாடியே
❊ வாழை யுமரிச் சுனத்தை யும்பூகப்
பாளை யுமரிச் சுனத்தையுங்

கரியெ னவுழும் பகட்டை யுழுத்துக்
குரிய குடிலம் பகட்டையுங்
கழித்துச் சாலிப் பணையை யுழுத்துக்
கொழித்துச் சாலிப் பணையையும்

இரதி வேள்கரக் கரும்பை யுநனி
குருமு ருகனார் கரும்பையும்
ஈந்து கதலித் தண்டை யும்புனல்
மேய்ந்த கதலித் தண்டையும்

அரிக்க ❑ திரையே சுருட்டி யேபயிர்
அரிக்க திரையே சுருட்டியே
அறுமு கன்றன்னைப் பணிந்து மேவெள்ளம்
மறுகு நெய்தலம் புகுந்ததே.

## நெய்தலாறு

### கலிப்பா

63. மனுபதியை மாமனெனும் வடிவேல ரைப்போற்றித்
தனுபதிவேள் பூங்கணையிற் றான்மெலியா மற்காமம்
எனுபதிநீங் கிப்புவியி விச்சித்த பெண்களையும்
அனுபவியா ◗ தார்சனன மாண்சனன மாகாதே.

---

பி–ம். : ❊ 'வாளையுமரிசனத்தையும் பூகப்பாளையுமரிச
னத்தையும்' ❑ திரையைச் ◗ தார்களுக்கு

### சிந்து

64. கடினத் திடுமுப் பளத்தை யுமதிற்
படிவுற் றிடுமுப் பளத்தையுங்
களரு படியி லவண முமெடுத்
தளறு சேர்கட லவணமும்
வடிவு றுஞ்செங்கா னாரை யுங்கமழ்
புடைவன் னச்செங்கா னாரையும்
வாரிச் சுருட்டி வலையொ டும்புனல்
பூரித் துவர வலையொடும்
இடிக ❊ ரைத்தள்ளி யறுத்த லுஞ்சற்று
மடிவி லாக்கொடைப் பொருத்தலு
மேதிச்சு ❑ ழலினீ ராறு டன்புகழ்
◗ பூதிப்பச் சைப்பா லாறுடன்
தடமி லகிய வரத்தா றுமுதல்
அடைவா யாறாது ▮ மோராறாய்ச்
சண்முக நதியும் பெருகி வார
தகைமை பாரும் பள்ளீரே.

## 13. ஆற்றுச்சிறப்புக் காண்டல்

### கலிப்பா

65. பூசித்தாள் சிவகிரியிற் புங்கவனார் தன்பதத்தை
நேசித்தாள் முத்தணிந்தாள் நீர்ப்பவளந் தந்தேயாழ்
வாசித்தாள் வேண்டி வணங்கினா ளென்மீதில்
ஆசித்தாள் பின்னு மரைப்பணைந்தத் தானிலையே.

---

பி—ம் ❊ ரைத்தண்ணியருந்தலுஞ்சற்..........பொருந்தலும்.
❑ ழலினாலாறுடன் ◗ பூதியும்பச்சைப் ▮ நூறுருஞ்

பாட்டு 64. மேதிச்சுழல்—எருமைக்கேணி ஈராறு – கல்லாறு, கானாறு
பூதி—பொருந்தலாறு
பச்சையாறு, பாலாறு, வரத்தாறு
இவ்வாறுகள் ஆறுங்கூடியே சண்முக நதி யாகிறது.

### சிந்து

66. அரிய நெய்தலைத் தாண்டி யேசிவ
கிரிமு ருகனை வேண்டியே
ஆழ்க டல்வாயைக் கிழிக்க வேபரந்
தேழ்க டலிற்போய்க் குழிக்கவே
பெரிய குரவை யயிரை யுழுவை
பெண்ணை பண்ணை சாளைமீன்
பெருந்த லைக்கருங் கண்ணி யவுரி
பெருக்கை துதிக்கை மூக்கைமீன்
பரவை பசலை திருக்கை வாளை
பயிந்தி கூனி மயிந்திமீன்
படலி கெளிறு * மணலை யாரால்
பாசிக் கொத்தான் தேளிமீன்
சரியும் வாளை கோளை பனசை
தான்துள் ளிவிளை யாடவே
சண்முக நதியும் பெருகி வார
தகைமை பாரும் பள்ளீரே.

### கலிப்பா

67. பதலைச் சிவகிரியின் பண்ணவனை யேபுகழ்ந்து,
குதலைமொழி முத்தேயுன் கூர்விழிவேல் பட்டபுண்ணில்
கதழ்முலைபடொட்டணத்தையொத்திக் காமநோய் தீர்ப்பதற்குன்,
இதழமுதச் சஞ்சீவி யீந்தாற் பிழைப்பேனே.

### சிந்து

68. விசையன் தவசு பண்ணி யும்☐வர
மிசையும் வராக கிரியின்மேல்
மின்ன லுடனே பொழிந்த மழைநீர்
சன்னல் பின்னலு மாகியே

பி–ம். : * மணலி' ☐ வரமிசையின்.

❊ திசைதோ றுஞ்சத்த நதிய ளென்னவே
திரண்டு ❑ கூடிய வெள்ளத்தில்
செங்கணி ராட்டுப் பசலி கசலி
செள்ளை சள்ளை பொத்திமீன்

இசைசே ரும்விண்ணி லெண்ணெய் மீன்முதல்
எரிகண் ணன்கரை வாசமீன்
இதுமு தலான மீன்க ளுங்குதித்
தெதிரேற வையா புரியிலும்

சசியெ னத்தண்ணீர் பெருகி மறுகாற்
றண்ணீர் வயல்தொறுந் தாவவே
சண்முக நதியும் பெருகி வார
தகைமை பாரும் பள்ளீரே.

# 14. பண்ணைத் தலைவன் வரவு

## கலிப்பா

69. கசாதிகளுஞ் சேருங் காலணைகொல் வாய்குளங்கள்
உசாவிடததண் ணீருமெங்கு மோடிப் பெருகிடவே
நிசாசரரை வென்றருளு நித்தன் சிவகிரியான்
விசாகனார் பண்ணை விசாரிப்பான் வந்தானே.

---

பி–ம். : ❊ "திசைசேருஞ்" சத்த நதிகளாவன :–
1. கங்கை. 2. யமுனை. 3. சரசுவதி. 4. நருமதை
5. காவேரி. 6. குமரி. 7. கோதாவரி
❑ 'கூய' எனவுள்ளது.

பாட்டு 66ல் பெரியகுரவைமுதல் பனசையீறாகவும் பாட்டு68ல் செங்கணி முதல் வாசமீன் முடியவுமுள்ளன மீன்களின் பெயர்கள்.

*சிந்து*

இராகம் : நாகவராளி, ரூபக தாளம்.

70. மூளிக் காது மூரலிட்ட
தாழி வயிறுங்—கட்டை
மொட்டைமீசை யுங்கருங்
குட்டைக்கழுத்தும்

பூளை யடைந்த கண்ணு
மூளை நாசியும்—பெரும்
போத்துரலை யேநிக
ரொத்தவிடையும்

ஊளை வாயுந் தலையிலே
மோளை மயிரு—மஞ்சி
பொத்தநரை யுஞ்சுரை
வித்துப்போற்பல்லும்

கேளிக் கையாய்ப் பேசிப்புல்லைக்
காளை யைப்போலே—முரு
கேரனைப்பார்த் துப்பண்ணைக்
காரனார் வந்தார்.

71. வந்த பண்ணைக் காரன்முன்பு
சந்தோ சத்துடன் – நல்ல
வட்டமிட்ட கோழியொரு
பெட்டியவலும்

பந்தி யாக வைத்துநின்று
வந்தனை செய்தே – எங்கள்
பண்ணைக்காரத் தேவரீரைக்
கும்பிடுகிறோம்.

*மந்தி வாயெம் மாண்டவரைக்
கும்பி டுகிறோங் – கீரை
மத்துப்போலத் தலையாரைக்
கும்பிடுகிறோம்
தொந்தி வயிற் றாண்டவரைக்
கும்பிடுகிறோம்..............................

..................................................................

............................................

72. கும்பிட்டபள் ளியர்க்குளே
குமரி யாரென்று–மெள்ளக்
கூர்ந்துபார்த்துச் சுவற்றின்மேல்
சாய்ந்திருப்பாராம்
❊ தம்பி யின்பெண் சாதியென்று
செம்பி மகளைப்–பாக்குத்
தாடியென் றவள் மேலே
ஓடி வீழ்வாராம்
வம்புந் தும்பும் பேசித்தடிக்
கம்பி னாலேயே–வீரி
மார்பிற்குத்தி யென்னுடன் பிர
தாபியென்பாராம்
சொம்பி மூத்த பள்ளிக்குத்தான்
ரொம்பச் சொல்லியே–புகை
சுத்தித்தரச் சொல்லிவாங்கி
வைத்துக் கொள்வாராம்.

73. தள்ளி நில்லா யென்றேயொரு
பள்ளி யைப்பார்த்துக்–கண்ணாற்
சன்னைக்காட்டிக் களத்தில்வா
பின்னையென்பாராம்

---

பி–ம். *மந்திவாயாண்டவரை' ❊ தம்பிபெண்.
பாட்டு71 கடைசியடியின் பிற்பாதி கிடைத்த
பிரதிகளில் இல்லை.

முள்ளிக் *காய்கள் கொண்டுவராக்
கள்ளி நீபோடி—யென்று
மூளிமகள் காத்தியைப்போய்க்
❊ கூளிகொள்வாராம்

கள்ளுக் குடித் தவர்போலே
துள்ளித் துடித்தே—யொரு
காலைத்தூக்கி நாச்சிமடி
மேலேவைப்பாராம்

குள்ளி மக ளாமிளைய
பள்ளி யைபபார்த்தே—யுன்றன்
குடும்பனெங்கே யென்றதட்டி
யிடும்புசெய்வாராம்.

## 15. மூத்தபள்ளி முறையீடு

*கலிப்பா*

74. வள்ளிமயி லான வனக்கொழுந்துக் காசைகொண்டோன்
வெள்ளிலைவேள் சிவகிரியில் வேலர்பண்ணைப் பள்ளருக்குள்
கள்ளனிவ னென்றுபண்ணைக்காரனொடு மூத்தபள்ளி
பள்ளன்மனக் கள்ளமெல்லாம் படிப்படியாய்ச் சொல்லுவளே.

*சிந்து*

இராகம் : சங்கராபரணம். அடதாளச்சாப்பு

75. குத்திரப் பள்ளன்
சித்திரங் கேளாய்கைக்
கோலுங்கை தீண்டான்
காலணை பாரான்

---

பி—ம். : *காய்கொண்டுவந்த. ❊ கோளி.

எத்தனை நானும்
புத்திசொன் னாலுங்கண்
ணேறிட்டும் பாரான்
சோறிட்டா லுண்ணான்

முத்தியை வைப்பு
வைத்துக்கொண் டானென்மேல்
மோட்டுப்பள் ளியை
வாட்டுக்கு வைத்தான்

சித்திரை மாதம்
பத்துப்ப சுவிற்றுச்
செட்டிக்குக் கடன்
கட்டினா னாண்டே.

76. வள்ளத்தைப் பனங்
கள்ளுக்கு விற்றான்
வளவைச் சுற்றுவான்
உழவையும் பாரான்

பள்ளனு மாட்டை
வெள்ளென வேவந்து
பட்டி திறந்து
விட்டிட மாட்டான்

கள்ளியி ளைய
பள்ளியின் வீட்டைக்
காக்கப் போவான்வ
யல்காக்கப் போகான்

பள்ளேச லுக்குங்
கள்சாரா யத்துக்கும்
பத்தெரு தையும்
வித்தான்கா ணாண்டே.

# 16. இளையபள்ளி முறையீடு

## கலிப்பா

77. கொங்கைமத யானையெனுங் குஞ்சரியைச் சேர்ந்தருளும்
புங்கவனார் சிவகிரியிற் புனிதர்பண்ணைக் காரனுடன்
*சங்கையின்றிப் பள்ளனையுந் தன்வீட்டிலேயொளித்தே
எங்கேயோ போனானென் றிளைய பள்ளி கூறுவளே.

### சிந்து

இராகம் : நவரோசு ஆதிதாளம்.

78. உட லுக்குச் சுத்த மில்லை
என் றிருந் தபள் ளனை
உடனேயே மூத்தபள்ளியும்
விடி யக்கா லமெ ழுப்பி
யணை கொல்வாய் பார்த் துவா
வென்றுவிள்ள வேபோனாள்
அடி யாளு மடுப் பில்நெ
ருப் பிட்டுக் கஞ்சி காய்ச்சி
அருந்தின தில்லையும் மாணை
நடு வாற்றி லிறங் கிப்போ
கையி லென்ன மோசங் கள்
நடந்ததோ வறிந்ததில் லையே
வடி வாய் மூன்று நாளா
கியும் போன பள் ளனை
வரக்காணோம் பண்ணையாண்டே.

79. அப்ப டிக்கு மொருகாரி
யம்பள்ள னுக்கானால்
அடியாள்ச ரீரம்வைத்திரேன்

---

பி-ம். : * சங்கையில்லாப்;

மைப்படி யும்பொ ழில் சூழ்வை
யாபுரிக் குளத்திற்போய்
மதகைத்தி றக்கணுமென்றே
எப்ப டியோ முக்குளித்
தானோ வந்த வேளையில்
என்னமோ சங்கள் வந்துதோ
செப்பி னேன்தே வரீர்சித்த
மென்பாக்கி யங்குமரன்
செயலையறி யேன்கா ணாண்டே.

# 17. பண்ணைத் தலைவன் இளைய பள்ளியை உரைப்பல்

*கலிப்பா.*

80. உள்ளுறப்பள் ளனைவீட்டி லொளித்துவைத்துக் கொண்டுமிப்போ
விள்ளுறாய் மூத்தபள்ளி விண்டதுமெய் யாச்சுதடி
கள்ளிநீ யென்றுபண்ணைக்காரனுமே * தென்பழனிப்
பள்ளியைக்கோ வித்தமட்டிப் பதைபதைத்து ❑ விள்ளுவனே.

*சிந்து*

இராகம் : நாத நாமக்கிரியை ஆதி தாளம்

81. மட்டிப் பேச்சைப் பேசியடி
ஒட்டில்கர ணம்போடுகிறாய்
கெட்டி யாச்சு தென்பழனி
நட்டணைப்பள்ளி

82. வீட்டி னிற்பு ◗ குந்தமுதைப்
போட்டிடுவே னதற்குமுன்
காட்டி லோடிப் பள்ளனையுங்
கூட்டிவாகள்ளி.

பி–ம் : * இளைய. ❑ நின்றானே ◗ 'குந்துமுதை'

## 18. பள்ளன் வெளிப்படல்

83. அந்த வகை கேட்டுப்பள்ளன்
சிந்தை நொந்து கையிலஞ்சந்
தந்து பண்ணைக் காரன்காலில்
வந்துவிழுந்தான்.

## 19. பண்ணைத் தலைவன் பண்ணைச்செயல் வினாவல்

84. விழுந்த பள்ள னையும்பார்த்தே
எழுந்தி ருடா வென்று சொல்லிக்
கொழுந்து *வெற்றி லையும் பாக்கும்
நெகிழ்ந்து மளித்தான்.

85. கத்த னூழி யத்துக்குநீ
புத்தி யாய்ந டந்துகொண்டால்
அத்த னைக்கும் வாழ்வுண்டென்று
புத்தியுஞ்சொன்னான்.

86. ❑தென்ன மையாய்ப் பள்ளனைப்பார்த்த
திந்நே ரத்தில் பண்ணைக்காரன்
மன்னன் வேலன் பண்ணைச்சேதி
என்னடாவென்றான்

## 20. பள்ளன் பண்ணைச்செயல் கூறல்

### கலிப்பா

87. வெல்லுஞ் சிவகிரியில் வேலர்பண்ணைக் காரனுக்கு
நெல்லுவகை மாட்டுவகை நீண்டகொழுக் கொண்டிவகை
நல்ல கலப்பைவகை நகத்தடியு மேழிவகை
◗வல்லபரம் பும்பள்ளன் வகைகண்டு சொல்லுவனே.

---

பி–ம். : * பாக்கும் வெற்றிலையும் ❑ 'தன்னாண்மையாய்ப்'
◗ 'மல்லுலவும் பரம்புவகை செலவு சொல்லுவனே'

### *சிந்து*

இராகம் : யதுகுல காம்போதி. அடதாளச்சாப்பு.

88. செலவான நெல்லைக்
கேளுமெ ணல்வாரி
சிவகிரி வேலர்
சத்திக்குள் ளாச்சு
வலிமைசெய் விசைய
கிரிவேலச் சின்னோவன்
வங்கிநா ராயண
னைக்கை கொண்டான்
சலிகைசெய் தேயிடைக்
காடான்ப ரந்து
தனியே போனது
மளியாய மையோ
புலையரா கியவு
லோபியர் வீட்டிற்
புழுதிய டைந்து
போச்சுகா ணாண்டே.

89. மருவிய ராம
பாணமெ திர்த்தோரை
வாணாளை வாங்குந்
தண்ணீரை வாங்கும்
விரவிக்கல் லாற்றில்
கல்லுண்டை மெத்த
விழுந்ததே யினியும்
பயிரிட லாமோ
பரிவுசேர் பெண்க
ளுக்குக்கோ தும்பைப்
பாசி யானதால்
அதனைக்கை விட்டேன்

சுருணைவா ரிகதிர்
தன்னையும் வாரிச்
சும்மா தானிருக்
காதுகா ணாண்டே.

90. அழகிய மணவா
ளனிலத் துக்கே
யாகாமல் வாரிக்
குள்ளாகிப் போனான்
கழனிசேர் சோலைப்
பூம்பாளை யெல்லாங்
கடம்பன் கமுகுத்
தோப்புக்கே காணும்
வளமைசேர் வையா
புரிக்குளத் தில்லே
மதகடி யிற்செந்
தாழைபயி ராச்சு
இளகிய குலைவா
ழைநெல் லரிசு
யிருக்கா ததுவு
நமக்கே காணாண்டே.

91. இந்தவ கையிலே
பட்டை நெல்லில்
எட்டிலட் சஞ்ச
லகைநெல் லாச்சு
பைந்தமிழ் சேர்சி
வகிரியா னுக்குப்
படித்தரத் துக்கோர்
ஆயிரஞ் சலகை

தந்தருள் சுற்றுக்
கோவிலுக் கைந்நூறு
சலகைநெல் பெரிய
பள்ளத்தா லீந்தேன்

விந்தைசேர்ந்த தருளெட்
டுச்சத்தி ரத்துக்கும்
வேண்டின நெல்லை
யீந்தேன்கா ணாண்டே.

92. எங்களி டும்பன்
படித்தரத் துக்கே
எண்பது சலகை
நெல்லுமே யீந்தேன்

பொங்குஞ்சொந் தக்கு
ராவடி வேலற்கும்
புனிதம தாகிய
சிவலிங்கத் துக்கும்

அங்கெழுந் தருளுஞ்
சுப்பிர மணியற்கும்
அன்றாடப் பூசைப்
படித்தரத் துக்கும்

இங்கித மானபு
னுகுச்சம் பாநெல்லில்
இருநூறு சலகை
ஈந்தேன்கா ணாண்டே.

93. திருவாவி நன்குடி
வேலவ ருக்குச்
செலவுக்கு நூறு
சலகைநெல் லீந்தேன்.

பெரியநா யகித்தாய்
படித்தரத் துக்குப்
பெரியவள் ளத்தா
லிருநூறு சலகை

கருதிய ராயப்
பெருமாள்த னக்கும்
கயிலாய நாதர்
படித்தரத் துக்கும்

இருநூறு சலகை
நெல்லுஞ் செலவாச்சு
இன்னுஞ் செலவைக்
கேளுங்கா ணாண்டே.

94. எங்களி லட்சுமி
நாராய ணனுக்கே
எழுபது சலகை
நெல்லுமே போகும்

பொங்கஞ்சேர் பாதி
ரைப்பிள்ளை யாருக்குப்
பூசைக் கைம்பது
சலகைநெல் வேணும்

அங்காளம் மன்மாரி
அம்மன்ற னக்கும்
ஐம்பது சலகை
நெல்லுமே போச்சு

திங்கள் சூரிய
னிதுமுத லாகிய
தெய்வங்க ளுக்குநெல்
ஈந்தேன்கா ணாண்டே.

95. தூரிநாச் சிமார்
அழகுநாச் சிமார்
துற்கையம் மன்*ணெட்
டாலம்ம னுக்கும்
ஏரிநாச் சிமார்
❊ பேராவு டையார்க்கும்
எங்கள்வை யாபுரி
யீச்சுர னார்க்கும்
காருநட் டாற்றுக்
கன்னிமா ருக்கும்
❑ கணப்படி ராயன்
படித்தரத் துக்கும்
சூரியச் சம்பா
நெல்லிலே நானூற்றுத்
தொண்ணூறு சலகை
ஈந்தேன்கா ணாண்டே.

96. உலவுஞ்சண் முகநதி
விசையவே லாயுதன்
உதவிங்கா சிவிசு
வேச்சுர னுக்கும்
இலகுமச் சுதநா
ராயண னுக்கும்
எங்கள்சண் முகநதி
வேலவ னுக்கும்
துலங்கன்ன பூரணி
விசாலாட் சிக்கும்
துய்யசண் முகநதிக்
கணபதிக் கும்மே.

---

பி—ம் : * "ணொட்டாலம்மன்" ❊பிரவிடை நயினார்க்கும்
❑ 'கணப்படியார்'

தலையுதி ரிநெல்லி
லேயைந் நூறு
சலகைநெல் லையுமீந்
தேன்கா ணாண்டே.

97. இங்கிலுண் டானகோ
யிற்படித் தரத்துக் (கு)
எப்படிக் கும்மைத்
துக்கொள்ளு வேனான்
துங்கனா கியசிவ
கிரிவேல வற்குச்
சுதனாக வந்த
குமாரச்சின் னோவன்
பிங்கன்வி சையகி
ரிவேலச் சின்னோவன்
பிராமண போசனத்
❊ துக்குத்தி ருத்தியாய்க்
குங்குமச் சம்பாநெல்
கேட்டகேள் விக்கெல்லாம்
❑ கொடுத்துவ ரல்பிர
யாசைகா ணாண்டே.

## மாட்டுவகை

### *கலிப்பா.*

98. பாட்டைச் செலவழித்த பாவலனுக் காளாய்த்தன்
கூட்டைச் செலவழித்த குழந்தை யெனுங்குழகன்
காட்டைச்செல வாக்குபண்ணைக் காரனோடு பள்ளன் மெள்ள
மாட்டுச் செலவையெல்லாம் வகைவகையாய்க் கூறுவனே.

---

பி–ம். : ❊ 'துக்குத்தானே ❑ 'கொடுப்பது பிரயாசங்கா'

## சிந்து

இராகம் : யதுகுல காம்போதி. அடசாப்பு தாளம்.

99. ஊரெங்கும் பார்த்தாலும்
ஒற்றைக் கொம்பன்
உலவாம லேவழி
தோறுமி ருக்கும்
மேருவின் சார்பில்
நெட்டைவா லான்போய்
விருமப்பட் டத்துக்
கின்னமி ருக்கும்
பாரிலே காணம்
நெடுமறை யான்றனைப்
பார்ப்பா ரென்று
பலபேரும் பார்ப்பார்
காரிகூன் மயிலை
பழனிச்செட் டிக்குக்
கருதிய வாகன
மாச்சுகா ணாண்டே

100. முயங்கிய பசுக்காத்
தானுமே கெருட
முகவன்மேற் கொண்டே
அலையுதே யின்னம்

---

பாட்டு 100. பசுக்காத்தான்—கிருஷ்ணன், செம்மறைக்காளை—வேதத்தலைவனாகிய சிவன், காலாலுதை—கண்ணப்பன், காலாலருச்சித்தது. வெள்ளையெருது—நந்திதேவர். கொம்பு—பார்வதி. மலையிலே—கைலாச மலையிலே. காய்சடைவிழுதல்—எருதுகளுக்கு தக்கபருவத்தில் நலம்பிடிக்கத் தவறினதால் விரைக்கொட்டை முற்றிப்போதல். நலம்பிடித்தல்—காளைகளுக்கு விரை நசுக்குதல்.

மயங்கிவா டிநனிக்
காளையா னசெம்
மறைக்கா ளைக்காய்
சடைவிழுந் தாலும்
இயங்கும்*கா லாலுதை
பட்டுமே வெள்ளை
எருதாமக் காளை
மீதினி லேறி
வயங்கியே கொம்பைக்
காட்டிக்கொண் டின்னம்
மலையிலே வாழு
மதுதான்கா ணாண்டே.

101. இப்படிக் காக
வேயநே கம்மாடும்
ஏகியே யெங்குந்
தொண்டாச்சு தையா
சுப்பிர மணியற்குக்
கறவைப்ப சுக்கள்
துய்யகா ராம்பசு
வைஞ்ஞூ றீந்தேன்
அப்புரங் கயிலாச
நாதருக் கும்மே
அரியகா ராமடைப்
பெரியவ ளுக்கும்
ஒப்புச்சீட் டுக்கண்
டாப்போல்நூ றாவையும்
ஒட்டிக்கொ டுத்துவிட்
டேன்கா ணாண்டே.

பி-ம். : * காலுதை.

## கலப்பை, மேழி, நுகம்.

102 வளமிகுங் கானில்
முருகவே ளந்த
வள்ளிக்குக் கொழுகொம்
பாச்சுதிப் போது

கழனியை யேயுழுங்
கலப்பையெல் லாமரக்
கலப்பையா னாலே
சரக்கிட வாகும்

இளநீரோங் குஞ்சிவ
கிரிவேல வனுக்கே
இருகாதி லேவளர்
*ஒண்டிமுத் தாச்சுத்

துழனிசேர் துர்ச்சனர்க்
கும்பரம் பென்று
சொல்லிநா ❋ னுங்கை
விட்டேன்கா ணாண்டே

103. பொங்கமா கவேமே
ழியெல்லா மந்தப்
பூபால ரிடங்கை
சேர்ந்தேயி ருக்கும்

வங்கிவா ங்குமிர
ணியகூ ரனையும்
வகிர்நர சிங்க
❑ நகமுமல் லாமல்

பி–ம். : *'லுங்கை' ❋ நகம்–நுகம் நுகத்தை நகமெனக்கூறல் இந்நாட்டு மரபு. ❑ "கொண்டி"

இங்கேநம் மள்நக
மெல்லா நகமோ
*இசையவே ழம்பர்க்கு
வடக்கயி றிந்தேன்

துங்கஞ்சோ றதனில்
முழுகவே யெத்தனை
சோடிணை யில்லை
நமக்குக்கா ணாண்டே.

# 21. வயலெருவைக்க ஆயரையழைத்தல்

### கலிப்பா

104. பண்ணைவிவ ரங்களையும் படிப்படியாய்க் கேட்ட பின்பு
எண்ணளவி லாநிலத்துக் கெருவைக்க வேணுமென்று
❊ துன்னுபண்ணை யாண்டகையுஞ் சொன்னபடி யேபள்ளன்
திண்ணமுட னாயர்மனை தேடி நடந்தானே.

### சிந்து

105. திட்டமுடன் சிவகிரிச்செவ் வேல்பண்ணை யுரமேற்ற
மட்டிலா வாடுகொண்டு வருவேன்கா ணாண்டே

106. என்றுசொல்லிப் பண்ணைக்கார னிடத்தில் விடைவாங்கிப்பள்ளன்
நன்றெனவே யாயர்மனை நாடியே போனான்.

# 22. ஆயர் வரவு

107. போனவுட னாயரெல்லாம் புகழ்ந்துபள்ளன் சொற்படியே
தானும்வாரேன் வாரோமென்று தங்கள் தங்க ளாடுகளும்

பி–ம். : * 'இசையடொம்பர்க்கு' எனவும் பாடம் ❊ 'துண்ணமுடன்' பண்ணையாண்டான் சொல்லிடப் பள்ள னுங்கேட்டுத்'

108. குட்டிகள்*கு டாப்புக்ளுங் கொண்டுசேக ரித்துக்கொண்டு
பட்டிபோட விடைக்கோனார் பரிவுடன் வந்தார்.

## 23. ஆயர் தம் பெருமை கூறல்

### *அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.*

109. பட்டைநா மங்க ளெங்கும்
❊ பழுக்கவே போட்டி ருப்புக்
கட்டுசேர் தடியை வீசிக்
கையினிற் கடையால் கொண்டு
முட்டவே நரைத்த மீசை
முறுக்கியே துளவப் பாசி
சட்டமா யணிந்தே யாயர்
சகலருந் தோன்றி னாரே.

### *சிந்து.*

இராகம் : துசாவந்தி. ஆதி தாளம்.

110. ❑ பூதக்கோன் புரியாட்டைச்
சோதித்தே யொருபாம்பும்
புலியுங்காத் திருக்குது
கலிகண்டாய் குடும்பா
◗ யாதக்கோன் கிடைதானுஞ்
சீதத்தண் ணீருங்கொண்டே
யவனாட்டைக் ▮ கண்டபாம்பு
துவைபட்டுச் சென்றதே.

---

பி–ம். : ❊ 'பருக்கவே' எனவுமுண்டு. ❑ பூதக்கோன்– தில்லையம்பலவாணன்
◗ கண்டபாம்பு – காளிங்கன்

பாட்டு 110. பாம்பும் புலியும் – பதஞ்சலியும், வியாக்கிரபாதரும்.

❊ வேதக்கோன் கிடை*கங்கை
பாதக்கோன் வயிற்றுக்குள்
மேவின தாலினி
யாவதென் குடும்பா

நாதக்கோன் சிவகிரி
ஆதிக்கோன் பண்ணைக்கே
❑நானடா வுரமேற்றுங்
கோனடா குடும்பா.

## 24. மூத்தபள்ளி சாடி கூறல்

### *கலிப்பா*

111. இடையரெல்லாம் வயலதுக்கு ளேகியபின் பள்ளன்
*மெள்ள, அடைவுடனே யிளையபள்ளி யாள்விட்*
டுக் கடையானான், கடைவிழியாள் மூத்தபள்ளி
கண்டுபண்ணைக் காரன்முன்பு, ➧ வெடுவெடெனப்
பள்ளனையும் வெகுண்டுமுறை யிட்டனளே.

### *சிந்து*

இராகம் : புன்னாகவராளி. ஆதிதாளம்

112. அச்சத்தை விடுத்தான் – இளையவள்
குச்சிற்போய்ப் படுத்தான் – நானும்போய்
அழைத்தாலும் வாரான்–வயல்விரை
முளைத்தாலும் பாரான்

---

பி–ம். : ❊ வேதக்கோன்–பிரமன். *கங்கைபாதக்கோன்–விட்டுணு.
கிடைக்கொங்கை எனவும் பிரதிபேதம் உண்டு.
❑ நண்டானுறமேயென்றுங்கொண்டாய்' ➧விடவிடப் பள்ளனை
யேசிவிழுந்து' என்பது பிரதிபேதம்.

கச்சைக்காய்ப் பள்ளன் – அவன்வெகு
*குச்சிரக் கள்ளன்–வேலைக்குக்
கழுப்பிணி செய்வான்–நானும்போய்
எழுப்பினால் வைவான்
பிச்சனை வெல்வான் – எனக்கொரு
❊ஒச்சமுஞ் சொல்வான்–அவன்காலைப்
பிடித்தாற்கை நெரிப்பான்–இளையவள்
அடித்தாலுஞ் சிரிப்பான்
கச்சையுங் கட்டான் – வரவர
லச்சையும் விட்டான் – அடியாள்
கண்டதைச் சொன்னேன் – அவன் வெகு
வண்டன்கா ணாண்டே.

113. சத்தியத்துக் கதிரான் – இளையவள்
உத்தரவுக் கெதிரான் – குலுகைத்
தவசத்தை விற்றான் – ஒருகாசுக்
கவகாச மற்றான்
ஒத்தவன் வாழான்–நான் சொலும்
புத்தியுங் கேளான்–தயிரையும்
ஊத்தினா லடிப்பான்–இளையவள்
வார்த்தைக் குடிப்பான்
தித்திக்கு மாவான்–அடிக்குமத்த
ளத்துக்கு மாவான்–பணமெல்லாஞ்
சிந்தியே கெட்டான்–எனையிப்போ
❑சந்தியில் விட்டான்
மெத்தக்கட் குடிப்பான்–அவள்காலை
நித்தம்போய்ப் பிடிப்பான்–பள்ளனை
விடியுங்காட் டியிலே–குட்டையில்
அடியுங்கா ணாண்டே.

---

பி–ம். : *குச்சித்ரக் கள்ளன் என்பது பிரதிபேதம்.
❊ "ஒச்சியம்" ❑ மந்தையில்.

114. என்கையிற் சோறுங்—கசந்தவள்
தன்கையிற் சாறும்—இனிக்கு(து)
என்றவன் போனான்—அவள்முலைக்
குன்றுக்கு ளானான்
தன்னையு மறந்தான்—வெகுநாளாய்
என்னையுந் *துறந்தான் – என் வீட்டிற்
சளத்துக்குப் படுப்பான் – அவளுடன்
களத்திலும் படுப்பான்.
பொன்னியைத் தொடர்ந்தான்—❋இல்லைவிட்(டு)
என்னையுங் கடந்தான்—எருமைப்
போத்துக்கு மிசைவான்—கோமாளிக்
கூத்துக்கு மிசைவான்
என்னையுங் குறியீர்—நான்சொன்ன
சன்னையு மறியீர்—பள்ளனை
ஈடுபட் டிடவே—குட்டையிற்
போடுவீ ராண்டே

115. வெட்டிக்குப் பேட்டை—நல்லண்ணச்
செட்டிக்கு மாட்டைப்—பதினெட்டு
வெள்ளைக்குக் கொடுத்தான் – கொழுந்தியாள்
பிள்ளைக்கிட் டெடுத்தான்
❑தெட்டியே விட்டான்—எனக்கிப்போ
ஒட்டிப்புண் விட்டான்—தன்னுடை
தேட்டையு மொழித்தான்—கோவலன்
பாட்டுக்கு மழித்தான்
வட்டவீ டெடுத்தான்—பணமெல்லாம்
கொட்டியே கொடுத்தான்—தன்வெகு
மானத்துக் கவளாம்—படுந்துயர்
ஈனத்துக் கிவளாம்.

---

பி–ம். : * மறந்தான். ❋'இல்லையென்று'. ❑தெட்டியே விற்றான்.

கிட்டத்திற் படுக்கான்—அவள்சேலை
கட்டிக்கக் கொடுக்கான்—என்னையுங்
கேலியுஞ் செய்வான்—அவனுமாய்
மாலன்கா ணாண்டே.

116. பாணான்கைச் சுள்ளும்—ஈழுவச்
சாணான்கைக் கள்ளும்—கொண்டெட்டுப்
பசுவையும் விற்றான்—*அவன்மனக்
கசிவையு மற்றான்

பூணிக்கை யாலே—யவளுக்குக்
காணிக்கை போலே—பணமிட்டுப்
புடவையு மெடுத்தான்—திரும்பவும்
உடமையுங் கொடுத்தான்

ஏணிக்கு நேரான்—ஒன்றையும்
பாணித்துப் பாரான்—அவனுமென்
இளமையைப் பறித்தான்—அவளுடை
வளமையைக் குறித்தான்

ஊணுக்குக் கெட்டி—பள்ளனும்
ஆணுக்குள் மட்டி—பள்ளனை
ஊட்டத்து மயில்போற்—குட்டையிற்
போட்டுக்கொ ளாண்டே.

117. பூராயத் துடனே—வாங்கின
சாராயக் கடனும்—அவனுடை
புழைப்பிலே மிச்சம்—எனக்கிப்போ
துழைப்பது மச்சம்

பேராகப் பிழைத்து—வீணிலே
ஊராருக் குழைத்துத் – தேடியே
பேய்த்தண்ணீர்க் கிறைத்தான்—அவகப்பன்
கீர்த்தியை மறைத்தான்.

---

பி–ம். : * "அவள்மனக் கொசரையு"

தோராய மென்னக்—கொழுந்தியாள்
மாராயஞ் சொன்ன—வண்ணான்
சுவந்திர மென்றெ—அஞ்சுபொன்
செவலைச்செங் கன்றைப்

*பாராட்டிக் கொடுத்தான்—அவள்வீட்டிற்
❉சீராட்டிப் படுத்தான்—நீரேபோய்ப்
பார்த்திப்போ பிடித்துக்—குட்டையிற்
சேர்த்துங்கா ணாண்டே.

## 25. பள்ளன் கிடைவைத்து வந்தான்போற் கூறல்

*கலிப்பா.*

118. சித்தன் சிவகிரிச்செவ் வேள்பண்ணை யாண்டகைமுன்
குத்திரமாய் மூத்தபள்ளி கூறியவ ளேகியபின்
❑மத்தன் வயலிலெரு வைப்பித்தே னென்றுபள்ளன்
பொய்த்தமொழி கூறிவயற் பூபன்முன்பு சென்றானே.

*சிந்து.*

இராகம் : துசாவந்தி. மட்டயதாளம்

119. காத்தவ ராயன் நிலத்தி லேயும்
கன்னடி யப்பெரு மாள்வ யலிலும்
கீர்த்திசேர் பாதைப் பருக்க டியிலும்
கிடாவு றிஞ்சி நிலத்தி லேயும்
வாத்தியா ராத்தி யடியி லேயும்
மச்சவ டய்யன் நிலத்தி லேயும்
கூத்தன் கொடிக்கா லடியி லேயும்
கொண்டய்யன் கண்ட ◗நிலத்திலு மின்னும்

பி—ம். : * பாராமற். ❉சீராடிப். ❑மத்தசெயன்.
◗'நிலத்திலும்'.

120. கருப்பங் கட்டை நிலத்தி லேயும்
காலாடி பூலா வடியி லேயும்
*குறுங்குடி தாங்கி தன்னி லேயும்
கூறும்வா ழைக்கட்டை தன்னி லேயும்
திருத்திய புங்கடி தன்னி லேயும்
செழித்த புளியடி மாவ டியிலும்
❊சிறப்புட னெருவைப் பித்தே னெங்கள்
திருமு ருகன்பண் ணையாண் டவரே.

## 26. பள்ளனைத் தொழுவில் மாட்டல்

### கலிப்பா

121. மன்றில்வடி ❑வேலவனார் வயலிலெரு வைப்பித்தேன்
என்றுபொய்யைச் சொல்ல விளையபள்ளி யோடுறங்கிச்
சென்றுவந்த ◗தென்னெனச்சீ றிப்பண்ணை யாண்டதையும்
நன்றாச்சு தென்றுபள்ள னாணிடக் குட்டையிற்போட்டான்.

## 27. குட்டையிற் பள்ளனைக் கண்டு இளையபள்ளி புலம்பல்

### கலிப்பா

இராகம் : சியானா. திரிபுடைதாளம்.

122. அந்த வகை யிளைய பள்ளி
அறிந்துபள்ளன் கிட்டவந்தே
இந்தவகை மூத்தபள்ளி
இத்தனைக்கோ பண்ணிவைத்தாள்
பந்த யங்கள் சொல்லி யந்தப்
படுநீலி செய்தகதை
உந்தன் மனந் தன்னி லேதான்
உடனேதா னறிவாயே.

---

பி–ம். : *'கூறுங்குடி'. ❊செயமாகவே யெருவைப்பித்தே னெங்கள்
❑'வேலர்'. ◗'தென்னவென்றுசீறிப்'.

123. வெளுத்த தெல்லாம் பாலா மென்றே
விருதாவி லவளைமெச்சி
வழுத்தி னையே யவள் தொழிலை
வரவரக்கண் டறிவாய்பள்ளா
அழுத்த மிட்டுப் பண்ணைக் கார
னவனிடத்தி லென்னசாடி
கொழுத்தி னாளோ வுனக்கு மிந்தக்
கோலம்வந்த தறியாயோ

124. புருச னையுந் தெய்வ மென்று
பூசிக்காத தொண்டியளை
ஒருநா ளும்மே வைத்தி ருக்க
வொண்ணாதென்ப தறியாயோ
மருவி னாலுந் துடியில் பெண்டீர்
மடிநெருப்பென் *றௌவைசொன்னாள்
குறைசெய் யோடு தூற்றும் பெண்டீர்
கூற்றுவனென் றறியாயோ.

## 28. மூத்தபள்ளி பள்ளனுக்குச் சோறு கொண்டுவருதல்

### *கலிப்பா.*

125. தென்பழனிப் பள்ளிசொன்ன சேதிகேட் டுக்குடும்பன்
உன்மதிபோ ※லேயவட்கெங் குண்டாகப் போகுதென்றே
அன்புமொழி □பேசியவ ளையனுப்ப மூத்தபள்ளி
துன்புறுதன் பள்ளனுக்குச் சோறுகொண்டு வந்தாளே

### *சிந்து.*

இராகம் : குறிஞ்சி திருபுடைதாளம்

126. எங்கள் பள்ளனைக்
குட்டையி லேபோட்
டிருக்குது நீர்சொல்லு—மையா

பி—ம். : *'றௌவையார்' ※உன்புத்திபோ □'யிளைய பள்ளியனுப்பியபின்'

எங்கள் அண்ணன்தெய்
வங்கள்செய் தானாமென்
றெனக்குக் கறியுடன் – சோறும்
*தங்கை யென்றுகொ
டுத்துவிட் டால்நானும்
தனித்துண் பதுஞாய–மல்ல
உங்க ளடியா
னுக்கீந்தாற் சோறும்
உண்பானோ சொல்பண்ணை–யாண்டே.

## 29. குட்டையிற் பள்ளனைக் கண்டு மூத்தபள்ளி கூறல்

### கலிப்பா

127. தன்னைவழுத் திப்புகழ்ந்த தாசானு தாசனுக்கு
முன்னவனாய் நின்றெதையு முடிக்குஞ் சிவகிரியான்
செந்நெல்பண்ணைக் காரனுடன் ❄சேதிசொல்லி மூத்தபள்ளி
❑அந்நிலையிற் பள்ளனைக்கண் டவள் ◗சிரித்துச் சொல்வாளே.

### சிந்து

இராகம் : யதுகுலகாம்போதி. அடதாளச்சாப்பு.

128. மருந்துக் காரி மயக்கத்திற் சிக்கி
மதிம யங்கியே யென்னைக்கண் டப்போ(து)
எரிந்து வீழ்ந்துமே பேசின தெல்லாம்
இப்போ நீயனு பவிக்கிறாய் பள்ளா
வருந்தி நான்சொன்ன தையுங்கே ளாமல்
வட்டில் வைத்தபக் கம்வாய்வைத் தாயே
பொருந்துந் தன்வினை தன்னைச்சுற் றும்விதி
பொய்க்கா தேடாவை யாபுரிப் பள்ளா.

---

பி–ம். : *தங்கையிற் கொடுத்து. ❄சென்றனுப்பிக்கொண்டு
❑அந்நேரம். ◗சிறிது.

129. கள்ளத் தனமி ருந்தாலு முன்னையுங்
காட்டிக் கொடுத்துக் கடக்க*நின் றாளே
கொள்ளி கொண்டு தலைசொரிந் தாற்போற்
கொண்டா யேதென் பழனியப்பள் ளியைத்
துள்ளி ன❋மாடு பொதிசுமக் குமென்று
சொன்னப டிக்குச் சிக்கிக்கொண் டாயே
பள்ளஞ் சேர்கொப்பத் தானைபோற் குட்டையிற்
பட்டுக் கொண்டாய்வை யாபுரிப் பள்ளா.

130. மன்றி லிளைய குடிகொண்ட பேர்க்கு
வரிசை யோவரு மோபள்ளா கேளாய்
துன்று □மூளிவாய் மூதேவி யாமெனச்
சொல்வர் நாழிவாய்ச் சீதேவி யாகிடு
மென்று சொன்ன பழமொழி பொய்யோவுன்
இளைய ◗பள்ளியை மெச்சிக்கொண் டாயே
பன்றி யுடனே கூடின கன்றுபோற்
பழனிப் பள்ளியைக் கூடினாய் பள்ளா.

131. முட்டுண் டுகுனிந் தபிற கானாலும்
மோட்டுப் புத்தியை விட்டுக் கவரிமான்
கட்டுப் பட்டாற்போ லென்வார்த்தைக் குள்ளேநீ
கட்டுப் பட்டாலிக் காரியம் வருமோ
குட்டு மார்க்கத்தை விட்டுத்துன் மார்க்கங்
கொஞ்சத் தினங்கள் வருமாகை யாலே
சட்டம் விட்டம ரமனை யாரிடந்
தான்செல் லாதுவை யாபுரிப் பள்ளா.

பி–ம். : *நின்றேனான் ❋வெருது. □ "மூளிவாய் மூதேவியா மென்றுஞ்சொல்வர். நாழிவரச் சீதேவியாமென்று சொன்ன".
◗"குடியை".

# 30. குட்டை மீட்கும்படிசெய்ய மூத்தபள்ளியைப் பள்ளன் வேண்டுதல்

*கலிப்பா*

132. இப்படியே மூத்தபள்ளி யெடுத்துரைத்துச் சேதியெல்லாஞ்
செப்பநா ராசமெனச் செவிதன்னி லேநுழையத்
தப்பிதஞ்செய் தேனீயுந் தான் பொறுக்க வேணுமென்று
கப்புத் தலைக்குடும்பன் கலங்கிப் புகல்வானே.

*சிந்து*

இராகம் : நாதநாமக்கிரியை. அடதளாச்சாப்பு

*பல்லவி.*

133. இதுவேச மயமெனை ரட்சி—புதுமதுர
இங்கித மொழிவை யாபுரிப் பள்ளி

*அநுபல்லவி*

தன்கேடு பிறத்திக்குச் சூடு—மாச்சே
தானாடா தேபோனா லுஞ்சதை யாடும்
வன்மமா யென்காலிற் போடுங்—குட்டை
மரத்தைவெட்டிநீக்கி மகிழ்ந்திப்போ கூடு (இ)

*சரணங்கள்*

1 உன்னுடையவார்த்தையைத் தட்டேன்—இனிமேல்
உன்னாணை யென்கொஞ்சப் புத்தியை விட்டேன்
இன்னமி ளையகுடி கட்டேன்—நேற்றும்
இன்றும யங்கிநான் வெனுகுபாடு பட்டேன். (இ)

2. தயவென்மேல் வைத்திட வேணும்—இனிச்
சரியொத்த பள்ளர்கண் டால்மன நாணும்
கயவருக் கென்னமாக் காணும் பண்ணைக்
காரனார்க்கென்மீதிற் கவடிப்பாய்த் தோணும் (இ)

3 அடிக்கடி யென்னையே தொட்டுக்—கோவம்
ஆகாத டியுனக் கிந்தப்பு ரட்டும்
அடித்துப்பே சுவாயெந்தன் மட்டும்—நம்மன்
அரமனைக் காரிய முன்னாலே கிட்டும் (இது)

4. சிந்தைநொந் தேனடி கொல்லி—மலர்த்
தேனுக்கிணை யாகிய பூருவ வல்லி
யெந்தள வாகிலுஞ் சல்லி—பேசி
என்னைவி டுவிக்க வேணுநீ சொல்லி (இது)

## 31. பள்ளன் கால் குட்டையைக் கழற்றும்படி பண்ணைத் தலைவனை மூத்தபள்ளி பரவல்.

### *கலிப்பா.*

134. செஞ்சிலைவேள் போற்றுஞ் சிவகிரிவே லவாறியக்
கெஞ்சினபள் ளனைப்பார்த்துக் கெலிப்பாக மூத்தபள்ளி
அஞ்சலென்றே யுன்சிறையை யான் தவிர்ப்பே னென்றுசொல்லிக்
கஞ்சமுக னானபண்ணைக் காரன்முன்பு சொல்வாளே.

### *சிந்து.*

இராகம் : புன்னாகவராளி சாப்புதாளம்

135. ஐயாவொ ருவிண்ணப் பஞ்சோலக்
கேளுங்கா ணாண்டே — நானும்
அறியாத புத்தியிற் பரியாசம்
போற்சொன்னே னாண்டே

கையாரக் கண்டக ளவும்பொ
றுப்பீர்கா ணாண்டே—பள்ளன்
கஞ்சிகு டிக்கமாட் டாமற்கி
டக்கிறா னாண்டே.

136 தேடியி டும்பிள்ளை யல்லவோ
பள்ளன்கா ணாண்டே–இனித்
தேவரீர் சித்தமென் பாக்கியம்
யோக்யன்கா ணாண்டே
ஆடிகா லாவதி கோடைநா
ளாச்சுகா ணாண்டே–பள்ளன்
அல்லாமற் பயிரிடு வாருண்டோ
சொல்லுங்கா ணாண்டே.

137. தன்வீட்டு விளக்கென்று முத்தமிட்
டேன்கா ணாண்டே – அது
*கான்சுடு மென்றத கைமைய
றியேன்கா ணாண்டே
என்வீட்டுப் பிழைப்புக்கி டக்கேடு
செய்தேன்கா ணாண்டே – மெத்த
எத்தனை யானாலும் பெண்புத்தி
❊பின்புத்தி யாண்டே.

138. சத்யமாய்ப் பள்ளன்மே லொருதோச
மில்லைகா ணாண்டே–நானுஞ்
சாராய வெறியிலே தப்பிதஞ்
சொன்னேன்கா ணாண்டே
பத்தும்பத் தும்விசா ரியாமற்
சொன்னேன்கா ணாண்டே–பள்ளன்
பழனிப்பள் ளிவீடு–போறதாற்
சொன்னேன்கா ணாண்டே.

139. ஊர்க்குரு விமேல்ரா மபாணந்
தொடுப்பாரோ வாண்டே – எங்கட்
கும்மையல் லாமல்வே றேகதி
யுண்டோசொல் லாண்டே

பி–ம். : * சத்தியமாய்ச்' ❊யீனங்காணாண்டே'.

ஆர்க்கிதஞ் சொல்லிவி டுவிக்கப்
போறேன்கா ணாண்டே—பள்ளன்
அறிந்தறி யாமற்செய் குற்றம்பொ
றுப்பீர்கா ணாண்டே.

140. மார்புவி ழுந்தால்வ யிறல்லோ
தாங்குங்கா ணாண்டே—உங்கள்
மனதறிந் துநாங்கள் நடக்கமு
டியுமோ வாண்டே

தாபந்தப் படுகிற பள்ளனை
விடச்சொல்வா யாண்டே—பள்ளன்
தானோடிப் போனாலும் நானும்பி
ணையல்லோ வாண்டே.

## 32. பள்ளன் வித்துவகை மாட்டுவகை கூறல்

### கலிப்பா

141. சேல்விழியாள் மூத்தபள்ளி செப்பினதாற் பள்ளனையும்
*கால்மரங்கள் வெட்டிக் கனவரிசை செய்தபின்பு
வேல்முருகன் பண்ணை விசாரிப்பான் தன்னுடனே
வால்விரைநெல் வர்க்கமுடன் மாட்டுவர்க்கஞ் சொல்வானே

## வித்துவகை

### *சிந்து*

இராகம் : காம்போதி. ஆதிதாளம்.

142. சுருணைவாரி சுருணைவாலான்
மணல்வாரி—நெல்லும்
சூரியச்சம் பாநெல்லுஞ் சீரகச்சம்பா

பி—ம். : * 'கால்மரத்தை'

கருங்குருவை பனைமுகரி
செந்தாழைநெல்லும்—சிறு
கத்தூரிச்சம் பாநெல்லுங் காடைக்கழுத்தான்.

143. பூசைப்பொட்டிச் சம்பாகார்த்
திகைச்சம்பா—வாசப்
புழுகுச்சம்பா முத்துச்சம்பா தேவன்சம்பா
வாசியானைக் கொம்புச்சம்பா
இலுப்பைச்சம்பா—நெல்லும்
வங்கிநா ராயணன்க லிங்கராயன்.

144. குத்தாரிம சப்புழுதி
இடைக்காடான்—நெல்லுங்
குங்குமச்சம் பாநெல்லு மொட்டன்சம்பா
சித்திரைக்கா லிவாலான்
அச்சுமுறித்தான்—நெல்லும்
சிறைமீட்டான் சித்ரவண்ணன் பேராவண்ணன்.

145. கோதும்பை யழகிய
மணவாளன்—நெல்லும்
குலைவாழை கட்டைவாலா னாகராயன்
காதிமேகந் திரைகொண்டான்
ராமபாணம்—நெல்லும்
கண்ணாடிக் கூத்தன்மகி ழலங்காரி.

146. அன்னதானி செம்மிளகி
கல்லுண்டை—நெல்லும்
அழகுச்சம்பா மிளகுச்சம்பா முத்துவிளங்கி
வண்ணப்பூம் பாளைமுலை
முண்டன்மூக்கன்—நெல்லும்
வயங்கியேப ரக்குஞ்சிறு குருவிநெல்லும்.

---

பாட்டு 142–146 இச்செய்யுட்களில் சொல்லப்பட்டிருப்பன *முழுதும் நெல்களின் பெயர்கள்.*

147. இதுமுத லாகவேய
நேகநெல்களின் – வர்க்கம்
ஈரையாயி ரங்களஞ்சி யத்திலேதானே
பதினெண்ணாயி ரஞ்சலகை
போட்டிருக்கிறேன் – விரை
பதனம்பண்ணி யிருக்குது பண்ணையாண்டே.

## 33. மாட்டுவகை கூறல்

148. புல்லைக்காளை வெள்ளைக்காளை
காரிக்காளை – செவலைப்
போருக்காளை மயிலைக்காளை யுச்சிக்கொம்பன்
நல்லகட்டைக் காளைமுதல்
நெட்டைவாலுக் – காளை
நாக்குளாவி யாணிக்காலன் கருமறையான்.

149. சுட்டிக்காளை யொற்றைக்கொம்பன்
சட்டித்தலையன் – நல்ல
சுள்ளிக்கொம்புக் காளைகெருட முகவன்காளை
கட்டைக்காரி வட்டப்புல்லை
சுட்டிவெள்ளை – நெட்டைக்
*காலனொடு வாலாட்டி சீட்டிக்கொம்பன்.

150. குடைச்செவியன் பசுக்காத்தான்
சடைவிழுந்தான் – குத்துக்
குளம்பனாந் தைக்கண்ணன் மோதுகாலன்
அடுத்தவீடு பிடுங்கிசெம்
மறைக்காளை – முதல்
ஐயாயிர மெருதுமி ருக்குதாண்டே.

---

பி–ம். : * 'காளையொடு'

# 34. கொழு, கலப்பை, மேழிவகை கூறல்

151. அரியரப்ர மாதியாலே
வெல்லமாட்டாத – வோர்
ஆயுதங்க ளாலடித்த வாயிரங்கொழு
கரியகடல் நடுவேநின்ற
மாமரத்தையே – வெட்டிக்
கலப்பையா யிரமேழிக் கையிலாயிரம்.

## நுகம்வகை கூறல்

152. .................... ....................
.................... ....................
.................... ....................
நுகத்தடியி லோராயிரம்
விசுவகர்மா – வெகு
நுண்ணியதமாய்ச் செய்துதந்தான் வைத்திருக்கிறேன்.

## வடக்கயிறு

153. காம்பீரியஞ் சேர்சூரன்
தம்பிமார்கள் – ....................
.............. .............. ..............
.............. .............. ..............
.............. .............. – சேரக்
கயிறாக்கி வடக்கயிறாய் வைத்திருக்கிறேன்.

154. இதுமுத லேத்தனத்தைப்
பதனம்பண்ணிக் – கொண்டே
இருக்கிறேன் தேவரீர்க டாட்சத்தாலே

---

பாட்டு 152, 153 கிடைத்த பிரதிகளில்............இங்குள்ள சீர்கள் இல்லை.

நதிபெருகி நல்லபட்டம்
வந்துவாச்சுதே – இப்போ
நாளேருங் கட்டவேணும் பண்ணையாண்டே.

## 35. நன்னாட்குறித்து நாளேரிடல்

*கலிப்பா*

155. ஏரும் பலவிரையு மேர்க்காலுங் கொண்டிமுதற்
சீரும் வகைவகையாய்ச் செப்பினதெல் லாமுங்கேட்
டாரும் பரவு மறுமுகனார் பண்ணையையன்
*கூருமுகூர்த் தங்குறித்துக் குடும்பனுக்குச் சொல்வானே.

*சிந்து*

இராகம் : குறிஞ்சி. ரூபகதாளம்.

156. தசமிவெள் ளிக்கிழமை யுத்திரநட் சேத்திரஞ்
சார்தைது லாகரணஞ் சுபயோகமுங்
குசனிலாக் கும்பலக் கினத்திலா மென்று
கூறியே வேதியர்கள் நேமித்தா ரின்று
இசை ※செறி சிவகிரியில் முருகன்பண் ணைக்கே
ஏர்பூட்ட நாளிதுவே நல்லநா ளென்றே
அசையாத புகழ்சேரும் பண்ணைக்குத் தலைவ
னார்புகலக் குடும்பன்வயல் தன்னிலேசேர்ந்தான்.

## 36. காளைகளை ஏர்ப்பூட்டல்

*கலிப்பா*

157. வயலில்வந்து நின்றுகொண்டு வடிவேல ரைப்புகழ்ந்தே
அயலிலே நின்றபள்ள ரனைவோருங் கூட்டமிட்டுச்
செயலான கட்குடித்துச் சீறியிரு கண்சிவக்க
❑இயலிசைசேர் குரவையுமிட் டேர்பூட்டத் துணிந்தனரே.

---

பி–ம். : * 'கூர்மை முகூர்த்தம். ※'சேரும்'.
❑இயலிசையார் குரவையிட வேர்பூட்ட

## சிந்து

இராகம் : சௌராஷ்டிரம். அடதாளச்சாப்பு

158. குதித்துக் குதித்துக் கேக்கை போட்டுக்
குடும்ப ரெல்லோருங் கூடியே
குமரர் பதத்தைப் போற்றி வாழ்த்திக்
கூடு கொம்பனைப் பிடிக்கவே
கதித்த பழனிக் குடும்ப னுமொரு
காரி யெருதைத் துரத்திப் போய்க்
கட்டிப் பிடிக்கப் போன வுடனே
எட்டிக் குதித்துப் பாயவே
எதிர்த்தி டும்புல்லைக் காளை யையந்த
இருளக் குடும்பன் பதுங்கிப்போய்
இருகொம் பைப்பிடித் தமட்டி யேயவன்
ஒருகை யால்மெள்ளத் தடவியே
மதித்துப் பிடிக்கச் சோலைக் குடும்பன்
மகனோ டியொரு காளையை
வாலைப் *பிடித்துக் காலைத் தூக்க
வட்டம் போடுது பள்ளீரே.

159. கீர னைச்சிறை விடுத்த தமிழன்
சார மதனை வினவினோர்
கிளரி டுஞ்சிவ கிரிமு ருகையன்
வளரி டும்பண்ணை வயலிலே
சூரத் துடனே யருளக் குடும்பன்
காரிச் செவலை யெருதையே
சுற்றி முதுகைத் தடவிக் கொம்பைப்
பற்றி யேபிடித் திழுக்கவே
மாரிக் குடும்ப னோடிப் போயொரு
சூரிக் கொம்பனைப் பிடிக்கவே
மருதக் குடும்பன் மயிலை யெருதைப்
பொருதிப் பிடிக்க முடியாமல்

பி–ம். : * 'பிடிக்கக் காலைத் தூக்கி'.

ஓரத்தில் வந்தவன் வீழ்க வேயங்கே
தூரத்தி னின்றிடும் பெரியானும்
உடனே யேவந்து தூக்கி யெடுக்க
விடுவி டென்கிறான் பள்ளீரே.

160. முச்செகந் துதிக்கு மோக னனெழிற்
பச்சைம யிற்பரி வாகனன்
மூல காரணன் சிவகி ரிவடி
வேல னார்பண்ணை வயலிலே
பிச்சைக் குடும்ப னோடி யேநடு
உச்சிக் கொம்பனை முடுக்கியே
பிறகே தொடர்ந்து போகை யிலது
கறக றென்றுதான் சுழலவே
நொச்சுக் கொட்டியந் தோணிக் குடும்பன்
பிச்சி மகளுங் காணவே
நொடியி லேயொரு நெடும றையானைப்
படப டென்றுபோய்ப் பிடிக்கவே
மெச்சிக்*கொண் டாளந்த ரயாக் குடும்பன்
கெச்சித மாய்க்கட்டைக் காளையை
விடுவி டென்றவன் பிடித்து முதுகைத்
தடவு றான்பாரும் பள்ளீரே.

161. மாசி லாமணித் தீப னார்சிவ
கோசம ந்திர ரூபனார்
❋வரியெ னுமரு ரூப னார்சிவ
கிரிமு ருகனார் வயலிலே
ஏசடி யான்மீசை முறுக்கிக் கொண்டொரு
ஊசிக் கொம்பனைப் பிடித்தவன்
இழுத்து மற்கட்ட நாச்சி மகளுங்
கிளுக்கி ளென்றுதான் சிரிக்கவே

பி—ம். : * கொண்டந்த. ❋ வரி=இசை.

பேசாமற் சவரி முத்த னுங்கிட்டக்
கூசாம லேநிமி சத்தினில்
பெரிய வெருதைச் சருவிப் பிடிக்க
அரிய நாச்சிக் குடும்பனும்
ஒசனை பண்ணாமற் கரும றையானைக்
*கீசனைப் போலவே ரோசமாய்
ஓடிப் பிடிக்கக் கரணம் போடும்
வேடிக்கை பாரும் பள்ளீரே.

162. திசைபோற் றுங்கவி ராச பண்டிதன்
விசையகி ரிவேலச் சின்னோவன்
சிந்தையிற் ❋கூடிக் கொண்ட பழனிக்
கந்தனார் பண்ணை வயலிலே
அசையாமற் கோணவாய்க் குடும்ப னுமொரு
தசையான வெள்ளை யெருதையும்
அதட்டிப் பிடிக்கப் போகை யிலது
வெருட்டி எதிர்த்துக் கொள்ளவே
விசையாகக் கொம்பைப் பிடித்துக் கொண்டவன்
அசையாமற் கட்டி நிறுத்தினான்
வீரிக் குடும்ப னோடிப் போயொரு
காரிச் செங்கன்றைப் பிடிக்கையிற்
புசப லத்தினாற் பாக்கி யமொரு
மசையெ ருத்தைப்போய்ப் பிடிக்கவே
புழுதி வயலிற் றலைகீ ழாகவே
விழுவ தைப்பாரும் பள்ளீரே.

## 37. காளை வெருண்டது பள்ளத்துப் பாய்தல்

163. முத்த மிழையும் பகரு வோனுமை
புத்த முதப்பால் நுகருவோன்
முரசி னொலிகள் மீறி யசிவ
கிரிமு ருகனார் வயலிலே

---

பி–ம். : *கீசன்=போர்வல்லோன். ❋கூட்டிக்

பொத்தச் சோலைக் குடும்ப னுமொரு
மித்துச் செவலைச் சேங்கன்றைப்
போய வன்மெள்ளப் பிடிக்க வேசீறிப்
பாய வந்திடுஞ் சமயத்தில்

மெத்தச்ச வுரியங் கூறி யேரண
சுத்த வீரனைப் போலவே
மிரண்டி டும்பொலி பெயருதைப் போயவன்
*முரண்டுத் தனமாய்ப் பிடிக்கையிற்

குத்திப் பாயவே மயங்கிப் பெரிய
உத்தி கையில்வை யாபுரிக்
குடும்பன் விழுந்து கிடக்கி றானந்த
இடும்பைப் பாரும் பள்ளீரே.

## 38. பள்ளிகள் புலம்பல்

### கலிப்பா

164. துள்ளிப் பொலியெருது தொடர்ந்தபள்ள னைப்பாய்ந்து
தள்ளிவிட வேமயங்கித் தான்விழுந்த சமயமதில்
புள்ளினஞ்சேர்ந் தருள்ரோமா புரவழிசேர் தென்பழனிப்
பள்ளியுடன் வையாபுரிப் பள்ளியும்வந் தெய்தினளே

## இளையபள்ளி

### சிந்து

இராகம் : கோதாரகௌளம். ஆதி தாளம்

165. புருசனைக் கண்டவுட னன்னாள்—மெத்தப்
புலம்பியே பள்ளியீது சொன்னாள்.

---

பி–ம். : *'முரண்டிச் சினமாய்ப்'

மருளப்பள்ளர்க் கேச்சுக்கிட மாச்சே—யுன்பலம்
மாட்டுக்கு மாட்டாமற் போச்சே
ஒருபணத்துச் சாராயங் குடித்தாய்—மிரண்டே
ஓடின மாட்டையேன் பிடித்தாய்
திருடியா னிளையபள்ளி முறையோ—விரும
தேவ னெழுதினதுங் குறையோ.

166. இன்றுநீ யார்முகத்தில் விழித்தாய்—வாய்க்கிருதாய்
எந்தத்தெய் வங்களைநீ பழித்தாய்
குன்றுபோ லொருவரப்பில் வீழ்ந்தா—யெவருக்குக்
குடிகேடு செய்துநீ வாழ்ந்தாய்
நன்றென்று புத்திசொன்னாற் றட்டாய்—இப்போ
நட்டாற்றிற் கைநழுவ விட்டாய்
மன்றில்த னியேவிட்டுச் சதித்தாய்—புலம்பி
வாடவே யென்றலையில் விதித்தாய்.

## மூத்த பள்ளி

167. என்னைவிட் டொருநாளும் பிரியா—யொருவர்போ
லிந்நாளிற் கவடொன்று மறியாய்
*உன்னைவிட் டென்கவலை தீரேன்—இனியுண்டான
துரைத்தே னொருவர்முகம் பாரேன்
பன்னாளும் பொய்யெனக்கு விண்டாய்—தென்பழனிப்
பள்ளிதனைக் கொண்டபலன் கண்டாய்
சின்னப்பள்ளி கைமருந்துக் கள்ளா—இந்தத்
தேசம்புகழ் வையாபுரிப் பள்ளா.

168. இளையபள்ளி யுடனேநித்தம் படுத்தா—யுனக்குப்பின்
எல்லாவற்றை யுமவட்குக் கொடுத்தாய்
தழுவியுனைக் கூடியிருப் பேனோ—யிளையவள்
சத்தியத் தோசமது தானோ

பி—ம். : *'உன்னைவிட்டு மென்கவலை'.

மொழிகூறி யாரைநோக வைதாய்—பழனி
முருகற்கு மென்னகுறை செய்தாய்
களைதீர்ந் தெழுந்திருப்பாய் குடும்பா—ஈதோர்
கதையாச்சே வையாபுரிப் பள்ளா.

## 89. பள்ளனெழுந்து வித்துழுது நாற்றுப்பாவுதல்

### கலிப்பா

169. மூத்தபள்ளி சொற்கேட்டு மூர்ச்சைதெளிந்துபள்ளன்
பார்த்தெவரு நிற்கையிலே பருங்கருட னிடம்பாய
ஏற்றமா யுழுகையிலே யிடத்*தெருதாக் கஞ்செய்ய
மாற்றிவலத் தெருதுநீர் விடுக்கச்சா லோட்டினனே.

### *சிந்து*

இராகம் : கல்யாணி. ஆதி தாளம்

170. உழுதவு ழவுச்சேற்றைக் கரைத்தான்—வயல்
உடனேப ரம்படித்து விரைத்தான்
முளைக்குக்கங் களவுநீர் நிறைத்தான்—பள்ள
முழுதும் வெட்டிவிட்டுச் சரித்தான்
நாற்றைச் சுற்றிவேலி நட்டான்—நாற்று
❊நலங்காமல் பயிர்ப்பொங்க லிட்டான்
காத்துப் பயிரைக்காய விட்டான்—பள்ளன்
கண்டு மனதுமகிழ்ந் திட்டான்
மண்டி மதுவையவ னுண்டா—னொரு
மாட்டுக் கிட்டப்போயு மாண்டான்
கண்ட பருவமுட் கொண்டான்—பண்ணைக்
கார னுடனேபோய் விண்டான்.

---

பி–ம். : *எருது ஆக்கஞ்செய்தல் = எருது சாணம் போடுதல்
❊நடுங்காமல்

## 40. நாற்று நடல்

### கலிப்பா

171. கடம்பணிந்த வேலர்பண்ணைக் *காரனிட நாற்றெடுத்து
நடவுநட வேணுமென்று நவின்றனுப்பிக் கொண்டுபள்ளன்
அடைவுடனே ❊யூரிலுள்ள வாற்றுக்கா லாட்டியர்கள்
புடைசூழ வேவயிலிற் ❑போய் நின்று விண்டானே.

### சிந்து

இராகம் : கல்யாணி. ஆதி தாளம்

தொழி போடல். நாற்றுப்பறித்தல்.

172. மள்ளர்க ளெல்லொரு மேர்பூட்டி
வளமா கத்தரி சடித்தபின்பு
மெள்ளவி ரட்டித்து முச்சலித்து
விட்டுத்த டவிநா லுழவுழுது
பள்ளிய ரெல்லோரு நாற்றெடுத்துப்
பாங்காய் முடித்துக்குப் பஞ்சேர்த்துத்
துள்ளும யிற்பரி ◗யானைவாழ்த்தித்
தோத்திரஞ் செய்து பணிந்தாரே.

நடுகை முறை.

173. நாற்றையெ டுத்துங்கள் நெற்றிவைத்து
நாலுதி சைகளை நோக்கிவாழ்த்திப்
போற்றித்து தித்துநி ரைவகுத்துப்
புகழ்ந்துகு ரவைமு ழக்கிப்பயிர்
ஈற்றுநெ ருங்காம லணியணியாய்
இடையிற்க லந்துபோ காமல்மெள்ள
மாற்றியே நண்டதூ டேபோகாமல்
வளமாய்ந டுங்கடி பள்ளீரே.

---

பி-ம் : *'காரனுடனாற்றெடுத்து'. ❊யூரில்விள்ள.
❑ 'போயவனும்'. ◗ 'வாகனனை வாழ்த்தி'.

### பள்ளியர் வகை

174. வீரியு நன்னியு டைச்சிசின்னி
வேலிம ருதிபெ ரிச்சிசெம்பி
*மாரிதி ருவியி ருளிமுத்தி
மரியாள்முத் தனாச்சி யன்னமையுஞ்
சூரிபூ விசாத்தி காத்திசங்கி
சோலைபி றவிச டைச்சிபொன்னி
யாருங்கூ டியேகைச் சித்திரமாய்
அடைவாய் ❋நடுமடி பள்ளீரே.

## 41. நடுகை வளப்பத்திடை பள்ளர் பள்ளியர் களிப்பு

### கலிப்பா

175. ஊற்றுக்காற் செந்தே னுலவுஞ் சிவகிரியான்
ஆற்றுக்கா ❑லாட்டியர்கா லாடுங்காற் பண்ணைவயற்
◗சேற்றுக்கான் மள்ளரெல்லாந் தென்றற்கா லான்மெலிந்து
நாற்றுக்கால் விட்டு நடக்கக்கால் சொல்லாதே.

### சிந்து

இராகம் : சௌராஷ்டிரம். மட்டயதாளம்.

176. துள்ளுமயிற்பரி வாக னன் ▮மட
வள்ளிக்கி சைகுழு மோகனன்
துய்ய னாகிய சிவகி ரிமுரு
கய்யன்பண் ணைவயல் நடுகச்சே
பள்ளி யர்குழற் சொருக்கி லுமிரு
❖வள்ளைபொ ருவிழி நெருக்கிலும்
பரும தக்கோட்டு முலையி லுங்கரு
மருவப் புருவச் சிலையிலும்

---

பி–ம் : *'மாரிமாரியிருளி'. ❋'நடுங்கடி' ❑'லாட்டி யர்களாடுங்' ◗சேற்றுக்காற்பள்ள ▮'வடவல்லிக்' ❖'வள்ளைவிழிக்கணை'.

வெள்ளைய னப்பேட்டு நடையி லுமருக்
கள்ளூறுங் கதலித் தொடையிலும்
விந்தைசேர் தண்டொட்டிக் குழையி *லுமுழுச்
சந்த்ரோத யமுகக் களையிலும்
தெள்ளிமை யாய்ப்பேசும் பேச்சி ❄லுமன
துள்ளமு ருக்குங்கை வீச்சிலும்
சிந்தைத ளர்ந்துசிற் றிடையிலுமனம்
நொந்துமெ லிந்தது பள்ளீரே.

177. அங்கத்தை பூம்பாவை ❑யாக்கி னார்கூடற்
சங்கத்திற் பிரசங்க வாக்கினார்
அரிம ணமகிழ் மரும கன்சிவ
கிரிமு ருகனார் வயலிலே
◗பங்கத்திற் பள்ளிய ரெல்லோ ருங்கூடிச்
செங்கையி னாற்று முடியையும்
பங்கி யேயெடுத்துத் தலைத்துக் குலைத்துச்
சங்கை யாய்ச்சம்பா நடுகச்சே
துங்கப் பெரியான் மகளுந் தன்னுடை
கொங்கையைத் திறந்து ▮மூடவே
சோலைக் குடும்ப னோடிப் போயவள்
காலைப் பிடித்துக் கும்பிட்டுப்
புங்கம்பு தைக்குள்ளே வாவென் றானவள்
இங்கித மாகவே போவென்றாள்
பொழுது போகட்டு மென்றுசொல் லிப்போட்
டுழுகப் போகிறான் பள்ளீரே.

178. சமண ரைக்கழு வேற்றி னார்வளர்
அமரார் சிறையை மாற்றினார்
சரம சரமு மாகி யசிவ
கிரிமு ருகனார் வயலிலே

பி—ம். : *'லுமுகச்'. ❄லுமென ❑திருஞான சம்பந்தர்
◗பங்கம் = குழைசேறு, தொழி. ▮ 'காட்டவே.'

திமிறி மற்கட்டி விளையா டிக்கொண்டு
கமரி மானைப்போற் பள்ளியர்கள்
        சிரித்துப் பேசி நடுகச் சேயந்தச்
        சரித்தி ரத்தையும் பெரியானுங்
கமனித் துக்கொண்டு பார்க்கை யிலொரு
குமரிச் சிறுக்கி மெள்ளப்போய்க்
        கண்ணைக் காட்டிச் சைகை பண்ணின
        விண்ணாணத் தையவ னண்ணாந்து
நிமிசத் திற்கண்டு மனதி லேசற்றே
சமுச யமெண்ணி யவளையும்
        நில்லாதே வீட்டுக்குப் போவென்று தள்ளிச்
        சொல்லாமற் சொல்கிறான் பள்ளீரே.

179. பண்ட சுரரைக் கொன்ற வனாழி
முண்டகத் தயனை வென்றவன்
        பருவெய் யோன்மதி புகழ்சி வகிரி
        முருகய் யன்வயல் நடுகச்சே
வண்டக்காத் தான்பெண் டாட்டி யுமந்தச்
சண்டிப் பெரியான் மகளுமே
        மல்லாரிக் கோலங் கட்டி யேபள்ளர்
        எல்லாரும் பார்க்கமற் கட்டியே
ரண்டு பேர்களும் வீழ்க வேயதைக்
கண்டு மருதக் குடும்பனும்
        நல்லவன் போலே யோடி யவளை
        மெல்லவே தூக்கி யெடுக்கையிற்
செண்டு முலையைப் பிடிக்க வேயவள்
கொண்டை யைப்பிடித் தடிக்கவே
        சேற்றில்வி ழுந்தவள் முந்தானை யையீர்த்துப்
        போர்த்துக் கொள்கிறான் பள்ளீரே.

180. புள்ளிமான் மகளைத் திருடி னானொரு
*வெள்ளிலை யுஞ்சுருள் வருடினோன்
புரவ லன்பணி மரும கன்சிவ
கிரிமு ருகனார் வயலிலே
வெள்ளை வீரியுஞ் சின்னப் பழனிப்
பள்ளி மகளுங் கூடியே
வேடிக்கை யாக்கும்மி யடித்துக் குதித்துப்
பாடிவி ளையாடுஞ் சமயத்தில்
குள்ளப் பெரியான் நிறைய மண்டிய
கள்ளு வெறியால் மயங்கியே
கூந்தல் நெகிழச் சேர்ந்து ❊பிடிக்கப்
பூந்து கிலது நெகிழவே
துள்ளி வரப்பில் வீழ்க வேயொரு
❑கள்ளக் கருப்ப னோடிப்போய்த்
தூக்கி யெடுக்கிறாப் போலேய ணைத்திடும்
போக்கைப் பாரும் பள்ளீரே.

181. அந்திவண் ணனருள் பால னார்சிவ
சந்திர சயில வேலனார்
அரிய வேத சொரூப னார்சிவ
கிரிமு ருகனார் வயலிலே
மந்திவாய்ச் சின்ன மருதி யுமானூர்
அந்தோணி மகளுஞ் சண்டையில்
மயிர்பி டிக்கிற சமயத் திற்சம்பாப்
பயிர்முடி விளம்பி நின்றவர்
சந்தடி யிற்சந்தைக் கூட்டத் தில்நல்ல
கெந்தப்பொ டியுங்காற் பணமென்றே
சாராயங் குடித்த வெறியள் மிஞ்சியே
நீராணிக் குடும்பன் மகளையுஞ்

---

பி–ம். : *'எள்ளிலைஞ்சுருள்'. ❊இடையில்.
❑'பள்ளப் பயலுமோடிப்'.

சொந்த மாகிய மச்சினி யாமென்று
மொந்தை மகனு மெள்ளப்போய்ச்
சொருகு கொண்டையிற் குவளைசெருகிச்
செருமு தல்பாரும் பள்ளீரே.

182. மெய்யர்க்கு மெய்யாகி நின்ற வரென்றும்
பொய்யர்க்குப் பொய்யாகி நின்றவர்
விமல னாகிய வளர்சி வகிரி
குமரய் யன்வயல் நடுகச்சே
ஐயன்பள் ளிச்சின்ன வீரி வீட்டுக்குப்
பையவே நழுவிப் போகையில்
*அழிவுக் காரப் பழனிப் பயல்போய்
வழியை மறித்துக் கொண்டவன்
கையிலே பணயம் வாங்கிக் கோவிது
பொய்யனல் லவினி யுனக்குநா
கத்தைக் காட்டு பாம்புச் சித்தனென்
றாட்டி வைக்கிறே னீயென்றன்
மையல் தீரடி யென்று சொல்லவே
மெய்யதா மென்றவ ளுதைக்கவே
மாடு போலவே விழுந்து கொண்டவன்
பாடு றான்பாரும் பள்ளீரே.

183. உம்பர் வரவுஞ் சீல னார்தமிழ்க்
கின்போ தயர்புகழ் ※கீலனார்
உரிய ரானவர்க் குரிய வர்சிவ
கிரிமு ருகனார் புறவிலே
கும்புகும் பாகவே கடைசி யரெல்லாங்
கம்பஞ்சம் பாவயல் நடுகச்சே
கூத்தக்கு டும்பனு மேற்ற பேரைப்
பார்த்துத் திரியு மளவிலே

பி—ம். : * 'அழிம்புக்காரப்'. ※கிலம்=சுவாலை.

வம்புச்ச டைச்சியு முடைச்சி யுமொரு
சம்பைப்பு தையோர மிருக்கையில்
வந்து கண்டவ ரெண்டு பேரையும்
அந்தக்கா ரியத்துக் கென்னென்றான்
அம்பலத் தில்வந் தாடாத டாவென்று
வம்புச்ச டைச்சிவண் டுறுக்கவே
அரும்பி டுங்குரு வேர்வை துலங்கத்
திரும்பு றான்பாரும் பள்ளீரே.

184. அன்னந டைத்தெய்வ குஞ்ச ரிமகிழ்
மன்னவர் கடப்ப மஞ்சரி
அணிசி வகிரி முருகய் யன்பதம்
பணிக விராச பூபதி
கன்னன்வி சையகி ரிச்சின் னோவய்யன்
சொன்னபள் ளேசல் தன்னையுங்
கருதிப் பாடி நடவு நட்டிடும்
பருவப் பள்ளியர் முலைதனைச்
சின்ன விளநீ ராமென் றேமந்தி
யுன்னித் தாவிப் பிடிக்கவே
செந்திக் குடும்பன் சங்கை யெடுத்து
மந்தி தன்னையு மெறியவே
தன்னந் தனியமா வின்க னியையுஞ்
சன்னல் பின்னலா யவன்மீதில்
தானே யெறிந்து குதியும் போடுற
சம்பிரதா யம்பாரும பள்ளீரே.

185. மச்சாவ தாரன் மருகன் வேள்நனிச்
செச்சை யணிந்தருள் முருகவேள்
மச்ச ரூபனாஞ் சிவகி ரிவேலன்
பச்சை மாவடி நடுகச்சே

பிச்சைக்கு டும்பன் மருதி கிட்டப்போய்
மிச்சம்மா னமீனைப் பிடியென்று

பிறகே நீலி மகர மீனையும்
பெருக்கை யால்மூடிக் கொண்டவன்

உச்சித்தி ருக்கை மீனோ டுமுகம்
வச்சுச்சி றுக்கை மீனையும்

உகந்து நத்தையை யுறிஞ்சி னாப்போலே
பஞ்சிலைக் கெண்டைமீ னுறிஞ்சியே

இச்செகத் திற்கள்ளி யான மீன்களை
யிதமாய்ப் பிடித்துப் பெருக்கைமீன்

இழுத்தி ராட்டிலே விரல்வைத் திடவே
குரத்தை மீனையும் பிடித்தவள்

நச்சையில் லாமலே யாடப் பள்ளனும்
நண்டைவ ராலைப் பிடிக்கவே

நல்ல பாடிலி மீனுக் கும்பட
நகைத்துப் பள்ளி யுடனேயே

மெச்சி யாரால் மீனி ரண்டுஞ்
சொட்டை வாளையி லோடவே

வெக்காம லக்குதி ரைமீன்க டத்தையை
மேலேறிச் செய்யுறான் பள்ளீரே.

186. குல்லைவ னத்துக் குரியவ னரன்
வில்லைமு றித்துடும் பெரியவன்
குருச டகோபான் மரும கன்சிவ
கிரிமு ருகனார் வயலிலே
மெல்லக்க டைசியர் நடுகச் சேயந்தச்
சல்லிக்க ருப்பனு நெருங்கியே
வேட்டுக் கார வீரி யைமெள்ள
மேட்டுவ யலில்நாற் றெடுக்கையில்

கல்வித் *திதத்தையே முடிக்கட் டோவுன்றன்
மல்லிகைப் பூசெண்டைப் பிடிக்கட்டோ
காமக் ❄கமலப் பூவிலே யென்றன்
ஊமத்தம் பூவைப் பதிக்கட்டோ
செல்லப்பெண் ணேயுனை மறப்ப னோவென்று
சொல்லிச்சொல் லிக்கும்மி யடித்ததுமே
தெந்தி னாக்கொட்டி யவளைச் சுற்றிடும்
விந்தையைப் பாரும் பள்ளீரே.

187. சுவர்னத் தைக்கவி தாய கனவ
விவரண வேடப்பெண் ணாயகன்

# 42. விளைந்தபின் செப்பஞ் செய்தல்

*கலிப்பா*

188. தயிரருந்தி மருதமரந் தானடர்த்து வெண்ணையுண்டு
கயிறதனா லாச்சிகையிற் கட்டுண்டான் மகிழ்மருகன்
செயிரிறுத்துச் செல்வமருள் சிவகிரியான் பண்ணைவயற்
பயிர்களெல்லாம் வேரூன்றிப் பசியநிற மாகினவே.

*சிந்து*

இராகம் : சௌராஷ்டிரம். ரூபக தாளம்.

*பல்லவி*

189. நட்டந டவெல்லாம் பசுப்பேறிப் பயிர்தேறி
விட்டுணு வெனவளர்ந் தோங்கியே

அநுபல்லவி

முட்டக்கி ளைகிளைத்துத்
திட்டமாய்ப் பாம்பின் சூலங்–கொண்டது (நட்டந)

---

பி–ம். : * "தினத்தையே" ❄கலவிப்.
பாட்டு 187. இதில் சொல்லப்பட்டிருப்பன இயற்கை நடத்தை (Natural action)க்கு மாறாகவிருப்பதால் முழுப்பாவும் வெளியிடப்படவில்லை.

### சரணங்கள்

1 ................................ ................................
கட்டவுழ வேபுடையாய
மட்டியா கியகல்லார்–போலவே
முட்டியேத லைநிமிர்ந்து.

2. மெத்தவும்பாற் கோதிநன்றாய்
முத்துப்போல வேகாய்த்து
வித்தைசேர்கல் விமரத்தை–போலே
விளைந்துத லைவளைந்து

3. சித்திரமாகிய குலமாதர்கள்
புத்திபோற்ற லைகவிழ்ந்து
சத்தியலோகத் துக்கிறைவன்–போலும்
மத்தனாரீ சன்போலும்

4. விளைந்தவுடன் பள்ளரெல்லா(ரு)ம்
முழுங்கிக் களிப்பேறி
வளைந்துமல் லாண்டப்ப–னுக்கு
இளந்தை யாடுவெட்டி

5. பொங்கலிட்டுநாட் கதிருங் கொய்துமே
துங்கனாகி யசிவகிரிப்
புங்கவன் முன்பதாய்க்–குடும்பன்
சங்கதியா கத்தானே

6. அலகுகதிர்க் கோட்டைவைத்து
இலக வெகுவரிசை
தலைமேற் கொண்டுவயல்–சென்றவன்
தொலையாக் கதிர்கொய்தே

7. அரிபரப்பிக் கதிர்களெல்லாம்
புரிமுறுக் கிக்கட்டி
விரைந்தெடுத் துக்களத்திற்–சேர்த்து
சரிந்தபோ ருங்குவித்து

8. தலையுதிரி நெல்லடித்து
மலைபோல வேகுவித்து
நிலையாகி யவிரையை–கட்டிச்
செலவாகா மலேவைத்து

9. சீரைப்பெறு மூன்றாநாளிற்
போரைச் சரித் திட்டுமே
மேருப்பொருப் புப்போறகட்டை–யெல்லாம்
சேரத்தாம் புமினுக்கி

10. சூடடித்த நெல்லையெல்லாஞ்
சாடில்வா ரித்தூற்றிப்
பாடிப்பொ லியளந்து–நெல்லுங்
கோடிசல கைகுவித்தார். (நட்டநட)

## 43. நெல் அளத்தல்

### கலிப்பா

190. வெள்ளையா *னைபதவி வேண்டிப் பணியவருள்
வள்ளல் சிவகிரியில் வாழும்படி வேலர்பண்ணைப்
பள்ளனுமே நெல்லதனைப் பாங்கா யளவுகண்டு
விள்ளுவான் பண்ணை விசாரிப்பான் றன்முன்னே.

### சிந்து

இராகம் : நாதநாமக்கிரியை. சம்பை தாளம்.

191. முருக்கடியின் சம்பாநெல்லில்
முந்நூறு சலகை
சுருக்காக வேயளந்து
சுப்பிரம மணியற்கீந்தேன்
பருக்கடிநி லத்துநெல்லைப்
பாவலருக் கீந்தேன்
※கருக்காய்நெல் லத்தனையும்
கடைச்செல வுக்கீந்தேன்.

பி–ம் : *னைப்புதல்வி. ※கருங்குருவை

192. அனகன் விசையகிரி
வேலச்சின் னோவன்பூசைக்
கனகச பாபதிக்கைம்
பதுசல கையீந்தேன்
கனகன்கண்ணப் பன்பூசித்த
காளத்தியீச் சுரனுக்கு
மனதுடனைம் பதுசலகை
வகையுட னேயீந்தேன்.

193. திருவாவடு துறையார்பூசை
செய்திடுஞ்ச பாபதிக்கும்
*வருமகேச்சு ரர்பூசைக்கும்
வாகனம டந்தனக்கும்
நொருப்பின்றிப் பெருவள்ளத்தில்
நூற்றிருப துசலகை
கருத்துடனே யளந்துவிட்டேன்
கணக்குப்ப டிக்குத்தானே.

194. பாலயயர்ம டந்தனக்குப்
பனையடிநி லத்துநெல்லிற்
காலிங்கரா யன்நெல்லில்
கணக்குப்பார்த்தெண் பதுசலகை
சோலிசொல்லா மற்பொதியைச்
❋சூட்டிக்கையா கப்பிடித்தே
ஆலயத்துக் கனுப்பினாற்போல்
அனுப்பிவைத் தேன்காணாண்டே.

195. ஆலடிநி லத்துநெல்லில்
ஐஞ்ஞூறுச் லகைநெல்
கோலஞ்சேருந் தவராச
பண்டிதருக் கீந்தேன்

பி–ம் : *'சூட்டிதமா' ❋அரியமகேச்

வேலடிநி லத்துநெல்லை
விளங்குபாணி பத்திரற்குச்
சோலிசொல்லா மலளந்து
சூட்டிக்கையா கக்கொடுத்தேன்.

196. கமுகடியின் நெல்லைப்பச்சைக்
கந்தப்பைய னுக்கீந்தேன்
சமுகவித்து வான்களுக்குச்
சலகையைஞ் நூறீந்தேன்
............................ ............................
............................ ............................
............................ ............................
............................ ............................

197. புகழுநல்லய் யங்காருக்குப்
பூசைப்பொட்டிச் சம்பாவில்
மிகவேயைம் பதுசலகை
விருப்பமு டன்கொடுத்தேன்
............................ ............................
............................ ............................
............................ ............................
............................ ............................

198. வேயடியி னெல்லையெல்லாம்
வேதியருக் கீந்தேன்
கோயிலுக்குங் குளம்வெட்டுக்குங்
குழைபோட்ட பள்ளியர்க்கும்

---

பாட்டு 196, 197, 198 இவைகளில்......................இக்குறியிட்டுள்ள இடங்களிலுள்ள சீர்கள் கிடைத்த பிரதிகளில் இல்லை.

............................ ............................

............................ ............................

தாயகமா யைஞ்ஞூறு
சலகைநெல் லையளந்தேன்

199. சத்திரத்துக் கெண்ணூறு
சலகைநெல் லளந்தேன்

............................ ............................

............................ ............................

............................ ............................

............................ ............................

............................ ............................

............................ ............................

200. மற்றநெல்லின் செலவையெல்லாம்
வகைதொகை விவரமாகக்
கற்றுணர்ந்த நம்மள்பண்ணைக்
கணக்குப்பிள் ளையெழுதி
முற்றும்வகை தொகைகண்டு
முறையாயெ ழுதிச்சுருள்
சுற்றிவைத்துக் கொண்டானந்தத்
தொகைகாணுங் காணாண்டே

## 44. மூத்தபள்ளி முறையீடு.

### கலிப்பா.

201. எல்லா வகைதொகையு மெடுத்துரைத்து மென்கணக்கைச்
சொல்லாமல் விட்டபள்ளன் சூதையினிக் கேளுமென்றே
வல்லாளன் வேலவன்வை யாபுரிப்பள் ளிகோரவம்
நில்லாமற் பள்ளியர்முன் னிட்டுரஞ் சொல்வாளே.

---

பாட்டு 199ல் ............இக்குறியிட்டுள்ள இடங்களிலுள்ள சீர்கள் கிடைத்த பிரதிகளில் இல்லை.

### சிந்து

இராகம் : கும்பகாம்போதி. ஆதிதாளம்

202. சட்டித் தலைப் பண்ணை யாண்டார்
நடுக்கேளாரோ—வளைத்
தடிக்காலும் பண்ணையாண்டார்
நடுக்கோளாரோ
மொட்டை மீசைப் பண்ணை யாண்டார்
நடுக்கேளாரோ—வாந்தை
*முளிமூக்குப் பண்ணையாண்டார்
நடுக்கேளாரோ
※வெட்டிச் சோலைப் பண்ணை யாண்டார்
நடுக்கேளாரோ—எங்கள்
வேலவனார் பண்ணையாண்டார்
நடுக்கேளாரோ
பொட்டி மகன் என்னுடைய
பள்ளன்செய்த—இந்தப்
புழுதிமாயங் கேளுங்கடி
பள்ளியீரே.

203. இந்தப் யாடு பட்டுமுன்றும்
பள்ளனுக்குப்—புத்தி
யின்னம்வர வில்லையது
என்னவிதியோ
அந்தச் சின்னச் சிறுக்கிதென்
பழனிப் பள்ளி—மேலே
ஆசையின்ன மலைக்குது
ரோசமில்லையே
முந்தா நாள வள்முன்பாக
வெண்ணையும்வைதான்—நின்று
□முறைநெல்லும் பிள்ளையார்
அடிநெல்லையும்

பி—ம் : *முளிமூக்கு ※வெட்டினிற்சொல் □முறநெல்

சொந்த மென்றே வாரியவள்
கூடையிலிட்டான்—என்றன்
கூவந்தர நெற்கொடுக்கக்
கைநடுங்குதே.

204. அரிமி தித்து வைத்தநெல்லும்
பண்ணைக்காரனை—இப்போ
அலட்டிப்பேய்த் தண்ணீருக்கு
வாங்கின நெல்லும்
*சரிச ரியாப் பங்கியவ
ளுக்குக்கொடுத்தான்—❋பேர்க்குத்
தந்தோமென்று கல்கரம்பை
கூட்டிக் கொடுத்தான்
பெருமைக்கி யாடடித்துப்
பிள்ளைகையிலே—இப்போ
பின்னையொன்று சுட்டுத் தந்த
பேர்களைப் போலே
புரிந்தா னிந்த நெல்லை நீங்கள்
எல்லோம்பாரும்—இந்தப்
புதுமைநீங்கள் கண்ட துண்டோ
பள்ளியீரே.

## ஏசல்.

205. பழனிப்பள்ளி : புரணி சொன்ன தென்னடிவை
யாபுரிப்பள்ளி—அடி
போடி முண்டை முறையிட்டுத்
திரிந்தாவதென்ன,

வையாபுரிப் பள்ளி : மரியா தையாய்ப் பேசடிதென்
பழனிப்பள்ளி—யந்த
மந்தி ரத்தில் மாங்காய்விழு
காதடிபோடி.

பி—ம் : *சரிசரியாகப் பங்கி. ❋பேற்றுத்

206. பழனிப் : மூத லிச்சுப் பள்ளனையுங்
கேலிசெய்யுறாய்—அடி
மூப்புச்சொம் மெனக்குத் தந்தால்
மூதலியோடி.
வையாபுரிப் : தோத கத்தி ணங்கள்வேண்டாம்
குடும்பனுக்கு—நீயும்
சொந்த மோவென் னிலும்பார்க்கச்
சும்மாயிரடி

207. பழனிப் : இருக்காமல் நானு மிப்போ
எழுந்துவந்தேனோ—நானும்
ஏழுவழக் கேறி யுன்னைப்
போலேவந்தேனோ
வையாபுரிப் : ஒருத்தி யோடே புருசனுக்கு
ஆசைப்பட்டுநான்—இப்போ
ஓடிவந்த தெல்லா மிந்த
வுலகமறியும்.

208. பழனிப் : *குரூர மாகப் புருசன்மேலே
சாடியைச்சொல்லி—இப்போ
குட்டியடித் திட்டதுநா
னல்லடிபோடி;
வையாபுரிப் : ❋பிரீதி யாய்ப்பண் ணையைக்கண்டு
பள்ளனைத்தானே—கட்டிப்
பேசிவிடு வித்தவள்நீ
யல்லடி போடி.

209. பழனிப் : ❑போடி வாடி யென்றுமிஞ்சிப்
பேசுஞ்சலிகை—அந்தப்
புதுப்பண்ணைக் காரனார்ச
லிகையல்லவோ;

பி—ம் : *'கொண்டபுருசன்'. ❋'பிரீதியாயுன்னைக்கண்டு'.
❑'போடிபோடியென்று'.

வையாபுரிப் : வாடி யிந்தச் சேதியெல்லாம்
பண்ணைக்காரனார்—மட்டும்
வழக்கேறா விட்டாலுன்றன்
வாயுமடங்கா.

210. பழனிப் : அடங்கா மலே னானாளெரி
மல்லியேயென்றே—என்னை
யனைவோரு மறிவார்வை
யாபுரிப்பள்ளி;
வையாபுரிப் : உடம்பு தான்தெ ரியாமலே
பேசுறாயடி—பள்ளன்
உன்னையென்னை யெண்ணாமலே
பேசச்சொன்னானோ.

211. பழனிப் : சொல்வ தென்ன சூடுபா(டு)
எனக்கில்லையோ—யிந்தச்
சொட்டைச்சொல்லுக் காட்டாளிநா
னல்லடிபோடி;
வையாபுரிப் : வல்ல மையாய்ப் பேசாதேதென்
பழனிப்பள்ளி—யார்
வல்லமையா ருக்குச்சத
மாகிநின்றது.

212. பழனிப் : நின்றப் பாலே பேசடியெச்
சில்தெரிக்குது—பள்ளன்
நின்றா லல்ல வோவுன்சேதி
யெல்லாந்தெரியும்;
வையாபுரிப் : கன்று பன்றி யுடன்கூடிக்
கொண்டாற்போலவே—யுன்னைக்
கண்டாசைப்பட் டுக்கொண்ட
பள்ளன்கெட்டாண்டி

213. பழனிப் : கெட்ட பேச்சைப் பேசவேண்டாம்
உனக்குத்தானே—என்ன
கெடுமதி கண்ணுக்குத்தோற்
றாமற்பேசுறாய்;

வையாபுரிப் : கட்டு மாச்சே யுனக்கேற்ற
காலமுமாச்சே—யென்னைக்
கண்டுவந்த சிறுக்கிக்கு
மித்தனையாச்சே.

214. பழனிப் : சிறுக்கி யென்று சொல்லாதடி
சீயென்னப்போறேன்—எங்குஞ்
*செல்லுங்கா சுக்குவட்ட
முண்டோசொல்லடி;

வையாபுரிப் : உறுக்கிப் பேசுத் துள்ளாதடி
புலியின்முன்னே—இப்போ
ஊஞ்சலாட வாராயது
ஞாயமல்லடி.

215. பழனிப் : முலையை யாட்டி வெட்கமில்லா
மலைபேசுறாய்—அடி
மூக்குப் போன குதிரை※துவா
ரத்துக்கஞ்சாதே;

வையாபுரிப் : குலமான பள்ளி யென்றே
உன்னைக்கொண்டு—வைத்த
குருக்கள்தலை யிலேகொட்டுப்
போடவாராயே.

216. பழனிப் : உன்னைக் கண்டு வந்தேனோவை
யாபுரிப்பள்ளி—இப்போ
உழக்குக்குள்ளே கிழக்குமேற்குச்
சொல்லுறாயடி;

---

பி—ம் : * 'சென்றகாசுக்'. ※'தூவாளத்துக்'.

வையாபுரிப் : என்னைக் கண்டு வந்ததிந்த
நாடறியாதோ—நீயும்
இனிமேலென்ன வெண்ணைக்கோழி
கூவிக்கொள்ளுறாய்.

217. பழனிப் : கொஞ்சப் பேச்சென் னிடத்திலே
நடவாதடி—இப்போ
கொல்லத்தெரு விலேயூசி
மாறுறாய்போடி;

வையாபுரிப் : மிஞ்சி வாய்மீ றவேவேண்டாம்
பள்ளனுக்கு—வந்த
விதிவரப் போகுதடி
வாயடங்கடி.

218. பழனிப் : கடுக டுத்துக் கொள்வதென்வை
யாபுரிப்பள்ளி—பனங்
காட்டுநரி சலசலப்புக்
கஞ்சுமோபோடி;

வையாபுரிப் : கொடுமை பண்ணி மானமொரு
சாணாய்நிற்கிறாய்—இப்போ
குண்டுசட்டி யிற்குதிரை
யோட்டுறாய்போடி.

219. பழனிப் : சரிச ரியாய்ப் பேசாதடி
வெட்கமில்லாமல்—இனித்
தானேபசித் தாலும்புலி
புல்லைத்தின்னுமோ;

வையாபுரிப் : சிரித்துச் சரக் குப்பைக்குள்ளே
கையிடாதடி—இப்போ
தீட்டினம ரத்திற் கூர்மை
பார்ப்பதென்னடி.

220. பழனிப் : கோணிக் கோணி வீண்பெருமை
பேசிக்கொள்ளுறாய்—எந்தக்
குதிரைக்குவால் படைத்தாலுங்
குண்டிமட்டடி;

வையாபுரிப் : காணி கொள்ள வந்தபள்ளி
நீயல்லவேடி—நானுங்
காணுரேன்தேங் காயுநாய்க்குத்
தங்குமோபோடி.

221. பழனிப் : *தப்பி லிபோ டிமிரட்டி
மீன்பிடிக்கிறாய்—இளை
தானேசிறுத் தாலுமந்தப்
படியுஞ்சிறுக்குமோ;

வையாபுரிப் : துப்பற் றநா யேபோடி
இப்பவுநீயே—நெஞ்சைத்
தொட்டுப்பார்த்துப் பேசடியடி
சொட்டைத்தலைச்சி.

222. பழனிப் : நாயு நீயே நரியுநீயே
சிங்கமுநானே—இந்த
நாடறியு முன்சேதிக
ளெல்லாந்தெரியும்;

வையாபுரிப் : ஈயம் வெள்ளி யாமோவென்னை
யிகழுறாயபி—சேகம்
ஏறினமு டிக்குச்சுழி
சுத்தம்பார்க்கிறாய்.

223. பழனிப் : உங்கள் தெய்வம் மானங்கெட்டு
நிருவாணத்தோடே—யிந்த
ஊரெங்குஞ் சுற்றினதை
நீயுங்கேளாயோ;

---

பி–ம் : *'அப்புறநீ'.

வையாபுரிப் : சங்கை யில்லா மலேயுங்கள்
தெய்வம்பெண்களை—முன்னே
*தானையையெ டுத்துக்கொண்டு
மானம்பார்த்ததே.

224. பழனிப் : மோட்டுப் புத்தி யாலேயுங்கள்
கைலாசநாதர்—தானே
முன்னாளிற் ❄பள்ளனான
முறைமைகேளாயோ;

வையாபுரிப் : ஆட்டைத்தோளிற் போட்டுக்கொண்டு
தேடியலைந்த—இடையன்
அல்லவோவுங் கள்மாயவன்
அறிவில்லாதவன்.

225. பழனிப் : ❑பெண்டி ரண்டு வைத்திருந்துஞ்
சன்னியாசியா—மென்றுன்
‘பெம்மானுங்கை மழுவெடுத்
தாடவில்லையொ;

வையாபுரிப் : பெண்ட நேகம் பேரிருந்தும்
உங்கள்மாயவன்—வால
பிரமசாரி யென்றுநெய்யிற்
கையிடலையோ.

226. பழனிப் : பசிபொ றுக்க மாட்டாமலே
சோற்றுக்குச்செத்தே—யுங்கள்
பரமனார்நஞ் சுண்டகதை
நானறியேனோ;

வையாபுரிப் : புசித்த டவே சோறுகிடை
யாமலேதானே—யுங்கள்
புங்கவனார் மண்ணையுண்டு
கக்கவில்லையோ.

---

பி—ம் : *‘தானையை=சீலையை. ❄பள்ளனான கதை; திருப்பேரூரில் நடந்தது ❑‘ரண்டுபெண்டு’. ◗‘நாதன்’.

227. பழனிப் : வில்லா லடி பட்டுங்கல்லால்
எறியும்பட்டே—ஒரு
வேடன்காலா லுதைபட்டா
னுங்களாண்டவன்;
வையாபுரிப் : எல்லா ருஞ்சி யென்னத்தானே
திருடியேகட்டுண்—டுங்கள்
இறைவன்க யிற்றாலடி
பட்டானில்லையோ.

228. பழனிப் : மாடெ டுக்கப் புலியூரிற்
றானேயிருந்தே—யுங்கள்
மத்தனும்வீ டில்லாமலே
பித்தனுமானான்;
வையாபுரிப் : ஆடு மேய்ச்சி டையர்வீட்டில்
எச்சில்பொறுக்கு—முங்கள்
அச்சுதற்கு மாடுமேய்ச்ச
புத்தியும்போமோ

229. பழனிப் : விறகெ டுத்து மீன்பிடித்து
மண்ணைச்சுமந்தே—யுங்கள்
விமலனார் பிச்சையுமெ
டுத்தாரில்லையோ;
வையாபுரிப் : குறுகிப் போயுந் தானம்வாங்கி
மானமில்லாமல்—உங்கள்
*கோபாலன்வெண் ணைதிருடித்
தின்றானில்லையோ.

## 46. பள்ளிகளிருவரும் உளம்விண்டு ஒருப்படல்

230. பழனிப் : அரிய ரனைப் பேதிச்சுநீ
சொல்லவேண்டாம்—உனக்
கந்தத்தோசந் தீராதுவை
யாபுரிப்பள்ளி;

பி–ம் : *'கோமான்'.

வையாபுரிப் : இருபே ரையு வின்னபேத
கங்கள்படுத்தி—முன்னே
இயம்பினது நீதாண்டிதென்
பழனிப்பள்ளி.

231. பழனிப் : சிவப தஞ்சேர் விசையரங்க
சொக்கநாதன்—மகிழ்
செல்வன் புகழ் விசையகிரி
வேலச்சின்னோவன்;

உவய முத்ரி யுந்தரித்தா
ரடிசிவன்மாலும்—வேறே
யொருருவ மென்றுமத
பேதஞ்செய்தாரோ.

232. வையாபுரிப் : *சங்க ரநா ராயணரா
கியேசிவனும்—உலகில்
சடாட்சரத்தின் சூட்சமதை
நீயறியாயோ;

திங்க ளணி வேணியருஞ்
செங்கண்மாலும்
தேசிகவி நாயகந்தென்
பழனிப்பள்ளி

233. பழனிப் : ❋செயவி சையன் கிட்ணனையும்
பூசித்தவாரம்—அந்தச்
சிவன்சடையில் விளங்குமந்தச்
சேதிகேளாயோ;

பி—ம் : *'சரங்கரநாராயணர்=சங்கரன் கோவிலில் எழுந்தருளிய மூர்த்தி
❋இக்கதை பாரதத்திலுள்ளது.

தயவர் கஞ்ச னூரவர்க்குக்
கத்தூரிரங்கன்—சிவன்
தானாமென்று மொன்றுமீந்த
தகைமைகேளாயோ

234. வையாபுரிப் : போன தெல்லாம் போகட்டு
மினிமேலாகிலுந்—தெய்வப்
புதுமைகளைத் தூசித்துநாம்
புகலவொண்ணாது;
ஆனாற் புத்தி சாலிதென்
பழனிப்பள்ளி—யந்த
*அரியரனென் றுஞ்சிவனும்
வேறேயல்லடி.

235. பழனிப் : உங்கள் கயி லாசநாதர்
எங்கள் தெய்வமே—எங்கள்
ஔவளவி சையமாலும்
உங்கள் தெய்வமே;
வையாபுரிப் : சங்க தியாய்ச் சொன்னாயானாற்
சண்டைவருமோ—நம்மள்
சாமிநாதன் சிவகிரி
வேலனைப்போற்றி

236. பழனிப் : இருபேருங்கூ டிச்சிரோதை(ய)
ஞாயம்போலவே—நாமள்
இப்புவியில் வாழ்கலாம்வை
யாபுரிப்பள்ளி;
வையாபுரிப் : குருசீ சன்பால் பழம் போலே
ரகளையில்லாமல்—நாமள்
குணமாக வாழ்கலாந்தென்
பழனிப்பள்ளி.

---

பி—ம் : *'அரியு மரனுஞ் சிவனும்'. ※சிரோதயம்=இருதலைப்புள்

237. பழனிப் : ஒருபா னைச்சர்க் கரைபோலே
இருவருந்தானே—நாமள்
ஒத்துடன்பட் டுவாழ்ந்து
கொள்ளலாமடி;

வையாபுரிப் : புருச னுக்குச் சம்மதியாய்
இரண்டுபேருமே—கூடிப்
புழைத்திடலாஞ் சொன்னேன்தென்
பழனிப்பள்ளி.

238. பழனிப் : சூடு பாடில் லாமலேநாம்
கூடிப்பிழைப்போம்—நம்மன்
துரைமார்க்கண் டனைப்போல
வாழ்கப்போற்றுவோம்;

வையாபுரிப் : கூடிக் கெட்ட பேர்களும்பி
ரிந்துவாழ்ந்தோரும்—இந்தக்
குவலயத்திற் காணேன்தென்
பழனிப்பள்ளி.

239. பழனிப்பள்ளியும் வேடர்குலம் தழைத்தோங்கப்
வையாபுரிப் போற்றுவோம்வாழி—நம்மள்
பள்ளியும் விசையகிரிச் சின்னோவய்யன்
நீடுழிகாலம்.

நாடாண்டுசி லாக்யம் பெற்று
வாழ்கவை—யாபுரி
நாடுசெழித் தோங்கிடவே
வாழ்கவாழி.

# 47. வாழ்த்தும் நூல் பயனும்

*கலிப்பா*

240. கோடிகதிர் போல்விளங்கிக் குலவுஞ் சிவகிரியான்
நாடியிருக் குமந்த நாடுசெழித் தோங்கிடவே
தேடியபள் ளேசலைத்தான் செப்பினோர் கேட்டோர்கள்
பாடினபே ராடினபேர் பலன்பெற்று வாழியரே.

## பழனிச் சமீன்

இம்முடிப் பட்டத் திலகிய குமார
விசையகிரி வேலச்சின்னோ வையன்
பாடிய வையா புரிப்பள்ளு முற்றும்.



# அரும்பதவுரை அகராதி

## அ

அங்கம் — எலும்பு
அசரம் — அசையாப்பொருள்
அசுரர் — இராக்கதர்
அச்சுவத்தம் — அரசமரம்
அஞ்சனம் — ஓர் யானை
அடம் — அடம்பமரம்
அடர்த்து — பொருதி
அடைவு — முறை
அணியணியாய் — வரிசைவரிசையாய்
அண்டான் — நெருங்கான்
அண்டை — முட்டு,அடை
அதனம் — மிகுதி
அதிகவற்கு —
அதிரான் — நடுங்கான்
அத்தர் — உயர்ந்தோர்
அந்திவண்ணன் — சிவன்
அபயம் — பயமின்மை
அபிசேகம் — மஞ்சள் நீராட்டு
அமட்டி — அதட்டி
அமரர் — தேவர்கள்
அமிழ்து — பால்
அம்பலம் — சபை, கூடுமிடம்
அம்புவி — பூமி
அயன் — பிரமன்
அயில் — கைவேல்
அரம்பு — குறும்பு
அரன் — சிவன்
அரி — நெற்றாளரி, விட்டுணு, சிங்கம், மழை, வெட்டு
அரிக்க — தெளிக்க
அரிசனம் — மஞ்சள்
அரிக்கனம் — எருக்கு, மருதம்
அருந்தினது — உண்டது
அரும்பம் — மீசை
அரும்புதல் — வெளிப்படல்
அருவன் — உருவில்லான்
அலகு — அலகுப்பாக்கு, நென்மணி பயிர்க்கதிர்
அலட்டி — தொந்தரைசெய்து
அலைத்துக்குலைத்து — உதறிப் பிரித்து
அவகப்பன் — அவனப்பன்
அவகாசம் — திராணி
அழகியமணவாளன் — விட்டு(ணு) ஓர்நெல்
அழுத்தமாக — பலமாக
அறல் — நீர், கருமணல்
அறா — நீங்காத
அனகன் — கடவுள்
அனங்கன் — மன்மதன்
அனுபவி — சுகி
ஆசி — சமநிலம், வாழ்த்து
ஆக்கம் — செல்வம், இலாபம் (பெருக்கம்
ஆட்டாளி — தகுதியுள்ள
ஆட்டுக்காலாட்டியர் — மருதநிலமகளிர் பள்ளி
ஆணை — கட்டளை
ஆயர் — இடையர்
ஆய் — ஆராயும்
ஆழி — கடல், சக்கரம்
இங்கிதம் — இனிமை
இசை — புகழ், பாட்டு, கூடிநில்

இச்சை — விருப்பம்
இடக்கேடு — வறுமை
இடும்பு — துன்பம், அகந்தை
இடைக்காடன் — ஓர் சித்தன்
(ஓர் நெல்
இட்டு எடுத்தல் — வரிசை செய்தல்
இணை — இரண்டு, சோடி
இதத்தை — இன்பத்தை
இதம் — இனிமை, உரிமை
இந்திரகோபம் — தம்பலப்பூச்சி
இந்திர தனுசு — வானவில்
இராமபாணம் — ஓர் நெல்
இருப்புக்கட்டு — இரும்புப் பூண்
இலகு — ஒளியிடு சீதேவி
இலங்கு — ஒளிரு, குளம்
இலச்சை — வெட்கம்
இளந்தையாடு — இளமறி
இன்போதையர் — இன்பு, இதையர்
ஈழம் — ஈழநாடு, கீழ்த்திசை
ஈற்று — ஈன்றது, நாறு
ஈனம் — கேவலம்
உசாவிட — ஆராய
உடுக்கள் — விண்மீன்கள்
உத்திகை — வரப்பு
உப்பளம் — கழிக்கரை, உப்பு
(விளைநிலம்
உம்பர் — தேவர்கள்
உருமால் — தலைப்பாகை
உருவாரம் — சிலை, பொம்மை
உரைப்பல் — கண்டித்தல்,
(சினத்தல்
உலவி — சாரிவந்து
உலோபியர் — ஈகையில்லார்
உல்லாசன் — மனக்களிப்பன்

உழலை — பட்டிவாசலடைக்கும் மரம்
உறுக்கி — அதட்டி
உன்னி — பாய்ந்து, கிளர்ந்து
ஊசிமாறுதல் — ஊசிவிற்றல்
ஊஞ்சலாட — விளையாட
ஊட்டத்து — வளர்ப்பு
ஊழி — நெடுங்காலம்
ஊறல்தாழி — காடிப்பானை
ஊன்றும் — சாரும், தள்ளும்
நடும், நிறுத்தும், பதிக்கும்
எந்தளவு — எந்த அளவு
எரிந்து — கோபித்து
எருமைப்போத்து — கடா
எனுபதி — என்னும் உவதி
ஏத்தனம் — கருவி
ஏரனை — உழவனை
ஏலவே — முன்னமே, பொருந்தவே
ஏழிக்கையாய் —
ஏழ்புனல் — ஏழுகடல்
ஏறிட்டு — உற்றுப்பார்த்து
ஏனக்களிறு — பன்றி
ஒச்சம் — பழுது
ஒச்சியம் — நிலந்தை
ஒண்டி — தனி, ஏர்க்காற், சுள்ளாணி
ஒப்புச்சீட்டு — கைச்சாத்து
ஒற்றைக்கொம்பன் — விநாயகன்
ஒசனை — அளப்பு, யோசனை
ஒவள — (Obla) என்னும் வட
நாட்டுச்சொல். ஓர் வகுப்பார்

## க

கங்கு — பருந்து, எல்லை, தினை
கங்கைபாதன் — விட்டுணு
கசாதி — யானைமுதலாக
கச்சை — தாய்ச்சீலை, கோவணம்
கச்சைக்காய் — கசந்தகாய்
கடம் — பானை, காடு தோட்டம்
கடம்பு — கடப்ப மரம்
கடாட்சம் — அருள், கருணை
கடி — ஓசை, மணம், விரைவு, காவல்
கடிநம் — பானை
கடையால் — நீர்ப்பாண்டம்
கணை — அம்பு, கைபிடி
கதம்பம் — வாசனைப்பொடி
கதலி — தேற்றாமரம், வாழை காற்றாடி, கொடி
கதலித்து — அசைத்து
கதழ் — வேகம்
கதி — புகலிடம்
கதித்து — எழும்பி
கதிர்க்கோட்டை —
கப்புத்தலை—இரட்டை மண்டை
கமரிமான் — கவரிமான்
கமலம் — தாமரை
கமனித்து — கவனித்து
கமுகு — பாக்குமரம்
கயவர் — கீழ்மக்கள்
கரணம் — தலைகீழாய்ப்பாய்தல்
கருணாகரன் — அருளாளன்
கலப்பை — உழவுகருவி கலங்கொள்ளும் பை
கலி—வஞ்சம், கலிகாலம், அம்பு
கல்லி — தோண்டி, கிண்டி
கல்லித்து(கலித்து) — எழுந்து (ஆரவாரித்து
கல்லுண்டை—ஓர்நெல்,உருளைக்கல்
கவடிப்பு — கபடம்
கவினம் — வெண்ணெய், கடிவாளம்
கவின் — அழகு
கழனி — வயல்
கழுப்பிணி (கழுக்குணி)— சோம்பேரி
களை — அயர்வு, அழகு
கறகற — ஒலிக்குறிப்பு
கறுக்காய் — முற்றவிளையாநெல்
கற்பகநாடு — வேண்டிய தெல்லாங் கொடுக்கு நாடு
கனகம் — பொன்
கனகன் — பொன்னிறத்தான்
கனற்புனம் — கன்னிறத்தான்
கனவரிசை — மிக்கவரிசை
கனகன் — பொன்னற்புனம் (கரும்புத்தோட்டம்
காங்குக்கச்சை — நீலஉடை
காணி — உரிமை மூதாதையர் பூமி
காணிக்கை — தட்சணை
காம்பீரியம் — வீரம்
காரியம் — செய்கை
காலமுறை — பருவகாலம்
கானக்களிறு — யானை
கானம் — இசை, காடு
கிஞ்சுகம் — சிகப்பு, முள் முருக்கு
கிடை — ஆட்டுக்கிடை, படுக்கை
கிளுக்கிளு — ஒலிக்குறிப்பு
கீசன் — போர் வீரன்
கீலனார் — சோதியன்
குரவை — கண்டம், நாக்குகளினால் மகளிர் இடும் மங்கலவொலி, குலவை, ஓர்மீன், கடல் ஓர் கூத்து

குக்குடம் — கோழி
குசன் — செவ்வாய்
குச்சிரம் (குத்திரம்) — வஞ்சம்
குச்சு — சிற்றில், குடில்
குடாப்பு — ஆட்டுக்குடில்
குடில் — குடிசை
குடிசை — சிறு வீடு
குதலை — மழலை
குத்திரம் — வஞ்சம், பொய்
குப்பம் — நாற்றுமுடிக்கட்டு
கும்பு — கூட்டம்
குரூரம் — கொடுமை
குரைசெய் —
குலவி — அளவளாவி, பொருந்தி
குலுகை — களஞ்சியம்
குல்லை — கஞ்சா, துளசி, வெட்சி
குவலயம் — பூமி
குவளை — குவளைப்பூ
குவ்வித்த — கூட்டமிட்ட
குழகம் — அழகு
குழகன் — முருகன், சிவன்
குழாம் — கூட்டம்
குறை — குழைச்சு, கூந்தல் முடிப்பு, தழை
குன்று — மலை
கூடல் — மதுரை
கூந்தல் — மயிர்முடி
கூவம் — கிணறு
கூளி — உறவு
கெச்சிதம் — முழுக்கம், செவ்வை
கெந்தம் — வாசனை
கேக்கை — ஒலிக்குறிப்பு
கெளிக்கை — விளையாட்டு
கையார — கைப்பிடியாய்
கொங்காடை — மழை
கொங்காணி — தாங்குமோர்வகைக் குடை
கொங்கு — ஓர் நாடு, மேற்றிசைவாசனை தேன், பூந்தாது,சருக்கரை
கொசுறு — பிசுக்கு, சிக்கல்
கொண்டி — கொழுவாணி
கொண்டை — கூந்தல்
கொப்பம் — யானை படுக்குங்குழி
கொம்பு — பார்வதி (அன்மொழித் தொகை) மரக்கொம்பு
கொல்வாய் — மதகு, மணல்வாரி
கொவ்வை — கோவங்கனி
கொழுகொம்பு — ஆதாரக்கழி
கொழிக்கும் — தெரிக்கும்
கொழுத்துதல — பற்றவைத்தல்
கொளுவு — தொடுத்துவை
கோங்கடம் — ஆகாயமளாவிய (தோட்டம்
கோட்டுவளம் — மலைவளம்
கோணிக்கோணி இகழ்ச்சியுரை
கோது — குற்றம்
கோதும்பைப்பாசி — கோதும்பை போற் செய்த பாசிமணி
கோதும்பை — ஓர் நெல்
கோமாளி — களிப்பிப்போன்
கோலம் — வேடம், நிலைமை

ச

சங்ககி — ஒழுங்கு வரலாறு
சங்கம் — புலவர் சபை, சங்கு
சங்கு — வளை, சிப்பி
சங்கை—ஐயம், அச்சம்—வெட்கம், அளவு,மதிப்பு
சசி — இந்திரன் மனைவி
சஞ்சீவி — உயிர்தரு மருந்து
சடாட்சரம் — ஆறு எழுத்து
சடியேன் —
சடிலம் — சடை
சட்டமாய் — திருத்தமாக
சட்டவிட்டம் — ஒழுங்கு
சதித்து — அழித்து, வஞ்சித்து
சத்தி — வேல், விருதுக்கொடி
சந்தடி — இரைச்சல்
சந்திரோதயம் — சந்திர உதயம்
சமரம் — போர்
சமிதை — ஓமவிறகு, ஒன்பதுவகை விறகு
சம்பிரதாயம் — உபாயம்
சம்பை — தகட்டுக்கோரை
சரம் — அசையும் பொருள்
சரி — முன்கையணி
சரித்திரம் — நடவடிக்கை
சலகை — 120படி முகத்தலளவை
சலிகை — செல்வாக்கு; பெருமை
சல்லி — பொய்
சவரணை — நேர்த்தி, ஆயத்தம்
சளம் — வஞ்சனை, பொய்
சனனம் — பிறப்பு
சன்னதம் — ஆவேசம், வீறாப்பு
சன்னபின்னல் — கண்டதுண்டம்
சன்னை — சைகை, சமிக்கை
சாக்கிரதை — எச்சரிக்கை
சாடி — குற்றச்சாட்டு, குப்பி
சாடு — கூடை, மோது, தாக்கு
சாலி — நெல், நாவி, புனுகுக் கட்டம்
சாளரம் — கள்ளவழி, சன்னல்
சிகி — மஞ்ஞை, மயில்
சிக்கி — அகப்பட்டு
சித்திரம் — விந்தை, வேலை
சிந்தை — மனம்
சிருட்டி — படைப்பு
சிலாக்கியம் — புகழ், உரிமை
சிவகிரி — பழனிமலை
சீதத்தண்ணீர் — பாற்கடல்
சீலனார் — குணத்தார், அழகனார்
சுசீலன் — நற்குணன்
சுதன் — மகன்
சுருணை — நெற்சுணை, சுருள்
சுருணை வாரி — ஓர் நெல்
சுருள் — கூந்தல்
சுருள் — செந்துருக்கம், கணக்கெழுதிய ஓலைக்குறிப்புகளை அடைத்து வைக்கும் ஓலை வளையம்
சுழல் — நீர்ச்சுழி
சுளுந்து — தீவட்டி(க்கம்பு)
சூடுபாடு — சூட்டு உணர்ச்சி
சூரம் — வீரம்
செச்சை — வெட்சி, மேன் மாடம், உதய சந்திரன்
செட்டி — முருகன்
செந்தாழை — ஓர் நெல்
செம்மறை — சிவந்தபுள்ளி
செயிர் — துன்பம், நோய்

செருநர் — பகைவர்
செருமுதல் —இருமுதல், திணித்தல்
செவ்வி — அழகு
செறி — நெருக்கு
சேல் — மீன்
சைகை — சமிக்கை, குறிப்பு
சொம் — உரிமைப்பொருள்
சொருகு — செருகு, நுழை
சோதித்து — ஆராய்ந்து
சோலிசொல் — போக்குச்சொல்

த

தகைமை — பண்பு, தகுதி
தசை — தாது, செழிப்பு
தண்டொட்டி — மகளிர் காதணி
ததி — தயிர்
தத்துவம் — உண்மை, அதிகாரம்
தப்பிலி — போக்கிரி
தமரன் — உறவினன்
தழுவி — அணைத்து
தறி — தயிர், மத்திடுதறி, (நெய்வோர் தறி
தனம் — பொருள், தன்மை
தனுபதி — மன்மதன்
தன்னமையாய் — இணக்கமாய்
தன்னிக்க — சிறிதுசிறிதாய்க் (கொண்டு போய்ச் சேர்க்க
தாசானுதாசன் —அடியார்க்கடியான்
தாபந்தம் — வேதனை
தாமசம் — சுணக்கம்
தாம்பு — கயிறு
தாவு — தாண்டு
தானை — சீலை, சேனை

திங்கள் — மாதம், சந்திரன்
திட்டம் — உறுதி, செவ்வை
திதி — பேறு, வாழ்வு, நிலை
தித்தி — இனிப்பு, ஓர் ஊதுகுழல்
திமிறி — மீறி
திரை — அலை, திரைத்தல்
தில்லையம் —
தீர்க்காயுசு — முழு வாழ்நாள்
தீனர் — இரப்போர், யாசிப்போர்
துகில் — ஆடை, தூசு
துங்கம் — தூய்மை, பெருமை
துங்கவன் — களங்கமில்லாதவன்
துசம் — கொடி
துடி — காலதசப் பிரமாணம்
துண்ணம — அச்சக்குறிப்பு
துதி — வணக்கம்
துப்பு — அறிவு, ஆராய்ச்சி, (துணை, மேன்மை, வலி
தும்பி — யானைத் துதிக்கை
துய்யன் — களங்கமில்லான்
துரிதம் — சீக்கிரம்
துருவம் — நிலையான நட்சத்திரம்
துர்ச்சனர் — துட்டர், (வடமீன்)
துலங்கு — ஒளிவிடு
துவைபட்டு — இடிபட்டு
துறை — தங்குமிடம், இறங்கும் வழி
தூசித்து — இகழ்ந்து
தூபம் — நறும்புகை
தூவாளம் —
தெட்டி — வஞ்சித்து
தெண்டம் — வணக்கம்
தெய்வங்கள் செய்தல் — கடவுளை வழிபடுதல்

தென்றற்கால் — தென்றற் காற்று
தேசிகன் — குரு
தேட்டு — தேடியபொருள்
தேவேந்திரப்பள்ளன் —
தொழுவம் — குட்டைமரம்,
(மாட்டுப்பட்டி
தொடிக்கால் —
தொடை(யல்) — மாலை
தொண்டி — தேவடியாள்
தொண்டு — ஊழியம், கள்ளக் கடவு
தொலையா — முடிவில்லாத
தொல்லை — பழமை, தொந்தரவு
தொன்னை — நொய்வு
தோசம் — குற்றம்
தோதகம் — வஞ்சகம், வருத்தம்
தோத்திரம் — வணக்கம்
தோராயம் —

## ந

நகம் — நுகம், விரல் நகம்
நங்கை — பெண்ணிற் சிறந்தவள்
நசை — புகழ்
நச்சை —
நடு — நியாயம், இடை
நட்டணை — கொடுமை
நத்து — ஓர் பறவை, சங்கு,
(மூக்கணி, விரும்பு
நவின்று — சொல்லி
நழுவி — வழுவி, நுழுந்து
நளினம் — தாமரை
நனி — பெருமை, மிகுதி
நாகப்பூச்சி — நாங்கூழ்புழு
நாகம் — ஆகாயம், புன்னை
நாடி — விரும்பி
நாதக்கோன் — முருகன்
நாத்தி — மைத்துனி
நாராசம் — சலாகை, அம்பு
நாறு — நெல்நாற்று
நாற்றுக்கால் — நாற்றுபாவுமிடம்
நாற்கவிதை — ஆசு, மதுரம்
(சித்திரம், வித்தாரம்
நானாளெரி —
நிசாசரர் — இரவில் சஞ்சரிப்போர்
நித்தம் — நாள்தோறும்
நித்தன் — கடவுள்
நித்திலம் — முத்து
நிரவி — பள்ளமேடில்லாமற் செய்து
நிரை — வரிசை, பந்தி
நீபம் — கடப்பமரம், அதன் பூ
நுண்ணிதம் — நுணுக்கம்
நூதல் — நெற்றி
நெடுமறை — நீண்டபுள்ளி
நெட்டை வாலான் — குரங்கு
நெரிப்பான் — நசுக்குவான்
நேமித்தார் — பிறப்பித்தார்
நைவேத்தியம் — பூசைப் பொருள்
காணிக்கை
நொச்சுக் கொட்டல் — மாடுகளை
நிறுத்த உபயோகிக்கும்
எழுத்தில்லா வொலி
நொந்து — கெட்டு, வருந்தி
நொருப்பு — நொருங்கல்

## ப

பகடு — எருமைக்கடா, யானை (தெப்பம், ஓடம்
பங்கம் — குழைசேறு, தொளி
பங்கி — பங்கிட்டு
பசுக்காத்தான் — கோபாலன்
பசை — அன்பு, செல்வம்
பஞ்சிலை — ஓர் மீன்
படபட — விரைவுக்குறிப்பு
படித்தரம் — கட்டளை
படியும் — தங்கும்
படுநீலி — துட்டை, துர்க்கை
பட்டடை, பட்டரை — தானியக் களஞ்சியம்
பட்டம்பகல் — நண்பகல்
பணம் — நாற்பது பைசா
பணை—வயல், விலங்கின் படுக்கை
பண்டு — பழைமை
பண்ணை — வயல், தோட்டம் (விலங்கின் படுக்கை
பதலை — குண்டான்(கல்), மலை
பதனம் — பேணல், பத்திரம்
பதுமம் — தாமரை
பத்தன் — அன்பன், பக்தன்
பந்தயம் — வாது, ஒட்டம்
பந்தி — வரிசை
பரண — அட்டாலை, காவற்பரன்
பரிகாசம், பரியாசம் — பகிடி, நிந்தனை
பரிசில் — பண்பு, விதம்
பரிவு — பக்குவம், இன்பம்
பரிவேடம் — சூரியசந்திரர் கோட்டை
பருப்பதம், பருவதம் — மலை
பருவம் — உயரம், பக்குவம்
பவ்வம் — கடல் (பருவ காலம்
பழனி—பழனாபுரி, சிவகிரி, (விசையகிரி, வயல் நடுவிலுள்ள ஊர்
பழுக்க — ஒளிவிட
பன்னாள் — பலநாள்
பாங்கு — இணக்கம், முறை
பாடு — அனுபவிப்பு, வருத்தம்
பாதிரை — பாதிரிச்சோலை
பாரித்து — உண்டாக்கி, தோற்றி
பால்கோதி — பால்பிடித்து
பானல் — வயல், கடல்
பானு — சூரியன்
பிங்கன் — மகன்
பிணை — இணை, பிணைப்பு
பிது — இடி
பிரக்கியாதி — அறிவு, புகழ்
பிரசங்கம் — சொற்பொழிவு
பிரசன்னம் — காட்சி
பிரதாபம் — புகழ், வீரம்
பிரீதி — உருக்கம், உப்பு
புகல் — தஞ்சம், உபாயம்
புங்கவன், புங்கன் — கடவுள், குரு உயர்ந்தோன்
புசபலம் — தோள்வலி
புடை — பக்கம்
புதை — செடி கொடியடர்ந்த இடம் (புதைத்தல்
புரக்கவினம் — தோல்கடிவாளம்
புரிந்தான் — செய்தான்
புரணி(புறணி) — கோள்
புரவலன் — காப்போன் (விட்டுணு)
புலையர் — கீழ்மக்கள்
புழுதி — ஓர் நெல், தூசி

புனம் — விளைநிலம், காடு

புனிதம் — அழுக்கின்மை

புன்னாகம் — புன்னைமரம்

பூகம் — பாக்குமரம்

பூசல் — போர்

பூடிற்று — கருவற்று

பூணிக்கை (பூணிப்பு) — தீர்ப்பு

பூதக்கோன் — தில்லைக்கூத்தன்

பூபன் — அரசன், பூசாரி

பூபாலர் — பூவைசியர்

பூம்பாளை — ஓர் நெல்,
தென்னை கமுகின் பூமடல்

பூராயம்—விருப்பு, விந்தை

பூரித்து — மிகக்களிப்புற்று

பேழை — பெட்டகம்

பேறு — வரம், உரிமை, செல்வம்

பொங்கம் — பொலிவு, பரிமளிப்பு

பொட்டிமகன் — இகழ்ச்சியுரை

பொறுக்கல் — தாங்கல்

பொறுதி — தாங்கி

பொற்பு — அழுகு, பொழிவு

போக்கு — விதம், வழி

போர் — வைக்கோல்போர்

## ம

மகுணன் — மகிழ்நன், கணவன்

மசை — மூடன்

மஞ்சணை — எண்ணெய்க் குங்குமம்

மஞ்சரி — மாலை, பூங்கொத்து

மஞ்சு — மேகம்

மடம் — அழகு, கபடின்மை

மட்டி — மதிகேடன்

மட்டு — அளவு

மணல்வாரி — ஓர் நெல், புல்

மண்டி — குடித்து, கால் முடக்கி நின்று

மதகு — நீர்க்கழிவு வாய்

மதி — சந்திரன், அறிவு

மதிள் — மதில்

மது—கள்

மத்தளம் — ஓர் தாளக் கருவி

மத்தன் சேய் — முருகன்

மரு — வாசனை

மருங்கு — இடை

மருப்பு — கொம்பு

மருவிய — அணைந்த கிட்டிய

மல்லாரி — சண்டைக்காரி

மள்ளர் — மருதநிலமக்கள், பள்ளர்

மனக்கசிவு — அன்பு

மறுகுதல் — சுழலல், புரளல்

மறைக்காளை — வேதத்தலைவன்

மனுபதி — திருமால்

மன்றல் — மணவிழா

மன்னிய — நிலைத்த

மாதவி — குருக்கத்தி, முல்லை துளசி, மல்லிகை

மாதி — மா, வட்டம்

மாப்பொறு — பசுக்களைத் தாங்கும், தொழு

மாய்மாலன் — எத்தன்

மாராயம் — சோபனம், நற்செய்தி

மாரி — மழை

மிசையும் — அனுபவிக்கும்

மிரண்டிடு — பயந்துகலையும்

முக்குளித்தல் — நீரில்முழுகுதல்

முச்செகம் — மூன்றுலகம்

முடித்து — முடிமுடியாக்கட்டி

முட்ட — முழுதும்

முட்டுண்டு — முட்டுப் பாட்டு

முண்டகம் — தாமரை

முத்திரி — மதச்சின்னம்

முத்துக்குரியகுடிலம் —

முப்பழம் — வாழை, மா, பலாவின் கனிகள்

மும்முரசு — வெற்றி, வீர, மங்கல முரசுகள்

முரசு — வாத்தியப்பொது பேரிகை

முரம்பு — பரலடுத்துயர் நிலம், மேடு

மூதலிச்சு — ஒப்புவித்து

மூப்பு — பழைய

மூவர் — பிரமன், விட்டுணு, சிவன்

மெச்சு — கொண்டாடுகிற

மேதி — எருமை

மேவின — சொந்த அடைந்த

மைப்படிவம் — மேகவுருவம்

மையல் — மயக்கம், மோகம்

மொத்துண்டு — அடிபட்டு

மோகனம் — புணர்ச்சி, ஏக்கம்

மோசம் — வஞ்சனை

மோட்டு — முரண்டு

மோதி — இடித்து, தாத்தி, சாடி

## ய

யாதம் — பசுக்கூட்டம்

யாதக்கோன்— விட்டுணு

## ர

ரகளை (இரகளை) — சச்சரவு
ரஞ்சிதம் — அழகு (ரணசுத்த வீரன்
ரொப்ப — நிறைய
ரொம்ப — மிகுதியாய்

## ல

லச்சை(இலச்சை) — வெட்கம், அவமதிப்பு

## வ

வங்கணம் — தோழமை
வங்கி நாராயணன் — ஓர் நெல்
வட்டமிட்ட கோழி — கொழுத்த கோழி
வட்டில் — உண்கலம்
வண்டன் — திண்ணியன், துட்டன்
வதனம் — முகம்
வத்திரம் — முகம், ஆடை
வந்தனை — வழிபாடு, ஆராதனை
வம்பு — சண்டை
வயங்கி — நடந்து, ஒளி செய்து
வரப்பு — வரம்பு, எல்லை
வராககிரி — பன்றிமலை
வரிசை — ஒழுங்கு, முறைமை
வர்க்கம் — இனம், குலம், கூட்டம்
வல்லாளன் — வலியன்
வழுத்தல் — சொல்லல்
வள்ளம் — மூன்றுபடி
(முகத்தலளவைக்கருவி)
வள்ளல் — கொடையாளன்
வன்னம் — வர்ணம், அழகு
வன்மம் — வைராக்கியம்
வாகு — அழகு, தோல்
வாகனம் — ஊர்தி
வாக்கினார் — மொழியாளர்
வாசனன் — வாசன்
வாட்டு — நன்மை, வாட்டம்
வாரி — கடல்
வால புரமச்சாரி — கலியாணமாகாத இளவல்
வால — சுத்தம், மிகுதி
வால்மீகம் — இராமாயணம்
வால்மீக வியாசன் — இராமாயண மெழுதிய வால்மீகன்
வாலி — தெப்பம், நீர்நிலை
வானம்பாடி — கழலி, வயலில் வசிக்கும் குருவி

விகடம் — அழகு, உன்மத்தம்

விசாகன் — முருகன்

விசுவகர்மா — மயன், தேவதாசன்

விசையகிரி — பழனிமலை

விடியங்காட்டில் — விடியும் வேளையில்

விண்டான் — சொன்னான்

விண்ணாணம் — வேலை விஞ்ஞானம்

விண்முகம் — ஆகாயம்

விதறல் — பிளத்தல்

விதி — பிரமன்

விது — சந்திரன்

விதுரல் — பிரிதல்

வித்தாரம் — மிகுதி, விற்பன்னம்

விநாயகன் — பேரிறைவன்

விந்தை — ஆச்சரியம்

விபுதர் — அறிஞர் மிகக்கற்றோர்

விப்பிரமம் — அழகு

விப்பிரர் — பார்ப்பார்

விமலன் — அழுக்கில்லான்

விரவி — கலந்து, வெள்ளரி

விருதாவில் — பயனில்லாமல்

விருமதேவன் — பிரமன்

விரை — விதை

விலாக்கொடை — பக்கம்

விவரம் — வகை

விள்ளுதல் — சொல்லல்

வினை — செயல், தொழில்

வெடுவெடு — கோபக் குறிப்புச் சொல்

வெட்டிக்கு — வீணுக்கு

வெண்ணைக்கோழி —

வெய்யோன் — சூரியன்

வெள்ளிலை — வெற்றிலை

வெள்ளென — காலாகாலத்தில்

வெறி — மயக்கம்

வேதக்கோன் — பிரமன்

வேதிகை — மேன்மாடம்

வேழம்பர் — கழைக்கூத்தர்

வேள் — முருகப்பிரான்

வையகம் — பூமி

வையாபுரி — வேள் வையாபுரிக்கோ ஆண்ட நாட்டின் தலைநகர்

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி.


**அ**

| | |
|---|---|
| அங்கத் | 177 |
| அச்சத் | 112 |
| அடங்கா | 210 |
| அடிக்கக் | 19 |
| அந்தப்ப | 48 |
| அந்தவகை | 83 |
| அந்தவகையி | 122 |
| அந்திவ | 181 |
| அப்படிக் | 79 |
| அமரர் | 5 |
| அரிமிதி | 204 |
| அரியநெ | 66 |
| அரியரப்ர | 151 |
| அரியரனை | 230 |
| அழகிய | 90 |
| அனகன் | 192 |
| அன்றென் | 12 |
| அன்னதா | 146 |
| அன்னந | 184 |
| ஆலடிக் | 39 |
| ஆடிநி | 195 |
| இங்கிலு | 97 |
| இடைய | 111 |
| இதுமுதலா | 147 |
| இதுமுதலே | 154 |
| இதுவேச | 133 |
| இந்தப்யா | 203 |
| இந்தவகை | 91 |
| இப்படிக்கா | 101 |
| இப்படிக்கு | 49 |
| இப்படியே | 132 |
| இருக்கா | 207 |
| இருபேரு | 236 |
| இளநீர் | 32 |
| இளைய | 168 |
| இன்றுநீ | 166 |
| உங்கள்க | 235 |
| உங்கள்தெ | 223 |
| உடலுக் | 78 |
| உம்பர்ப | 183 |
| உலவுஞ்ச | 96 |
| உழுதவுழ | 170 |
| உள்ளுற | 80 |
| உன்னிப் | 6 |
| உன்னைக் | 216 |
| ஊரெங் | 99 |
| ஊர்க்குரு | 139 |
| ஊற்றுக் | 175 |
| எங்களிடு | 92 |
| எங்களில் | 94 |
| எங்கள்ப | 126 |
| எல்லாக் | 201 |
| என்கை | 114 |
| என்று | 106 |
| என்னை | 167 |
| ஏரும்ப | 155 |
| ஐயா | 135 |
| ஓடிக்கா | 44 |
| ஒருபானை | 237 |

**க**

| | |
|---|---|
| கசாதிக | 69 |
| கடம்ப | 171 |
| கடினக் | 64 |
| கடுகடுத் | 218 |
| கணபூத | 35 |
| கதறக்க | 20 |
| கத்தனூ | 85 |
| கமுகடி | 196 |
| கம்மல | 38 |
| கருப்பங் | 120 |
| கவளம் | 3 |
| களைமிகு | 43 |
| கள்ளத் | 129 |
| காசியி | 11 |
| காத்தவ | 119 |
| காம்பீரி | 153 |
| கார்சே | 33 |
| கீரனைச் | 159 |
| குடவனை | 22 |
| குடைச் | 150 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குட்டிக | 108 | சின்னணை | 37 | திருவாவி | 93 |
| குதித்து | 158 | சீர்கொண் | 2 | துள்ளிப் | 164 |
| குத்தாரி | 144 | சுடுசுரம் | 58 | துள்ளும் | 176 |
| குத்திர | 75 | சுட்டிக் | 149 | துறையி | 56 |
| கும்பிட் | 72 | சுருணை | 142 | தூரிநா | 95 |
| குரூர | 208 | சுவர்ன | 187 | தெள்ளித் | 3 |
| குல்லைவ | 186 | சூடுபா | 238 | தென்பழ | 125 |
| குன்னுவ | 30 | செஞ்சிலை | 134 | தேடியிடு | 136 |
| கூடிக் | 27 | செயவிசை | 233 | தேநிலத் | 50 |
| கெட்ட | 213 | செலவா | 88 | | |
| கொங்கு | 51 | செல்ல | 13 | ந | |
| கொங்கை | 77 | சேலூன் | 53 | | |
| கொஞ்சப் | 217 | சேல்விழி | 141 | நட்டநட | 189 |
| கோடிக | 240 | சொல்வ | 211 | நாகநக | 55 |
| கோட்டு | 14 | | | நாடெங் | 31 |
| கோணிக் | 220 | த | | நாயுநீ | 222 |
| கோதும் | 145 | | | நாவாயா | 23 |
| | | தசமி | 156 | நாற்றை | 173 |
| ச | | தடையி | 54 | நின்றப் | 212 |
| | | தண்டா | 18 | நீர்க்குடு | 7 |
| சங்கர | 232 | தப்பிலி | 221 | நுகத்தடி | 152 |
| சட்டித் | 202 | தயிரரு | 188 | | |
| சண்முக | 52 | தள்ளிநி | 73 | ப | |
| சத்திசே | 9 | தன்வீட் | 137 | | |
| சத்தியத் | 113 | தன்னமை | 86 | பசிபொறு | 226 |
| சத்தியமா | 138 | தன்னைவா | 127 | பட்டைநா | 109 |
| சத்திரத்து | 199 | தாதவிழ் | 17 | பண்டசு | 179 |
| சத்துருச | 24 | தீங்களு | 25 | பண்ணைவி | 104 |
| சமணரை | 178 | திங்கள் | 2 | பதலைச் | 67 |
| சரிசரியா | 219 | திசைகொ | 5 | பருவத | 6 |
| சித்தன்சி | 118 | திசைபோ | 162 | பவளக் | 41 |
| சிபதஞ் | 231 | திட்டமு | 105 | பவ்வத்த | 10 |
| சிறுக்கி | 214 | திருவாவடு | 193 | பாங்கா | 34 |

பாடிய 28
பாட்டை 98
பாணான் 116
பாம்புவ 46
பாலையர் 194
புகழுந 197
புரணி 205
புருசனைக் 165
புருசனையு 124
புல்லைக் 148
புள்ளி 180
புன்னை 15
பூசித்தா 65
பூசைப் 143
பூதக்கோ 110
பூமிக்க 40
பூமேவு 1
பூராயத் 117
பெண்டி 225
பேரணை 36
பொங்க 103
போதலைக் 45
போடி 209
போனதெ 234
போனவு 107

ம

மச்சாவ 185
மஞ்சள் 4
மட்டிப் 81
மருதநி 62
மருந்து 128
மருவிய 89
மள்ளரெ 172
மற்றநெ 200
மனுபதி 63
மன்றிலி 130
மன்றில்வ 121
மாசிலா 161
மாடெடு 228
மாமரம் 16
மார்புவி 140
மாவள 1
மானவதி 61
முச்செக 160
முட்டுண் 131
முத்தமி 163
முத்துக் 8
முயங்கி 100
முருக்க 191
முலையை 215
முல்லைக் 60
மூதலிச் 206
மூத்தபள் 169
மூளிக்கா 70
மெச்சுறா 21
மெய்யர்க 182
மோட்டுப் 224

வ

வந்தபண் 71
வயலில் 157
வலங்கை 47
வளமிகு 102
வள்ளத் 76
வள்ளிம 74
வாசவெள் 59
வாழ்த்து 29
விசையன் 68
விண்மணி 57
விதிமுத 4
விருதுகட் 26
வில்லால 227
விழுந்த 84
விளாங் 42
விறகெடு 229
வீட்டினிற் 82
வீரியுந 174
வெட்டிக்கு 115
வெல்லுஞ் 87
வெளுத்த 123
வெள்ளை 190
வேடர்குல 239
வேயடி 198

## வேறு பள்ளுகள்:

இராச நகர்ப்பள்ளு, உரிமை நகர்ப்பள்ளு, கண்ணுடையம்மை பள்ளு, கதிரைமலைப் பள்ளு, குருகூர்ப் பள்ளு, கூடற் பள்ளு, கொடுமளூர்ப் பள்ளு, சிவசயிலப் பள்ளு, சீகாழிப் பள்ளு, செண்பகராமன் பள்ளு, சேற்றூர்ப்பள்ளு, தஞ்சைப்பள்ளு, தண்டிக் கைக் கனகராயன் பள்ளு, திருச்செந்தில் பள்ளு, திருநீலகண்டன் பள்ளு, திருமலைப்பள்ளு, திருவாரூர் பள்ளு, திருவிடைமருதூர்ப் பள்ளு, தில்லைப் பள்ளு, தென்காசைப் பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு, புதுவைப் பள்ளு, மன்னார் மோகனப் பள்ளு, மாந்தைப் பள்ளு, முக்கூடற் பள்ளு, முக்கூட்டுப் பள்ளு, வடகரைப் பள்ளு, வைசியப் பள்ளு, வைத்தியப் பள்ளு.

பழனிச்சமீன்

இம்முடிப் பட்டத்திலகிய

விசையகிரி வேலச் சின்னோவையன் பேரில்

பாடிய,

# "பழனித்துரை வண்ணம்"

உ

முருகன் துணை.

# முகவுரை

"வண்ணம்" அல்லது வண்ணப்பா என்பது சந்தப்பாக்களின் இனமாகும். இதன் இலக்கணம்,

"எட்டுக் கலையா யிரண்டெட் டெதுகையாய்க்
கட்டிவரு மோனையுமுக் கண்ணியுமாய்த்—திட்டமிகு
தொங்கலு மொட்டாய்த் தொகையும் பலவாகிப்
பங்குபெறும் வண்ணப்ப பகுப்பு" (முத்துவீரியம்)

தூங்கேந் தடுக்கல் பிரிதன் மயங்கிசை சொற்றவற்றைப்
பாங்கே யகவ லொழுகல் வலிமெலிப் பாற்படுத்தி
ஓங்கோர் குறினெடில் வல்லின மெல்லின மோடிடையைத்
தாங்கா வுறழ்தர வண்ணங்க ளுாறுந் தலைப்படுமே.
எழுத்துப் பதின்மூன் றிரண்டசை சீர்முப்ப தேழ்தளையைந்
திழுக்கி லடிதொடை நாற்பதின் மூன்றைந்து பாவினமூன்
றொழுக்கிய வண்ணங்க ளுாறொன்பதொண்பொருள் கோளிருமூ
வழுக்கில் விகாரம் வனப்பெட் டியாப்புள் வகுத்தனவே
(காரிகையார்)

என்று கூறப்பட்டுள்ளன. எனவே வண்ணங்கள் நூறு வகைத்தாயின. வண்ணம் ஒன்றுக்குக் கலைகள் எட்டு. இக்கலைகள் ஆண்கலைக்கு நாலும் பெண் கலைக்கு நாலுமாகப் பிரிக்கப்படும். ஆண் கலையில் பாட்டுடைத் தலைவனுடைய பிறப்பு, குலம், பெருமை, புகழ், நாடு, ஊர் முதலியனவும் பெண் கலையில் அகப்பொருட்டுறைக்குச் சொல்லப்பட்டுள்ள துறைகளில் யாதாமொன்றையுமமைத்துக் கூறுதல் மரபு.

பழனித் துரை வண்ணம். இது பழனிச் சமீனைக் கி—பி. 18—ம் நூற்றாண்டின் நடுவில் அரசாண்ட குமாரச் சின்னோ

வையன் மகனார் விசையகிரி வேலச் சின்னோவையனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. இந்நூலாசிரியர் யாரெனத் தெரியவில்லை. இதில் பாட்டுடைத் தலைவனின் கல்வி, பிறப்பு, குலம், வழி, புகழ், ஊர் முதலின ஆண்கலையிற் கூறப்பட்டுள்ளன. பெண் கலையில் தலைவனுக்குத் தலைமகளின் கிழியெழுதுதல் அருமையெனத் தோழி கூறுவதாகத் துறையமைத்துக் கூறப்பட்டுள்ளது.

இந்நூலாசிரியர் பாட்டுடைத் தலைவனை இந்நூலில் ''மதுரக்கவியுரைக்கும் அருமைப் புலவன் முக்கிய வசனத் துரை'' என வியந்து கூறியுள்ளார். வையாபுரிப் பள்ளுவிலும் இவரைத்

"திசைபோற் றுங்கவி ராச பண்டிதன்
விசையகி ரிவேலச் சின்னோவன்
சிந்தையிற் கூட்டிக் கொண்ட பழனிக்
கந்தனார் பண்ணை வயலிலே".

எனக் கூறப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக இவர் முருகப் பிரான்மீது, பழனி பிள்ளைத்தமிழ், முருகையன் வண்ணம், குராவடி வேலன் வண்ணம், முத்துக்குமாரசாமி வண்ணம் முதலிய பல நூல்கள் செய்துள்ளார். இவர் முருகபிரானிடத்து உண்மையன்புள்ளவர் என்பதை பழனிமலைமேலும் அடிவாரத் திலும் செய்வித்துள்ள கட்டிடத் திருப்பணி வேலைகள் விளக்கி நிற்கின்றன நலம்.

என்னிடமுள்ள ஏட்டுப் பிரதியிலுள்ளபடி அச்சியற் றப்பட்டது.

கொல்லம்யாண்டு 1118.
சித்தரை 14

*த.அ. அருணாசலம்*
Retired Town Surveyor, Palani.

முருகன் துணை.

# பழனித் துரை வண்ணம்.

தானன தத்தன தத்தனா தன
தானன தத்தன தத்தனா தன
தன தத்த தன தத்த
தன தத்த தன தத்த
தன தத்த தன தத்த—தானத்த தான
தந்ததன தான தன தந்தனா

1. கீறுபி றைச்சடி லத்தனார் தரும்
ஆறுமு கத்தனை வெற்றிசேர் சிவ
கிரி *யுக்கு ளழ குற்ற
குக னைப்பன் னிரு கைச்சண்
முக னைத்தி னநி னைக்கு—மாபுத்தி சாலி
மேருவெ திர்க்கினு மற்பமா மென
வெயெதிர் நிற்பன் லைத்திடா தவன்
விக டத்திரி ❋த டக்கை
வரை யெட்டு வரை யெட்டு
மதி ◗ப்ப ரிந டத்தும்—வீரப்ர தாபன்
கேசரி புட்பக ◗னிக்குவே ளழ
கேசரி யொத்தம கத்வமாய் வளர்
கிளை ஞர்க்கு மறி ஞர்க்கும்
இயல் பெற்ற கவி ஞர்க்கும்
நிதி மெத்த வரு சிக்கு—மேகத்தி யாகி
பஞ்சவரன் டால் ◗பெரிது பெற்றகார்;

2. கேகயர் செச்சையர் மச்சநா டர்கள்
சீனர்க ளொட்டியர் குச்சரா திபர்

---

பி—ம் : *யுக்குள்வளருற்ற. ❋கடக்கை. ◗னைக்கு ◗பெருது.

கிளர் வச்ர மகு டத்தர்
நிட தத்தர் மக தத்தர்
குட கத்தர் வட கத்த—ரீழத்த ராதி
மேகவ ரைக்குயர் செச்சைவா சலி
லேதிரை யிட்டது முத்துமா லிகை
விலை பெற்ற நவ ரத்ன
மொளிர் வச்ர மொடு பச்சை
யிணை யட்ட வணை மிக்க—காணிக்க ரோது

கேள்வி செவிப்பட வித்வரா சரொ
டேதுரை மக்களி ருக்கவே மத
கெரு வத்தி லொறு கிட்ட
தவி சுக்கு எழ குற்ற
வரிசைக்கொ லுவி ருக்கு—மாண்மைக்கு டோரி
பண்புசெறி பாடல்புனை கொற்றவேள்;

3. மீறியெ திர்த்திடு துட்டரா சரை
யேபொரு முத்தக ளத்திலே தலை
விழ வெட்டி யம ரிட்டு
மெதி ரிட்ட வரை வெட்டி
முது கிட்ட வரை விட்ட—மாகுத்த வீர
ஆண்மைப டைத்தொழில் பெற்றகோ[illegible]கீஸ்வ
ராகுல ரத்தின நற்குணா நிதி
மது ரக்க வியு ரைக்கு
மரு மைப்பு லவன் முக்ய
வச னத்து ரைந டத்து—நீதிப்ர தாபன்
வீடண னுக்கர கிட்டிரா வண
னார்முடி பத்தும றுத்துமே சிறை
விடு விக்க விடர் பட்ட
வம ரர்க்கு லக ளிக்க
விர விக்க ணைதொ டுக்கு—மாளிக்கை ராமன்
அஞ்சுவகை நூலுமள விட்டகார்.

4. வேறிம லர்ச்சுனை யுக்குளே யுழ
வோர்தொளி யிட்டப ணைக்குளே புயல்

வெளி யுக்கு ணதி யுக்கு
ளணை யுக்குண் மடை யுக்குண்
மத குக்குண் *மரு குக்கு—ளேதத்தும் வாளை
வாலச முத்திர முக்யதோர் பழ
ணாபுரி நற்றல முற்றமா நிதி
மதி யொத்த கவி கத்த
❄னிழ லுக்கு ளுல கொக்க
வல மிட்ட சிவிகைக்கு—மாரச்சின் னோவ
வேள்வர புத்திரன் மைக்கண்மா தர்சை
யோகச வுக்யம னுக்ரகோ ளரி
விசை யத்தில் விசை யற்கு
நெறி நிற்கு மறி ஞர்க்கு
மென வுற்ற வத ரித்த—வேலச்சின் னோவன்
அந்தவரை யூர்குடுமி வெற்பினார்;

## பெண்கலை

### *தோழி தலைவியின் கிழியெழுத லருமையெனத் தலைவனுக் குரைத்தல்*

5. ஏறல்ம ழைத்திர ளுக்குநேர் குழல்
நீயுநி னைத்தெழு திக்கொள்வாய் மல
ரிடை யுற்ற நறை துய்த்த
அளி சத்த மிடு சித்ரம்
எழு தத்த ரம லச்சொல்—☐லேறப்ர யாசம்
வாலம திக்கிணை யொக்கவே நுதல்
நீயுநி னைத்தெழு திக்கொள்வாய் சிறு
மணி யொத்த வியர் விட்ட
தில தத்தி னைய ழிப்ப
தெழு தத்த ரம லச்சொல்—லே றப்ர யாசம்
ஏவுச ரத்தைநி காக்கவே விழி
நீயுநி னைத்தெழு திக்கொள்வாய் வரி

பி—ம் : *மருகு—வாசனைப்பூண்டு, மகரவாழை
❄னிழலுக்கு ☐லேறப்ரயோகம்

யெழு திக்க டைது டிப்பு
மய லைத்த ருசி மிட்டும்
எழு தத்த ரம லச்சொல்—லேறப்ர யாசம்
மிஞ்சுபுக பூாவணம்வி ளைக்குமோ;

6. ஏலந றைக்குமி ழொக்கவே மணி
நாசிநி னைத்தெழு திக்கொள்வா யதில்
இரு தட்டி லுமு யிர்ப்பு
வரை யைத்தி னநி ❋னக்கும்
எழு தத்த ரம லச்சொல்—லேறப்ர யாசம்
ஊசலெ னத்தொழி லிட்டுநீ யிரு
காதைநி னைத்தெழு திக்கொள்வா யதில்
உடை மைப்ப ளப ளப்பு
❑மக ரக்கு ழைய சைப்பும்
எழு தத்த ரம லச்சொல்—லேறப்ர யாசம்
ஈரல்மு ருக்கல ரொக்கவே யிதழ்
நீயுநி னைத்தெழு திக்கொள்வா யதி
லெழு முக்ய விர கத்தில்
அமு தச்சி றுசி ரிப்பை
யெழு தத்த ரம லச்சொல்—லேறப்ர யாசம்
விண்டிசைக டான்◗மிற னுக்குமோ;

7. ஊறுந ரைக்கம லத்தைநேர் கரம்
நீயுநி னைத்தெழு திக்கொள்வாய் மன
துரு கச்சு ருள்கொ டுப்ய
துட னச்சு ருள்ம டிப்ப
தெழு தத்த ரம லச்சொல்—லேறப்ர யாசம்
மேருவை யொத்தத னத்தையே யிள
நீரென வைத்தெழு திக்கொள்வாய் மயல்
விர கத்தி னில்வெ துப்பு
மவ டத்து டத ணிப்பும்
எழு தத்த ரம லச்சொல்—லேறப்ர யாசம்

---

பி—ம் : ❋னைக்கும் ❑கரகக்கு. ◗மிடறுருக்குக்குமோ.

ஓதிய சித்ரவ யிற்றையே தளிர்
ஆலிலை யொத்தெழு திக்கொள்வாய் மயிர்
ஒழு குச்சி தவொ ழுக்கும்
அழு குற்றி டும டிப்பும்
எழு தத்த ரம லச்சொல்—லேறப்ர யாசம்
வஞ்சியிடை தானெனநெ ளிக்குமோ;

8. ஊரர வப்பட மொக்கவே யல்கு
லானதை யொத்தெழு திக்கொள்வாய் விர
லுகிர் தத்தி டம தத்து
விர கத்து ளிதெ றிப்ப
தெழு தத்த ரம லச்சொல்—லேறப்ர யாசம்
ஊருவை நற்கத லிக்குநே ரிணை
யாகவெ டுத்தெழு திக்கொள்வா யதில்
உப ரித்தொ ழின டத்தி
லசை வுற்றி டும்வி தத்தை
யெழு தத்த ரம லச்சொல்—லேறப்ர யாசம்
ஒலிடு கெச்சம மைத்துநீ யிரு
பாதம்வ குப்பேழு திக்கொள்வாய் தரி
சொலி பெற்றி டந டக்க
மயி லொப்ப னந டிக்கை
யெழு தத்த ரம லச்சொல்—லேறப்ர யாசம்
*வந்ததலை வாவெழுத முற்றுமோ.

### பழனித் துரை வண்ணம் முற்றிற்று.

பஞ்சவரன் டால்பெரிது பெற்றகார்,
பண்புசெறி பாடல்புனை கோற்றவேள்
அஞ்சுவகை நூலுமள விட்டகார்,
அந்தவரை யூர்குடுமி வெற்பினார்
மிஞ்சுபுக ழாவணவி ளைக்குமோ,
விண்டிசைக டாண்மிடற னுக்குமோ
வஞ்சியிடை தானெனநெ ளிக்குமோ
வந்ததலை வாவெழுத முற்றுமோ.

